...பர் 28 - நவம்பர் 3. 2007 | பக்கங்கள் - 28 | 20.00
REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி
THE SUDAROLI
வார மலர்



...மிழ்ச்செல்வனின்
...யிர் பறிப்பு!
...மாதானத்துக்கு
...லை வைப்பு..!



# தமிழ்ச்செல்வன் கடந்துவந்தவை















# Tomorrow's Leaders




## ஒன்றிணைந்து நாம் உலகை வெல்வோம்

நாளைய தலைவர்களுக்கு முடிசூட்டும், செலிங்கோ பிரணாம புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு விண்ணப்பதாரர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம். இச்சந்தர்ப்பம் திறமை மிக்க செலிங்கோ காப்புறுதிதாரர்களின் பிள்ளைகளுக்கானது. உங்கள் பிள்ளை கல்வி, விளையாட்டு, கலை மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் போன்ற துறைகளில் திறமையுடையவர்களாயின் இதற்கு விண்ணப்பிக்க அவர்கள் முழு தகுதி உடையவர்களாவார்கள். உங்கள் செலிங்கோ பிரணாம விண்ணப்பப்படிவங்களை அருகில் இருக்கும் செலிங்கோ லை.:.ப் கிளையில் அல்லது 011 2 461 461 என்ற இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் இன்றே பெற்றுக்கொள்ளலாம்.

2007 செலிங்கோ பிரணாம புலமைப்பரிசில் கீழ்வரும் பிரிவுகளில் வழங்கப்படவுள்ளது.

- ஆண்டு 5 - 2006 மற்றும் 2007 - ஒவ்வொன்றும் ரூ. 60,000/- பெறுமதியுடைய 50 புலமைப்பரிசில்கள்
- க.பொ.த (சாதாரண தரம்) - 2006 - ஒவ்வொன்றும் ரூ. 36,000/- பெறுமதியுடைய 25 புலமைப்பரிசில்கள்
- க.பொ.த (உயர் தரம்) - 2007 - ஒவ்வொன்றும் ரூ. 72,000/- பெறுமதியுடைய 25 புலமைப்பரிசில்கள்
  - ஒவ்வொன்றும் ரூ. 10,000/- பெறுமதியுடைய 75 புலமைப்பரிசில்கள்
- தேசிய திறமை விருதுகள் - 2006/2007 - ஒவ்வொன்றும் ரூ. 25,000/- பெறுமதியுடைய 10 புலமைப்பரிசில்கள்

நாளைய தலைவர்களுக்கு
செலிங்கோ
பிரணாம
புலமைப்பரிசில்

விண்ணப்பங்கள் 2007 நவம்பர் 30ம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**செலிங்கோ லை.:.ப்**

செலிங்கோ இன்சூரன்ஸ்

*சிறியதோ பெரியதோ எதையுமே காப்பது - செலிங்கோ*

இல. 134, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே: (011) 2 461 461 வெப்தளம்: www.ceylincolife.com

செலிங்கோ லை.:.ப்

# சசிகலாவின் குடும்பச் சொத்தாக மாறும் அ.தி.மு.க

அண்ணா தி.மு.க, எம்.ஜி.ஆர் கட்சி என்ற நிலை மறக்கப்பட்டு சசிகலா கட்சியாக மாறிவிடுமோ என்ற அச்சத்தை ஜெயலலிதாவின் அண்மைக்கால நடவடிக்கைகள் தொண்டர்களிடையே ஏற்படுத்தியுள்ளன. சசிகலாவின் அக்காள் மகன் சுதாகரனுக்கு வளர்ப்பு மகன் போர்வையில் கோடிகளை கொட்டி திருமணம் செய்வித்ததும் மற்றொரு அக்காள் மகன் தினகரன் கட்சிப் பதவிகளில் முன்னிலை பெற்றதும் பழங்கதை. தினகரன் கட்சி பொருளாளராகவும் நியமிக்கப்பட்டிருந்தார். அ.தி.மு.கவுக்கு நூறு வீதம் வெற்றி தரக்கூடிய பெரியகுளம் தொகுதியும் தினகரனுக்கு வழங்கப்பட்டு மிக இலகுவாக லோக்சபா எம்.பியாகவும் தெரிவானார். ஜெயா டி.வி இயக்குனரும் அவரே. எனினும் கடந்த லோக்சபா தேர்தலில் பெரியகுளத்தில் அவர் தோற்றது அவரது வீழ்ச்சியின் கால் கோளாயிற்று. தொடர்ந்து பொருளாளர் பதவியில் இருந்தும் தூக்கப்பட்டார். அம்மாவின் பரம விசுவாசியான பன்னீர் செல்வம் பொருளாளர் பதவிக்கு வந்தார். இவர் அம்மா முதல்வர் பதவியை வழக்கு காரணமாக துறக்க நேரிட்டபோது தற்காலிகமாக முதல்வராக இருந்து பின்னர் பத்திரமாக அம்மாவிடம் அதை ஒப்படைத்தவர். தினகரன் பொருளாளர் பதவியிலிருந்து இறக்கப்பட்டபோது சசிகலா குடும்ப ஆதிக்கம் ஒழிந்தது என்று உண்மையான கட்சித்தொண்டர்கள் அகமகிழ்ந்தனர். அந்தோ பரிதாபம் அவர்கள் மகிழ்ச்சி நீண்டகாலம் நீடிக்கவில்லை. சமீபத்தில் கட்சிப் பொறுப்புகளை மாவட்ட வாரியாக பிரித்து ஆறு நிர்வாகிகளிடம் வழங்கினார் அம்மா. ஆறுபேரில் ஐவர் சசிகலா குடும்பத்தினர் என்பது தான் நெருடலான விஷயம்.

சசிகலாவின் அக்காள் கணவர், அக்காள் மகளின் மாமனார், அண்ணன் மகன் என இந்த ஐவரும் நெருங்கிய உறவினர்களாவர். கட்சியின் மாவட்டச் செயலர்கள் பெயருக்கு இருக்க, இந்த ஆறு நிர்வாகிகள்தான் கட்சி நிர்வாகத்தை நடத்துகின்றனர். மாவட்ட செயலர்களை ஓரங்கட்டிவிட்டு மாவட்ட மட்ட நிர்வாகிகளையும் இவர்களே நியமிப்பதும் நடக்கிறது. மாவட்ட செயலாளர்கள் மனம் வெதும்பி நிற்கின்றனர். ஆக மீண்டும் குடும்ப ஆதிக்கம் கொடிகட்டிபறக்கிறது.

**எஸ்.வீரேந்திரஜித்**

இது கட்சிக்கு நல்ல பலன் தரவல்லது அல்ல என தொண்டர்கள் குமுறுகின்றனர். குறிப்பாக முன்னொருபோதும் இல்லாத வகையில் அ.தி.மு.கவின் இருப்பு கேள்விக் குறியாகிவரும் நேரம் இது. விஜயகாந்த்,



சரத்குமார் என ஆளுக்கு ஒருபுறமாக கட்சியின் வாக்கு வங்கியை கபளீகரம் செய்து வருகின்றனர்.

சினிமாக் கவர்ச்சியை வாக்குகளாக மாற்றும் வித்தை தமக்கும் தெரியும் என்பதை விஜயகாந்த் நிரூபித்து வருகிறார். வேறு வழியின்றி அவருடன் கூட்டணி சேரும் நிர்ப்பந்தத்தில் ஜெயலலிதா உள்ளார். விஜயகாந்த் ஒன்றில் காங்கிரஸ் அல்லது அம்மாவுடன் அணி சேர்வது நிச்சயமாகிவிட்டது. தேர்தல் ஒன்று அறிவிக்கப்படாததுதான் பாக்கி. அறிவிப்பு வந்ததும் கூட்டணியும் அமைந்துவிடும். அப்படி விஜயகாந்துடன் கூட்டணி சேராவிட்டால் அம்மாவுக்கு பெரும் ஆபத்து உண்டு. ஏற்கனவே கட்சி ஆட்சியை இழந்து எதிர்க்கட்சியாக தள்ளாடுகிறது. பதவி சுகம் இன்றி அம்மா பரிதவிக்கிறார். இந்த நிலையில் கட்சியை சசிகலா குடும்பத்திடம் தாரை வார்ப்பது பெரும் பாதிப்பை தரும் என்கின்றனர் நோக்கர்கள். ஒரு கட்சி எதிர்க்கட்சியாக இருந்து மீண்டும் ஆளுங்கட்சியாக வர பங்களிப்பு செய்பவர்கள் உண்மையான தொண்டர்களும் உண்மையான தலைவர்களுமே. அவர்களுக்கு இடங்கொடாது சசிகலா குடும்பத்துக்கு முன்னுரிமை கொடுப்பது எந்தப் பலனையும் தரப்போவதில்லை. கடந்தகாலங்களில் அம்மா விட்ட பெருந்தவறுகள் கொஞ்ச நஞ்சமல்ல. அவர் ஆட்சிக்கு மீண்டும் வந்திருக்கவே முடியாது. ஆனால், தி.மு.க. தலைவர் கலைஞர் விட்ட சில தவறுகளால் அம்மா மீண்டும் அரியணை ஏறினார். தனது தவறுகளை நன்குணர்ந்திருக்கும் கலைஞர் இந்த முறை மிக அவதானமாக நடந்து வருகிறார். எனவே முன்னைய தடவைகளில் போலன்றி இம்முறை ஜெயலலிதா மீண்டும் முதல்வராவது மிகக் கடினமானதொன்றே. அந்த சிரமமான பணியை முன்னெடுக்க உண்மையான

**பக்கத்து வீடு**

தொண்டர்களே தேவை. அவர்களை விட்டு துதிபாடிகளுக்கும் பணமுதலைகளுக்கும் சசிகலா குடும்பத்தின் இந்த நிர்வாகிகள் கட்சிப்பதவிகளை வாரி வழங்கி வருகின்றனர். அ.தி.மு.க.வின் எதிர்காலம் அப்படியாயின் கேள்விக்குறியாவது நிச்சயம்.

---

# கிழக்கில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களால் அரசு அச்சம்

கிழக்கில் படைத்தரப்பு வெற்றி கண்டுள்ளதாக கருதிக்கொண்டிருக்கும் அரசாங்கத்துக்கு, தற்போது அண்மைக் காலமாக கிழக்கில் அவ்வப்போது விடுதலைப்புலிகள் நடத்திவரும் தாக்குதல்கள் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதை தெளிவாகவே உணர முடிகிறது.

லெப். கேணல் திலீபன், கேணல் சங்கர் ஆகியோரின் நினைவுதின நிகழ்வுகள் 26.09.2007 புதன்கிழமை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் இடம் பெற்றபோது அங்கு கடற்புலிகளின் தளபதி சூசை உரையாற்றினார். உரையாற்றும்போது அவர் முக்கியமானசில விடயங்களையும் குறிப்பிட்டிருக்கின்றார்.

"எங்களுடைய இனத்தின் விடுதலைக்காக, இனத்தினுடைய சுபீட்சத்துக்காக 30 ஆண்டுகால போராட்ட வரலாற்றில் பல வெற்றிகளையும், திருப்புமுனைகளையும் தலைவர் ஏற்படுத்தியுள்ளார். எங்களுடைய பலத்தின் ஊடாகத்தான் எங்களுடைய இனத்தை தலை நிமிர வைத்திருக்கமுடியும். 1995 ஆம் ஆண்டு 6 இலட்சம் மக்கள் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரேயடியாக வெளியேற்றப்பட்டபோது உலகம் பேசாது இருந்தன. நாங்கள் யாழ்ப்பாணத்தை நோக்கி 2000 ஆம் ஆண்டு போனபோ்து இந்த உலகம் எல்லா இடங்களிலிருந்தும் குரல் கொடுத்தது. சிறிலங்கா அரசாங்கத்தின் பிரசாரங்கள் எல்லாவற்றுக்கும் நாங்கள் பதில் அளித்துக் கொண்டு இருப்போம் என்றால் நாளாந்தம் ஒரு மறுதலிப்பை விடுத்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், ஒன்றை மட்டும் மிகத் தெளிவாகவும், இறுக்கமாகவும் சொல்லுகிறோம். தலைவருடைய நாட்களினுள் எங்களுடைய இனத்தினுடைய விடுதலையை பேச்சு நடத்திப் பெறமுடியாது. இராணுவ நடவடிக்கை மூலம்தான் எங்களுடைய விடுதலையைப் பெறமுடியும்" எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தளபதி கேணல் சூசை உரையாற்றிய மறுநாள் திருகோணமலை- புல்மோட்டை கடற்பரப்பில் அரசின் கடற்படை அணிகளுக்கும், கடற்புலிகளின் அணிகளுக்கும் இடையில் கடும்சமர் இடம்பெற்றிருக்கின்றது. புலிகளின் தரப்பு தகவல்களின்படி திருகோணமலை - புல்மோட்டை கடற்பரப்பில் கடற்படையினரின் 17 டோறாப்படகுகளைக் கொண்ட



பெரும் அணிமீது கடற்புலிகள் நடத்திய தீவிரத் தாக்குதலில் கடற்படையினரின் இரு டோறாப் படகுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் மேலும் ஒரு டோறாப் படகுதேசமடைந்துள்ளது.

**மூதூர் கிழக்கான்**

கொக்கிளாய்- புல்மோட்டை கற்பரப்பில் 27.09.2007 வியாழக்கிழமை இரவு 10.30 மணிக்குத் தொடங்கிய இம்மோதல் வெள்ளிக்கிழமை 28.09.2007 அதிகாலை 3.20 மணி வரை நீடித்தது எனவும் இம்மோதல் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், புல்மோட்டை அரசபடைத்தளங்களில் இருந்து செறிவான ஷெல் தாக்குதலை கடற்பரப்பை நோக்கி தரைப்படையினர் நடத்தினர் எனவும் படையினரின் செறிவான தாக்குதல்களுக்கு மத்தியிலும் கடற்புலிகள் தீவிர எதிர்த் தாக்குதலை நடத்தி கடற்படையினரின் 17 டோறாப் படகுகளைக் கொண்ட அணியை புல்மோட்டை வரை பின் தள்ளிச்சென்றனர் எனவும், அங்கு நடத்தப்பட்ட தாக்குதலில் இரு டோறாப் படகுகள் முற்றாகச் சேதமடைந்தன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மீளப்பயன்படுத்த முடியாத அளவுக்குச் சேதமடைந்த இந்த டோறாப் படகுகளைக் கட்டியிழுத்துச் செல்வதற்கு திருகோணமலையிலிருந்து வந்த கடற்படையினரின் டோறோப் படகு அணியும் கடற்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகியது. இந்த டோறாப் படகு அணியை திருகோணமலைத் துறைமுகம் வரை கடற்புலிகள் விரட்டிச் சென்றனர் எனவும், இதன்போது திருகோணமலைத் துறைமுகம் அருகில் மேலும் ஒரு டோறாப் படகு சேதமாக்கப்பட்டது எனவும், இம்மோதலில் கடற்புலிகள் தரப்பில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர் எனவும் அறிவிக்கப்பட்டது. இத்தாக்குதலின் பின்னரும் திருகோணமலை புல்மோட்டை கடற்பரப்பில் மோதல்கள் இடம் பெற்று இருக்கின்றன என அறியமுடிகின்றது. தற்போது வடக்கில் எந்தக் களமுனையிலும் விடுதலைப் புலிகள் மிகுந்த உஷாராக அரச படையினரின் தாக்குதலை சிதறடித்து வருகின்ற நிலையில் கிழக்கில் புலிகளின் தாக்குதல் செயற்பாடுகள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன. புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த கஞ்சிகுடிச்சாறு நோக்கிய படை நடவடிக்கை இன்னமும் முற்றுப்பெற்றதாக தெரியவில்லை. ஆனால், பலமுறை புலிகளை முற்றாக விரட்டிவிட்டதான அறிவிப்பு வெளிவந்தது. தங்கவேலாயுதபுரம் வரை முன்னேறிய அதிரடிப் படையினர் பின்னர் ரூபஸ்குளத்திற்குப் பின் வாங்கியது எனவும் கருதப்படுகிறது. கடந்த மாதத்தில் கஞ்சிகுடிச்சாறு பக்மிட்டியாவ பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல்களில் 12 இற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டதாக தமிழீழ விடுதலைப்புலிகள் சொல்கின்றனர். ஆனால், சிலரது இழப்புகளையே அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

அம்பாறை- பக்மிட்டியாவ கொதுருகல பகுதியிலுள்ள கோவில் சந்தியில் 08.10.2007 திங்கட் கிழமை காலை 8.30 மணியளவில் மேற் கொள்ளப்பட்ட கிளேமோர் தாக்குதலில் விசேட அதிரடிப்படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளனர். இந்தநிலையில் மட்டக்களப்பில் கரடியனாறு, இலுப்பை யடிச்சேனை, ஆயித்தியமலைப் பகுதிகளில் படையினருக்கெதிரான தாக்குதல்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின் றன. அதைவிட புலிகளின் பிஸ்டல் குழுவினர் எனக் கருதப்படுவோரின் நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன. அத்துடன் திருகோணமலை - புல்மோட்டை கடற்பரப்பில் கடற்புலிகளின் செயற்பாடுகள், தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. மூதூர் பிரதேசத்திலும் புலிகளின் செயற்பாடுகள் அண்மைக்காலமாக மீண்டும் அதிகரித்து வருவதாக கருதப்படுகிறது. கிழக்கில் இருந்து முற்றாகவே

(27 ஆம் பக்கம் பார்க்க)

# சமஷ்டி: அந்த கட்டமைப்புக்கு பாலா இறங்கியமை ஏன்?

**த**னித் தமிழீழம் கேட்டுப் போராடும் தலைவர் பிரபாகரனுக்கு அதை விட்டுக்கொடுத்துக் கீழிறங்கி சமஷ்டித் தீர்வுக்கு வருவதற்கு எந்த உடன்பாடும் இருக்கவில்லை என்பதை முன்னைய அத்தியாயத்தில் தெளிவு படுத்தியிருந்தேன்.

மிதவாதக் கட்சியான தமிழரசுக் கட்சியால் ஐம்பதுகளில் முன்வைக்கப் பட்டு, எட்டப்படாமல் போய், அதன் காரணமாக அத்தலைவர்களையே நிராகரித்து, புதிய மாற்றுச் சக்தியாகவும், புதிய தலைமையாகவும் தமிழீழ விடு தலைப் புலிகள் வீறுகொண்டு எழுந்திருக்கையில் - தமிழர் தாயகத்தில் இவ்வளவு பேரழிவு களையும் போரழிவு களையும் சந்தித்த பின்னர் மீண்டும் 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற கதையாக சமஷ்டிக் கோரிக்கைக்குத் திரும்பிப் போவது தலைவர் பிரபாகரனின் போர்க்குணத்தையும்,விடுதலை வேட்கை யையும், சுதந்திர வேணவாவையும் கொச்சைப் படுத்தும் போக்கு என்பதும் புரிந்து கொள்ளத்தக்கதே.

இதனால் அவ்வாறான தீர்வு முயற்சிக்கு இணங்கிய விவகாரத்தில் தலைவர் பிரபா வுக்கு ஏற்பட்ட சீற்றமும் உணர்ந்து கொள்ளக்கூடியதே.

என்றாலும் இத்தகைய ஓர் இணக்கப் பாட்டுக்கு வரத் தாங்கள் ஏன் தள்ளப்பட்டார் கள் என்பதை பாலாவின் வார்த்தைகள் ஊடாகவே நீங்கள் பார்ப்பீர்களாயின் அதன் அர்த்த பரிமாணத்தையும் அதிலுள்ள நியா யங்களையும் புரிந்துகொள்வீர்கள்.

அதைத்தலைவர் பிரபாகரனும் புரிந்து கொண்டமையால்தான் - உணர்ந்து கொண்டமையினால் தான், சமஷ்டித்தீர்வு பற்றி ஆராய இணங்கிய பேச்சுக்குழுவை, பாலசிங்கத்தை, தலைவர் பிரபாகரன் பொறுத்துச் சகித்துக்கொண்டார்.

சமஷ்டி மட்டத்துக்கு இணங்கியதற்கான காரணத்தை இனி பாலாவின் வார்த்தை ஊடாகவே நாம் நோக்குவோம். 'சமஷ்டி வடிவங்களைஆய்வு செய்வது' என்ற தலைப்பில் அவர் இவ்வாறு கூறுகின்றார்.

உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் ஒரு சமஷ்டித் தீர்வை ஆராய்வதென மூன்றாம் கட்டப் பேச்சுகளின்போது இரு தரப்பினர் மத்தியிலும் இணக்கம் காணப்பட்டது. இந்த முடிவை ஒரு பெரிய திருப்பமாகவும், கொள்கை மாற்றமாகவும் சில ஊடகங்கள் சித்திரிக்க முயன்றன. விடுதலைப் புலிகள் இயக்கம் வெளியக சுயநிர்ணய உரிமையையும் பிரிவினையையும் கைவிட்டுவிட்டதாகவும், அரசியல் ஆய்வாளர்கள் மத்தியில் தவறாக எடைபோடப்பட்டது. 'ஒஸ்லோ பிரகடனம்' என முக்கியத்துவம் பெற்ற இச்சர்ச்சைக்குரிய விடயம் குறித்து எமது இயக்கத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்து வது அவசியமாகிறது.

முதலாவதாக நாம் தெளிவு படுத்த விரும்புவது என்னவென் றால், 'ஒஸ்லோ பிரகடனம்' என்ற தலைப்பில் ஒரு குறிப்பிட்ட பிரகடனம் எதுவும் இல்லை என்பதுதான். சமஷ்டி அரசமைப்பு வடிவங்களை ஆராய்ந்து பார்ப்பது என்ற முடிவு, ஒஸ்லோ பேச்சுக்களின் முடிவில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. இப்பதிவேட்டு அறிக்கையில் இருதரப்பு பேச்சுக்குழுத் தலைவர்களும் கைச்சாத்திட்டுள்ளனர். நோர்வே வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட பத்திரிகை அறிக்கையிலும் இத்தீர்மானம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாவதாக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மாவீரர் தின உரையில் அறிவித்த கொள்கைப்பிரகடனத்துக்கு இசைவாகவே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. உள்ளக, வெளியக அம்சங்களைக் கொண்ட சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் கட்டமைப்பு வரம்புக்கு உட்பட்டதாகவே பிரபாகரன் தனது சொற்பதங்களையும் கருத்துருவங்களையும் கையாள்வதுண்டு.

ஒரு தனித்துவமான மக்கள் சமுதாயம் என்ற ரீதியில், தமிழ் மக்கள் உள்ளக, வெளியக அம்சங்களைக் கொண்ட சுயநிர்ணய உரிமைக்கு உரித்தானவர்கள். உள்ளக சுயநிர்ணய உரிமைகளின் அடிப்படையில், தமிழ்மக்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய பிரதேச சுயாட்சிக்கு உரித்தானவர்கள் என்று தெளிவுபடக் கூறியிருக்கிறார் பிரபாகரன். 'உள்ளக சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில், எமது தாயக நிலத்தில், எமது மக்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய பூரண சுயாட்சி அதிகாரத்துடன் ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டால் நாம் அத்திட்டத்தை சாதகமாகப் பரிசீலனை செய்வோம்' - என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார் பிரபாகரன். ஆனால் அதேவேளை, 'எமது மக்களுக்கு உரித்தான உள்ளக சுயநிர்ணயம் மறுக்கப்பட்டு, பிரதேச சுயாட்சி உரிமை நிராகரிக்கப்பட்டால் நாம் பிரிந்து சென்று தனியரசு அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை' - என்றும் அவர் உறுதிபடச் சொல்கிறார். இதிலிருந்து ஒருவிடயம் தெட்டத் தெளிவாகிறது. அதாவது பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் வெளியக சுயநிர்ணய உரிமையை பிரபாகரன் தனது கடைசியான, இறுதித் தீர்வாகக்



கொண்டிருக்கிறார் என்பது வெளிப்படை. இதிலிருந்து நாம் ஒன்றைத் தெளிவறப் புரிந்து கொள்ளவேண்டும். அது என்னவென்றால் புலிகளின் தலைவர் பிரபாகரன், சுயநிர்ணஉரிமைக் கோட்பாட்டின் உள்ளகம், வெளியகம் என்ற

தரப்பினர்களுக்கும் ஆலோசனை வழங்குவதற்காக கனேடியக் கூட்டாட்சி மன்றத்தைச் சேர்ந்த நிபுணர்கள் குழுவொன்றும் வந்திருந்தது. இவர்களில் முன்னாள் ஒன்ராறியோப் பிரதமர் பொப் ரேய், ரொறன்ரோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் டேவிற் கமரோன், மன்ற நிர்வாகிகளில் ஒருவரான கார்ள் நரன்பேர்க் ஆகியோர் அடங்குவர். இந்த நிபுணர்களுடன் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் இரு சந்திப்புகளை நிகழத்தினார் கள். தலைவர் பிரபாகரனின் மாவீரர்தின கொள்கைப் பிரகடனமும், குறிப்பாக உள் ளக சுயநிர்ணய உரிமைக் கோட்பாடும் விவாதத்தின் மையக் கருத்துகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தன்னாட்சி அதிகாரங்களைக் கொண்ட பிரதேச சுயாட்சி வழங்கப்பட்டால் அதனைப் பரிசீலனை செய்யத் தயார் எனப் பிரபாகரன் கூறியிருக்கிறார் என மாவீரர்தின உரையிலிருந்து சம்பந்தப்பட்ட பந்திகளை வாசித்து நான் விளக்கமளித்தேன். தலைவரது நிலைப்பாட்டை வரவேற்றுப் பேசிய பேராசிரியர் டேவிற் கமரோன், ஆட்சியுரிமை மறுக்கப்பட்டு, ஒடுக்குமுறைக்கு ஆளாகி நிற்கும் மக்கள் இனம் என்ற ரீதியில், தமிழ் மக்கள் உள்ளக சுயநிர்ணய உரிமைக்கு உரித்தானவர்கள் என்றும், அவர்களுக்குத் தன்னாட்சி உரிமைகோரும் தகைமை உண்டு என்றும் வாதித்தார்.

பேராசிரியர் கமரோன் மேலும் பேசுகை

இயங்கிவரும் ஆட்சி அமைப்புகளைப் பிரதிபலித்துக் காட்டுவனவாக உங்களது கருத்துக்கள் அமையவேண்டும். அப்படி யென்றால்தான் உங்களது அமைப்பின் கொள்கைகளும் கோட்பாடுகளும் மற்றவர் களுக்குத் தெளிவாகப் புலனாவதுடன் சர்வதேச அங்கீகாரத்தையும் பெறும்' - என் றார் பொப்ரேய்.

'பிரதேச சுயாட்சி' என நாம் பாவிக்கும் சொற்பதம் சமஷ்டி வடிவிலான ஆட்சிமுறைக்கு இசைவானதாக இருக்கும் என்று கனேடிய கூட்டாட்சி மன்ற நிபுணர்கள் எமக்கு விளக்கம் தந்தார்கள். பிரதேச மட்டத்திலும், மத்தியிலும், சுயாட்சி யும் பகிர் வாட்சியும் இணையும் இருபடி நிலை அரசாட்சிகளைக் கொண்டதாக சமஷ்டி ஆட்சி முறை அமையும் என்றும் அவர்கள் மேலும் தெளிவுபடுத்தினார்கள். உலகில் நிதர்சன வடிவம் எடுத்துள்ள மெய்உண்மைகளை சிறந்தமுறையில் சித்திரித்துக்காட்டும் கருத்துருவங்களைக் கையாள்வதன் அவசியத்தை ஏற்றுக்கொண்ட நான், சமஷ்டி ஆட்சி முறை பற்றி, சிங்கள அரசியல்வாதிகள் மிகவும் குளறுபடியான கருத்துக்களைக் கொண்டிருக் கிறார்கள் எனக் கூறினேன். மாநிலங்களுக்கு இறையாண்மை அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதற்குப் பதிலாக, அதிகாரப் பரவலாக்கம் பற்றியே அவர்கள் சிந்திக்கிறார்கள் எனச் சுட்டிக்காட்டினேன். சமஷ்டி ஆட்சிமுறையில் அதிகாரப் பரவலாக்கம் *(Devolution of Power)* என்ற பதத்தைப் பாவிப்பது தவறு என்பதை அவர்கள் ஒத்துக்கொண்டனர். உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் 'பிரதேச சுயாட்சி' என்பதற்குப் பதிலாகக், 'சமஷ்டிச் சுயாட்சி' என்ற பதத்தைப் பாவிப்பது உகந்தது அல்லவா எனக் கனேடிய நிபுணர்கள் வினவினார்கள். இதுபற்றி ஓர் உறுதியான முடிவு எடுப்பதற்கு முன்னர், தற்போது உலகத்திலுள்ள பல ரகமான சமஷ்டி ஆட்சி வடிவங்களை ஆழமாக ஆய்வு செய்துபார்த்து, எமது பிரத்தியேகச் சூழ்நிலைக்குப் பொருத்தமான ஆட்சி முறையை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும் என நான் விளக்கிக்கூறினேன். கனேடிய சுயாட்சி மன்ற நிபுணர்களுடன் நிகழ்த்திய கலந்துரையாடல்களின் அடிப்படையில் தான் பின்பு நானும் பேராசிரியர் பீரிஸுமாகச் சேர்ந்து கீழ்க்கண்ட தீர்மானத்தை வரைந்தோம்.

*'விடுதலைப் புலிகளின் தலைமை தெரிவித்த ஒரு யோசனைக்கு இசை வாக, உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில், தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகத் தில், ஐக்கியமான இலங்கைக் குள், சமஷ்டி ஆட்சிமுறை தழுவிய தீர்வொன்றை ஆராய்ந்து பார்ப்பதற்கு இருதரப்பிலும் இணக்கம் காணப்பட்டது'.*

- இந்த வரிகளை கூர்ந்து கவனிக்கும் இடத்து உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப் படையில், சமஷ்டி சுயாட்சி வடிவம் தழுவிய தீர்வொன்றை ஆராய்ந்து பார்ப்பதற்கே முடிவு எடுக்கப்பட்டது என்பது நன்கு புலனாகும். இதனை மேலோட்டமாகப் பார்த்த அரசியல் வாதிகளும் ஆய்வாளர் களும், விடுதலைப் புலிகள் இயக்கம் ஏதோ சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டைக் கைவிட்டு, சமஷ்டிக்குள் சறுக்கி விழுந்து விட்டதாக தவறான வியாக்கியானங்களைக் கொடுக்க முனைந்த னர். தற்கால அரசியல் அறிவுலகிலும் சர்வதேச சட்டங்களிலும், சுயநிர்ணய உரிமையின் உள்ள, வெளிய அம்சங்கள் பற்றிய விவாதங்கள், தீர்மானங்கள் குறித்து ஆழமான பார்வையில்லாத காரணத்தால் இவர்களிடமிருந்து இத்தகைய தவறான ஆய்வு விமர்சனங்கள் எழுந்தன.

- இப்படி விளக்குகின்றார் பாலா.

அவரது இந்த விளக்கம், வியாக்கியானத் துக்குள் புதைத்துகிடக்கும் அம்சங்களை அடுத்த வாரம் விரிவாக அலசுவோமா?

(தொடரும்)

## ஒரு பத்திரிகையாளனின் பட்டறிவுத் தொடர் - V

இரு அம்சங்களையும் சர்வதேச சட்டங் களுக்கு இசைவாக நுட்பமாகக் கையாள் கிறார் என்பதுதான். பிரபாகரனின் இந்த நிலைப்பாட்டை பத்திரிகையாளர் மாநாடுகளிலும் சொற்பொழிவுகளிலும் தெளிவாக விளக்கியிருக்கிறேன். சுயநிர்ணய உரிமை பற்றிய எமது நிலைப் பாடு எவ்விதம் ஐ.நா பிரகடனங்களுக்கும் சர்வதேச சட்டங்களுக்கும் இசைவான முறையில் அமைந்துள்ளது என்பதை

- வித்தி -

ஆழமாக அலசுவதற்கு முன்பாக, சமஷ்டி அரசமைப்பின் அடிப்படையில் ஒரு தீர்வை ஆராய்ந்து பார்ப்பதற்கு நாம் எதற்காக இணங்கினோம் என்ற பின்னணியையும் இங்கு சுருக்கமாகப் பார்ப்போம்.

ஒஸ்லோவில் நிகழ்ந்த மூன்றாம் கட்டச் சுற்றுப்பேச்சுக்களின்போது, இரு

யில் தன்னாட்சி, பிரதேச சுயாட்சி *(Self-Government, Regional Autonomy)* போன்ற கருத்துருவங்கள் எமது கொள்கை விளக்கப் பிரகடனத்தில் செம்மையாக வரையறுக்கப்படாததால், அவை தெளி வற்றவையாக இருக்கின்றன எனக் கூறி னார். பேராசிரியர் கமரோனின் கருத்தை ஆதரித்துப் பேசிய பொப் ரேய், நவ உலகின் மெய்யுண்மைகளை தெளிவா கத் துலக்கிக் காட்டும் கருத்துருவங்களையும், கோட் பாடுகளை யும் விடுதலைப் புலிகள் இயக் கம் உபயோகிப்பது அவசியம் என்றார். எமது கோரிக்கைகளையும் அரசியல் இலட் சியங்களையும் உலகத் தாருக்கு விளங்கப் படுத்தும்போது, தெளிவாக வரையறுக் கப்படாத, பூடகமான சொற்பதங்களைப் பாவிப்பதைத் தவிர்ப்பது சாலச்சிறந்தது என்றார்.

'சமகால உலகில் நடைமுறையில்

சுடர் ஒளி

ஒக்.28 - நவ.03. 2007

85, ஜெயந்த மல்லிமாரச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன்: 0114734401—6
பாக்ஸ் : 011 4734404
E-mail: editorial@sudaroli.com

## அநுராதபுரத் தாக்குதலும் அரச நெருக்கடியும்

அநுராதபுரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் தென்னிலங்கையில் அதிர்வலைகளை ஏற் படுத்தி இருக்கின்றது. விமானப் படைத்தளம் மீதான இத்தாக்குதலில் அரசாங்கம் பலகோடி டொலர்கள் பெறுமதியான விமானங்களை இழந்திருப்பதே இதற்குக் காரணம்.

2001ஆம் ஆண்டு கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீதும், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மீதும் புலிகள் நடத்திய தாக்குதலுக்குப் பின்பு விமானத் தளம் ஒன்றின் மீது புலிகளினால் நடத்தப்பட்ட - பேரழிவு ஏற்படுத்திய-பெரும் தாக்குதல் அநுராதபுரம் விமானப்படைத் தளம் மீதான தாக்குதல் ஆகும். அதுவும் தரைவழியாகவும் வான் வழியாகவும் இரு முனைத் தாக்குதல்கள் முதல் தடைவையாக நடத்தப் பட்டுள்ளன.

இந்த சம்பவம் அரசுக்கு மீண்டும் ஒரு தடவை இடித்துச் சொல்லும் செய்தி, விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்து, தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வு ஒன்றை செயற்படுத்துங்கள் என்பதுதான்.

கிழக்கு மாகாணத்தில் தமது கட்டுப் பாட்டில் வைத்திருந்த பிரதேசங்களை புலிகள் இழந்த பின்பு அவர்கள் பலவீனம் அடைந்து விட்டார்கள் என்றே தென்னிலங்கையில் பிரசாரம் செய்யப்பட்டு வந்தது.

ஸ்ரீலங்கா படைத்தரப்பு எத்தகைய தாக்குதல்களையும் எதிர்கொள்ளக் கூடியதாக பலப்படுத்தப்பட்டுள்ளது என்று ஜனாதிபதியின் சகோதரர் பசில் ராஜபக்ஷ சமீபத்தில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

கடந்த 25 வருடகால போரியல் அனுபவங்கள் மூலம் பெற்ற பாடத்தை வைத்து ஸ்ரீலங்கா படையினர் தமது பாதுகாப்பு ஏற்பாடுகளையும் வியூகங்களையும் தற்பொழுது மேற்கொண்டு வருகின்றனர். இவற்றை எல்லாம் முறியடித்தே அநுராதபுரம் விமானப் படைத் தளம் மீது அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டு பேரழிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆகவே, கடந்தகால அனுபவங்களைக் கொண்டு அரசு செல்லும் பாதை வெற்றி காண முடியாத பாதை என்பது நன்கு புலனாகிறது. இதனைத்தான் பயங்கரவாத தடுப்பு நிபுணரும் இன மோதல்களுக்கான ஐரோப்பிய நிலையத்தின் முன்னாள் பணிப்பாளருமான கலாநிதி ஜெரால்ட் சாலியண்ட் தெரிவித்திருக்கிறார். புலிகளை அரசினால் அழிக்க முடியாது என்ற கொழும்பில் நடைபெற்ற பயங்கரவாத ஒழிப்பு மாநாட்டில் அவர் கூறியிருக்கிறார். அது மட்டும் அல்ல பேச்சுவார்த்தை மூலம் இலங்கையின் சிறுபான்மைத் தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரியிருக்கிறார். இவை எல்லாம் ஒன்றை துலாம்பரமாகத் தெரிவிக்கின்றன. யுத்தம் மூலம் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதுதான்.

அரசாங்கம் தற்பொழுது இரு முக்கிய பிரச்சினைகளை எதிர்நோக்கி உள்ளது. ஒன்று ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தை இலங்கையில் நிறுவ வேண்டிய நெருக்குதலுக்கு அரசு உள்ளாகி இருக்கிறது. இந்த அலுவலகம் இலங்கையில் நிறுவப்பட வேண்டும் என்று புஷ் நிர்வாகம் தெளிவாகக் கூறி விட்டது. இலங்கை அரசு மறுப்புத் தெரிவித்து விட்டது.

ஆனால், அநுராதபுரம் தாக்குதல் புஷ் நிர்வாகத்தின் காலடியில் விழும் நிலைமையை இலங்கை அரசுக்கு ஏற்படுத்திவிட் டது. அநுராதபுர தாக்குதலில் இழந்த விமானங்களை ஈடு செய்வதற்காக அரசாங்கம் உடனடியாக பீச் கிராப்ட் (Beach Craft) மற்றும் இஸ்ரேல் தயாரிப்பு UAV தாக்குதல் விமானங்களை அவசரமாக கொள்வனவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. அமெரிக்க தொழில் நுட்பத்துடன் கூடிய இந்த விமானங்களை இலங்கை கொள்வனவு செய்வதற்கு அமெரிக்க நாடாளுமன்றமான காங்கிரஸின் அங்கீகாரம் தேவை. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் விடயத்தில் அமெரிக்காவுடன் முரண்பட்டு நிற்கும் இலங்கை அரசு இனி என்ன செய்யப் போகிறது என்பதே கேள்வி.

அரசாங்கம் அநுராதபுரத் தாக்குதல் போன்ற அதிரடித் தாக்குதல்களை வரப் போகும் நாட்களிலும் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கும் அதே சமயம், புதிய விமானக் கொள்வனவில் நெருக்கடிகளையும் எதிர்நோக்கி உள்ளது.

# வக்கிரமடைந்திருக்கும் பௌத்த சிங்கள பேரினவாதம்

கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட 'எல்லாளன்' நடவடிக்கை புதிய பல செய்திகளை வெளிப்படுத்துகிறது.

யாலயைத் தொடர்ந்து தென்னிலங்கையில் விரியும் போர்க்களங்கள், இறுதிப் போருக்கான ஆரம்ப நிகழ்வுகளை புலப்படுத்துகின்றன.



அனுராதபுர விமானப்படைத்தளத்தினை முற்றாக அழித்த விசேட கரும்புலி அணியினர், காவியமாகிவிட்டனர்.

தோல்வியைத் தழுவிய அரச படையினர், வீரச்சாவடைந்த கரும்புலிகளை நிர்வாணமாக்கி, பௌத்த சிங்கள பேரினவாதத்தின் வக்கிரமான உணர்வுகளை மானுடமே வெட்கித் தலைகுனியுமளவுக்கு வெளிச்சமாக்கியுள்ளனர்.

சர்வதேச போர்முறை விதிகளெல்லாம் ஒருபுறமிருக்கட்டும், நேருக்கு நேர் மோதிய எதிரிகளின் இறந்த உடலங்களுக்கு பௌத்த தர்மத்தின் அடிப்படையிலாவது சிறிது மரியாதை செலுத்தியிருக்கலாம்.

மணலாற்றில் வீழ்த்தப்பட்ட புலிகளை நிர்வாணமாக்கி படம் காட்டினார்கள். அண்மையில் கிளாலியிலும் இதையே செய்தார்கள்.

ஆயினும், இவ்வகையான கீழ்த்தரமான, குரூர, வக்கிரமிக்க வெளிப்பாடுகள் எதனையும் விடுதலைப் புலிகள் நிகழ்த்தவில்லை.

கைப்பற்றப்பட்ட இராணுவ உடலங்களை உரிய மரியாதையுடன், பொதிகளில் அடைத்து, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக தென்னிலங்கைக்கு அனுப்பிய பெருமைமிக்க போர் தர்மம் புலிகளுக்கு உண்டு.



குடாநாட்டு இராணுவத்தினருக்கும் அதே இறுதி மரியாதை வழங்கப்பட வேண்டுமென்பதே மக்களின் விருப்பம்.

இறந்த கரும்புலிகளின் உடலங்களை வன்னிக்கு அனுப்பக்கூட அரசு விரும்பவில்லை.

வடக்கு - கிழக்கை நீதிமன்றம் பிரித்தது போன்று அநுராதபுர சுடுகாட்டில் உடல்களை புதைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டதாக திசை திருப்பல் கதைகளை அரசு அவிழ்க்கிறது.

புலிகளின் உடல்களை நிர்வாணமாக்கவில்லை எனக் கூறும் அரச பேச்சாளர், சிங்கள உடகங்களில் வெளியிடப் பட்ட புகைப்படங்களுக்கு என்ன பதிலைக் கூறமுடியும்.

இராணுவத்தின் அனுமதியையும் மீறி, புலிகளா அங்கு சென்று படம் பிடித்தார்கள்?

சோற்றில் பூசணிக்காயை மறைக்கும் வித்தைகள் தெரிந்தவரே இன்று ஆட்சி புரிகின்றனர்.

இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் நாசிச ஹிட்லரால் நச்சுப் புகைக்கூட்டில் கொல்லப்பட்ட யூதர்களின் உடல்களை நிர்வாணமாக்கி குவியலாகக் காட்சிப் பொருளாக்கப்பட்டது நினைவுக்கு வருகின்றது.

சிங்களத்தின் குரூர இரசனையும், போர் வெறியும், அப்பாவி சிங்களவர்களின் வாழ்வினை அழிக்கப்போகின்றதென்பது மிகவும் சாசுவதமான உண்மை.

மானுடத்தின் அடிப்படை விழுமியப் பண்புகளை இழந்திருக்கும் சிங்கள ஆட்சியாளர்கள், தமிழின, அழிப்புக்காக எதனையும் செய்வார்களென்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

சர்வதேச மனித உரிமைக் காவலர்கள் எவரும் இந்த அசிங்கமான நிகழ்வுகுறித்து வாய்திறக்க மாட்டார்கள்.

லூயிஸ் ஆபர் முன்னிலையில் வாய்விட்டு கதறி அழுது நியாயம் கேட்டாலும், ஒரு துரும்பும் அசையாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

வன்னிமீது மனிதாபிமான போர் நடவடிக்கையைத் தொடரப் போவதாக அறிவித்துள்ளார் கோத்தபாய.

முதலில், இறந்த மனிதனின் உடலை நிர்வாணமாக்கி காட்சிப்பொருளாக்கக் கூடாதென்கிற அடிப்படை மனிதாபிமானத்தை அவர் புரிந்து கொள்ள வேண்டும்.

தமக்கு விடுதலை பெற்றுத் தரும்படி கோத்தபாயவிடமோ அல்லது டக்ளஸ் தேவானந்தாவிடமோ தமிழ் மக்கள் கோரவில்லை.

தமது விடுதலையை எவர் பெற்றுத் தருவாரென்பதை கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அவர்கள் தெளிவாகக் கூறிவிட்டார்கள்.

ஏக தலைமை யாரென்பது குறித்து புள்ளடியும் போட்டுவிட்டார்கள்.

அனுராதபுர 'எல்லாளன்' தாக்குதலின் பின்னர் அரசு கூறும் கருத்துக்களையும் சிறிது அவதானிக்க வேண்டும்.

அதாவது கிழக்கை கைப்பற்றிய வெற்றியினை உரத்துக் கூற வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

எதனை இழந்தாலும், இன்னமும் கிழக்கு தம்வசம் இருப்பதாக சிங்கள மக்களுக்குக் கூறுவதே அரசின் பரப்புரை உத்தி.

எத்தனை அறை விழுந்தாலும், சிங்களத்தின் போர் முரசு அதிர்வு குறையவில்லை.

ஆட்சி நாற்காலி அசையாமலிருக்க, போர் முழுக்கமிடுவது மிகவும் அத்தியாவசியமானது.

**சி.இதயச்சந்திரன்**

விளக்கேற்று முன் ஏற்படும் பின்னடைவு அதிர்வுகளை உள்வாங்கி, சிங்கள மக்களின் மகாவம்ச மனநிலையை எவ்வாறு தக்க வைப்பதென்பதே அரசுக்கு முன்னால் இருக்கும் பாரிய பிரச்சினை.

நான்கு என்று மூடிமறைத்தால் எட்டு என்று உளறுகிறது ரணில் கட்சி.

எட்டு எனப் பிரதமர் சமரசம் செய்தால், பதினெட்டு என்கிறார் 'மலர் வளையம்' புகழ் தென்னிலங்கை படைத்துறை ஆய்வாளர்.

இழந்தது 10 மில்லியன் என்று குறைத்துக் கூறினால், 60 மில்லியனென்று சர்வதேசத்துக்கு எட்டும் வகையில் நாடாளுமன்றில் உளறிக்கொட்டுகின்றனர் எதிரணியினர்.

அனுராதபுரத்தில் இடி விழுந்தால், இராமேஸ்வரத்தில் உஷார் நிலையில் இருப்பதாக பம்மாத்துக் காட்டுகிறது இந்தியா.

சுற்றிவர இருக்கும் நபர்களெல்லாம், தலை சுற்றக் கூடிய கேள்விகளையும், பாதுகாப்பு நாடகங்களையும் போடுவதையிட்டு விரக்தி நிலையடைந்துள்ளது அரசு.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமை கண்காணிப்பாளர்களை உள்நுழைய அனுமதிக்கும்படி மூன்று தடவைக்கு மேலாக அமெரிக்கா கேட்டுள்ளது.

சகல அழுத்தங்களும், நடிப்புகளும் அரசின் மனோநிலையை வெகுவாகப் பாதிக்கின்றன.

கிழக்கு தன் சட்டைப் பைக்குள் இருப்பதாக எத்தனை தடவை கூறி, இழப்புக்களைத் திசை திரும்புவது என்கிற கேள்வியே மகிந்தரின் மனசைக்குடைகிறது.

வெந்த புண்ணில் வேல் சொருகும் ரணில் குழுவினர், புலிகளின் தென்னிலங்கைப் படைத்துறைப் பேச்சாளர் போன்று தொழிற் படுவதாகவும் குசும்புச் செய்தி ஒன்று உலாவருகிறது.

மூன்று விமானங்களைக் காணவில்லையென்று புதிய குண்டொன்றை அரசின் தலையில் போட்டுள்ளனர்.

பல மணிநேரமாக அனுராதபுர வான் படைத்தளத்தினை தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருந்த விசேட கரும்புலி அணியினர், மூவூடகப்படைப்பிரிவாவென்கிற கேள்வியும் எழுகிறது.

அதாவது, தரையிலும், கடலிலும், வானிலும் செயற்படக்கூடய புதிய படையணி உருவாக்கம் விடுதலைப் புலிகளின் படைக் கட்டுமானத்தில் அணி சேர்ந்தது போலவே, காணாமல் போனதாகக் கூறப்படும் விமானங்கள் குறித்த செய்தி புதிய ஊகங்களை வழங்குகிறது.

விடுதலைப் புலிகளின் இருவழி நகர்வுக்கான பரீட்சார்த்தக்களம் பூரண வெற்றியை அளிந்த நிலையில், புதிய களமும் இலக்கும் நிச்சயம் மாறும்.

இதுவரை விடுதலைப் புலிகளை குறைத்து மதிப்பிட்ட இந்திய ஆய்வாளர் பி. இராமன், தனது பார்வையை அடியோடு மாற்றிவிட்டார்.

துணிவும், உறுதியும், இலட்சியமும் ஒன்றுசேர உருவான விடுதலைச் சக்திக்கு முன்னால் கிழக்குக்கூட ஒரு பொருட்டல்ல என்கிற செய்தி உணரப்படுவதாக அவர் கூறுகிறார்.

அதாவது கிழக்கு ஆக்கிரமிப்பு மகிந்தவுக்கு பெரு அரசியல் வெற்றியாக இருந்தாலும், புலிகளைப் பொறுத்தவரை அவை ஒரு தந்திரோபாயப் பின்னகர்வே.

புலிகளின் விடுதலை வேட்கையும், போராடும் உளவுரணும் சிதையவில்லை என்பதை இராமன் தெளிவாக உணர்கிறார்.

ஆனாலும், நிர்வாணப்படுத்தப்பட்ட புலி வீரர்களின் தோழர்களும், பெற்றோர்களும், அவர்களோடு வாழ்ந்த தாயக மக்களும், அரசின் இவ்வக்கிரச் செயலை மறக்கவும் மாட்டார்கள். மன்னிக்கவும் மாட்டார்கள்.

ஏனெனில் விடுதலை பெறவேண்டுமென்கிற அதிகரித்த உளவுரணையும் எதிரியே தீர்மானிக்கின்றான்.

# சினிமா ஸ்டைலில் நிகழ்ந்த அதிரடித் தாக்குதல்









விடுதலைப் புலிகளின் அனுராதபுர வான்படைத்தள தாக்குதல் எனக்கு இரண்டு பழைய சம்பவங்களை நினைவுக்குக் கொண்டுவந்தன.

1957 இல் பிரபல நாவலாசிரியர் அலிஸ்ரோர் மக்ளீன், இரண்டாம் உலக மகா யுத்தத்தை பின்புலமாக வைத்து உண்மையில் நடந்த ஒரு சரித்திர சம்பவத்தை புனைகதையாக வரைந்தார். அது 1961 இல் பிரபல நடிகர்கள் கிரிகரிபெக், டேவின் நிவியன், அன்தனி குவின் நடித்த GUNS OF NAVARONE என்ற திரைப்படமாக வந்து பெரும் வெற்றியைக் கொண்டாடியது. கடலோர கிரேக்க மலைப்பகுதியில் ஜெர்மனியரால் சிறைப்பட்டுக் கிடந்த 2000 பிரித்தானிய வீரர்களை காப்பாற்றச் செல்லவிருந்த பிரிட்டிஷ் படைக்கு நவ்ரோன் என்ற தீவிலுள்ள மலையில் நான்கு பெரிய பீரங்கிகள் அச்சுறுத்தலாக விளங்கின. கிரிகரிபெக் தலைமையிலான ஒரு சிறு குழு கடல்மூலமாக நவ்ரோன் சென்று சாமர்த்தியமாக அந்தப் பீரங்கிகளை அழித்து, பிரிட்டிஷ் படை செல்வதற்கு உதவியளித்தமை பரபரப்பான திகில்மிக்க திரைப்படமாக உருவாக்கப்பட்டிருந்தது.

அதுபோல் 1976 ஆம் ஆண்டில் தீவிரவாதிகள் ஒரு பிரஞ்சு விமானத்தை 300 பயணிகளுடன் கடத்தி - அந்தநேரத்தில் கொடுங்கோல் ஆட்சி செலுத்திவந்த உகண்டாத் தலைவர் இடிஅமீன் அவர்க ளின் நாட்டில் உள்ள என்டபே (ENTEBE) என்ற விமான நிலையத்தில் பணயமாக வைத்திருந்தனர். ஆரம்பத்தில் சகலரையும் சிறைவைத்திருந்த இந்த தீவிரவாதிகள் இஸ்ரேல் நாட்டவரையும் யூத மதத்தினரையும் தவிர மற்றவர்களை விடுதலை செய்துவிட்டு இஸ்ரேலோடு பேரம் பேசிக் கொண்டிருந்தனர். தீவிரவாதிகளோடு பேரம் பேசிப் பயனில்லை என்று எண்ணிய இஸ்ரேல், இரவோடு இரவாக அதிரடிப் படை ஒன்றை என்ரபே விமான நிலையத்தில் இறக்கி 30 நிமிட நேரத்தில் தீவிரவாதிகள் அனைவரையும்30உகண்டா வீரர்களையும் கொன்று பணயக் கைதிகள் அனைவரையும் மீட்டு இஸ்ரேலுக்கு கொண்டு சென்றனர். அதிரடிப் படையினரில் ஒருத்தர் மாத்திரம் மரணமானார்.

இந்த இரு சம்பவங்களின் பாதிப்பு அநுராதபுர வான் படைத் தளத்தில் நடந்த தாக்குதலிலும் இருந்தது.

புலிகளின் விமானம் அனுராதபுர வான் தளத்தில் குண்டுகள் பொழிவது என்பது திட்டமிடப்பட்டது. ஆனால், சாதாரண இந்த விமானங்கள் குண்டுபொழிய வரும்போது விமானத்தள ராடர்களின் திரையில் தென்படும் சாத்தியக் கூறுகள் உள்ளன. அதுபோல் ராடர் மூலம் புலிகளின் விமானங்கள் வரவை அறிந்து கொண்டால் படையினர் எதிர்கொள்ள தயாராகி விடுவர் தளத்தில் உள்ள வானூர்தி எதிர்ப்பு பீரங்கி கள் புலிகளின் விமானங்களை குறிவைக்கத் தயாராகிவிடும். விமானத்தளத்திலுள்ள ஓடு பாதையில் நிற்கும் பெல் உலங்குவானூர்திகள், வரும் புலிகளின் விமானத்தை நடுவான் பரப்பில் சந்தித்து தாக்கியழிக்க முற்படும் அல்லது புலிகளின் விமானம் திரும்பிச்செல்லும் போது துரத்திச்சென்று அழிக்க முற்படும். இப்படியான சாத்தியக் கூறுகளை புலிகள் எண்ணிப் பார்த்து திட்டமிட்டிருக்கின்றார்கள்.நவ்ரோன் பீரங்கிகளை அழித்ததுபோல் முன்னே ஒரு கரும்புலி அணி விமானத்தளத்திற்குள் அதிரடியாக ஊடுருவி விமான எதிர்ப்பு பீரங்கிகளையும் ராடர் சாதனங்களையும் அழிப்ப தென்று திட்டமிட்டிருக்கிறார்கள். விமானத் தளம் மீதான தாக்குத லுக்கு மூன்று பெண் கரும் புலிகள் அடங்கிய 21 கரும்புலிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள்.

உலகிலேயே ஒருமனிதன் எப்போது பிறக்கவேண்டும், எப்போது இறக்க வேண்டும் என்பதை அறிந்தவர் பிரம்ம தேவன். அவருக்கு

**அருள்**

அடுத்ததாக மரணம் எப்போது சம்பவிக்கும் என்பதை கிட்டத்தட்ட சரியாக அறிந்த கலியுக பிரம்மாக்கள் கரும்புலிகள்.

அன்றையதினம் விமானத்தளத் தாக்குதலுக்கு முன்னர் பிரபாகரனோடு இருந்து இறுதிப்போசனம் அருந்திவிட்டு மகிழ்வுடன் போய்வருகின்றோம் என்று சொல்லாமல், போகின்றோம் என்று விழி மலர்ந்து சென்ற இருபத்தொரு பேரும் மொத்தமாக மண்ணில் புதைந்தார்கள். அவர்களின் படங்கள் தாக்குதல் நடைபெற்று மெணி நேரத்திற்குள்ளேயே இணையத் தளங்களில் வலம்வந்ததென்றால் மரணம் நிச்சயம் என்று அவர்களுக்கு தெரிந்திருக்க வேண்டும்.

விமானத்தளத் தாக்குதல் திட்டம் தயாரிக்கப்பட்டதும்

(22ஆம் பக்கம் பார்க்க)

Diploma in Web Multimedia
Special Offer
- Corel Draw Cs 13
- Adobe Photoshop Cs2
- Adobe Illustrator Cs2
- Macromedia Flash 8.0
- Macromedia Dream Viewer 8.0
- Macromedia Fireworks 8.0
- Cool 3D
- Swish Mx
- Internet & e-mail

கட்டணம் : ~~24750/=~~ 9750/=
காலம் : 4 மாதம்
திறமையான மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு பெற்றுத்தரப்படும்
SDC Skills Development Center
379-1/2, Galle Road, Colombo 6.
Tel: 011-4964564, 071-4241873

ACA TINY TOTS MONTESSORI
2008ஆம் ஆண்டுக்கான அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
All Three Mediums
- Qualified & Dedicated Teaching Staff
- Computer Education
- Free, English supportive Classes
- Swimming & Other sports
- Western Music
- Concert, Exhibition & Sportsmeet
- Transport Facilities

விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
For Further Information Please Contact The Office On Weekdays From 8.00 A.M. - 1.00 P.M.
ACA
No. 55, St Lucias Street, Colombo 13.
Hotline : 077 3601137 Tel: 2335287

Stationery Hall
- Imported Diaries,
- Note Book,
- Office Stationery,
- School Stationery and
- all Range of Tex Books

- அப்பியாச புத்தகங்கள்,
- குறிப்பு புத்தகங்கள்,
- அலுவலக உபகரணங்கள்,
- பாடசாலை புத்தகங்கள், உபகரணங்கள் மற்றும்
- அனைத்து விதமான புத்தகங்கள்.

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
189, Modara Street, Colombo - 15.
Tel : 011 - 4944640 Fax : 011 - 5343777

# இலங்கை, நேபாள அரசுகளுக்கு தலையிடியான ஜே.வி.பி., மாவோயிஸ்ட்

தெற்காசியப் பிராந்தியத்தில் சர்வதேச மட்டத்தில் உல்லாசப்பிரயாணிகளைத் தன்பால் இழுத்து மகிழ்வடையச் செய்யும் இலங்கையும் நேபாளமும் அரசியல் நெருக்கடிகளில் சிக்கி, சர்வதேச சமூகத்தவர்களை முகம் சுளிக்கச் செய்துள்ளன.

இந்த இரு நாடுகளுமே அலை வளம், கலை வளம்,.மலை வளம் மற்றும் மழை வளமும் ஒருங்கே அமைந்த நாடுகளாகத் திகழ்கின்றன.

உலகின் அதியுயர்ந்த மலையான எவரெஸ்ட் முதல் எட்டு மலைகளைத் தன்னகத்தே கொண்டு உலகத்தின் உச்சி என்று பெயர் பெற்று விட்டது நேபாளம்.




அங்கே உயர்ந்து காணப்படும் மலைகளும் நாட்டைச் சுற்றிசுற்றி ஓடி வரும் ஆறுகளும் இயற்கை அளித்த கொடை.

பல தசாப்தங்களாக அங்கு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது இந்து நாகரிகம். அதனைப் பறைசாற்றும் பண்டைக்கால ஆலயங்கள் இன்றும் பழைமை மாறாமல் தலைநிமிர்ந்து நிற்கின்றன.

முன்னர் 14 இற்கும் அதிகமான இருநில சாம்ராஜ்யங்களாகப் பிரிந்து கிடந்த நாட்டை ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து ஒரே இந்து சாம்ராஜ்ஜியமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த குறுநில மன்னர்களின் மாளிகைகள் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவற்றை அண்டியுள்ள ஆலயங்கள் கலை வடிவம் மாறாமல் அப்படியே காணப்படுகின்றன. மறுசீரமைத்தோ, அல்லது புதுவடிவம் கொடுத்தோ அடையாளம் இழக்கச் செய்யப்படவில்லை. கற்சிற்பங்களும் மரசித்திர வேலைப்பாடுகளும் பிரமிக்கத்தக்கவையாக இருக்கின்றன.

உல்லாசப் பிரயாணிகளை மிகவும் கவர்ந்துள்ளது பட்டான்என்ற இடத்தில் அமைந்துள்ள 'கலைக்கிராமம்' (Art Village) -பட்டான் மன்னரின் மாளிகையை மையமாக வைத்தே இக்கலைக் கிராமம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கலைக்கிராமமாக மட்டுமின்றி, பல நாடுகளிலும் இருந்து வரும் உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் பெரும் வர்த்தக சந்தையாகவும் காணப்படுகின்றது. தாய், தந்தையரைவிட எல்லாம் கிடைக்கும் என்பார்களே. அதன்படி சாதாரண காலணிகள் முதல் உலகப் புகழ்பெற்ற நேபாள கம்பளங்களும் காணப்படுகின்றன.

இயற்கையோடு ஒன்றிவாழும் அம்மக்களுக்கு 'செக்ஸ்' சர்வசாதாரணம். இரகசியமாக மூடிமறைக்கப்பட வேண்டிய ஒரு விடயமாக எவரும் அலட்டிக்கொள்ளவில்லை. காமசூத்திரா சித்திரப்பட சுவடிகளை 12வயது மதிக்கத்தக்க சிறுவன் மிகவும் லாவகமாக விரித்துக்காட்டி விளக்குகின்றான்.

இந்தப் பட்டான் கலைக்கிராமத்துக்குள் செல்ல நுழைவுக்கட்டணமாக வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளிடம் 250ரூபா அறவிடுகின்றது. பத்திரிகையாளர்கள் என்றவுடன் எங்களிடம் 25ரூபா மட்டுமே கட்டணமாகப் பெற்றுக்கொண்டு அனுமதித்தனர்.

அங்கு மிகவும் பிரசித்திபெற்ற இந்து ஆலயமாக விளங்குவது பசுபதிநாதர் சிவன் ஆலயம். இக்கோயிலில் இந்துக்களைத் தவிர வேறு மதத்தவர்கள் அனுமதிக்கப்படுவ தில்லை.

அங்கு சென்றபோது மற்றும் ஓர் அதிர்ச்சி தரும் விடயமும் தெரியவந்தது. அதாவது, ஸ்ரீலங்கா என்றால் முஸ்லிம் நாடு என்ற பிரமை ஏற்பட்டுள்ளது. அவர்களுக்குத் தெளிவுபடுத்துவது எமக்குப் பெரும்பாடாகி விட்டது.

இக்கோயிலின் முகப்பில் அமைக்கப்பட்டுள்ள வானுயர்ந்த நந்தி சிலை மிகப் பிரமாண்டமானது.

அதேவேளை, இக்கோயிலின் கருவறைக்கு பக்கவாட்டில் காலஞ்சென்ற மன்னர் பிரேந்திராவின் தங்கமுலாம் பூசப்பட்ட இரு சிலைகள் அமைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று நமது நாட்டில் உல்லாசப் பயணிகளைக் கவரும் மலைக்குன்றுகள், நீர்வீழ்ச்சிகள், சிகிரியாக் குன்றுகள், பிரமிக்கவைக்கும் சிவனொளிபாத மலை, யால வனம், பேராதனை இயற்கைப் பூங்கா, அழகிய கடற்கரைகள், கண்டி தலதா மாளிகை இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஆனால், இவற்றை எல்லாம் சுதந்திரமாகக் கண்டுகளிக்கவும் அனுபவிக்கவும் முடியாத நிலை ஏன்? இங்கு ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளும் அமைதியற்ற சூழலுமே காரணம்.

இங்கு நான் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசபடைகள் நடத்தும் நேரடி யுத்த நடவடிக்கைகளைக் குறிப்பிடவில்லை. அவற்றைப் பிறிதொரு நேரத்தில் ஆராய்வோம்.

இப்பொழுது தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளை ஆராய்வோம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் இடம்பெற்ற விருந்துபசாரம் ஒன்றின் போது தனது நெருங்கிய சகாவிடம் வேதனையுடன் கூறிய விடயம் இப்படிக் கசிந்துள்ளது.

''எனக்கு ஐக்கிய தேசியக் கட்சியைப் பற்றிக் கவலை இல்லை. ஆனால், இரண்டும் கெட்டான் நிலையில் இருந்து கொண்டு வாழவும் விடாமல் சாகவும் விடாமல் தொல்லைகொடுப்பது ஜே.வி.பிதான்'' என்று கூறியுள்ளார்.

இதேபோன்று தான் நேபாளத்தின் இடைக்கால அரசுக்கும் மாவோயிஸ்ட்டு கள் இன்று பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளனர்.

எழுபதுகளில் ஆயுதம் ஏந்தி புரட்சியின் மூலம் ஆட்சியைப் பிடித்துவிடலாம் என்று போராட்டத்தை ஆரம்பித்தவர்கள் ஜே.வி.பியினர். இவர்களுடைய போராட்டத்தின் போது அரசியல்வாதிகள், புத்திஜீவி கள், ஆசிரியர்கள், டாக்டர்கள், மாணவர்கள், வர்த்தகர்கள் என்று பலரையும் கொன்று குவித்தனர்.

இதனால், நாட்டில்பொருளாதாரம் சீரழிக்கப்பட்டது. பலகோடி ரூபாய்கள், பெறுமதியான சொத்துகள் தீக்கிரையாக்கப் பட்டன. இறுதியில் இவர்களுடைய ஆயுதப் போராட்டம் தோல்வியிலேயே முடிந்தது.

அதேபோன்று செல்லாக் காசாகக் கிடந்த ஜே.வி.பியினருடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டு கூட்டு அரசு ஒன்றை உருவாக்கியது இன்றைய அரசாங்கம்.

சாதாரணமாக எட்டே எட்டு உறுப்பினர்களுடன் இந்த ஜே.வி.பியினரை நாடாளுமன்றத்தில் 39பேராக உயர்த்திவிட்டதுடன் நான்கு அமைச்சுகளையும் தாரைவார்த்து விட்டது.

இதேபோன்று நேபாளத்தின் முக்கிய அரசியல்கட்சிகள் ஏழும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுடன் செய்துகொள்ளப்பட்ட 12அம்ச உடன்படிக்கையின் மூலம் மாவோயிஸ்ட்டுகள் 83பேருக்கு நாடாளுமன்ற உறுப்புரிமை கிடைத்ததுடன் பிரதான நான்கு அமைச்சுப் பொறுப்புகளும் வழங்கப்பட்டன.

ஜே.வி.பியினர் அமைச்சர்களாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் வந்தவுடன் எப்படி சகலதுறைகளி லும் தொழிற்சங்கங்களை உருவாக்கி ஆர்ப்பாட்ட ஊர்வலம், போராட்டம்என நடத்தினரோ அப்படியே நேபாள மாவோயிஸ்ட்டுகளும் தனது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி சகலதுறைகளிலும் தொழிற்சங்கங்களை அமைத்து வேலைநிறுத்தங்களையும் போராட்டங்களையும் நடத்திவருகின்றனர்.

மாவோயிஸ்டுகளின் ஆக்கிரமிப்பு தேசிய பத்திரிகைகளையும் விட்டு வைக்கவில்லை. நாம் நேபாளத்தில் இருந்த போது பிரபல தேசிய பத்திரிகையான காந்திபூர் எக்ஸ்பிரஸ், காத்மண்டு போஸ்ட் உட்பட மூன்று பத்திரிகை நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன.

கடைசியில் இது ஊழியர்கள் அடிப்படை உரிமைப் போராட்டம், எமது இயக்கத்தின் போராட்டம் அல்ல என கைவிரித்து விட்டனர் மாவோயிஸ்ட்டுகள்.

நாடாளுமன்றத்தில் அமைச்சர்களின் எண்ணிக்கையை 25ஆக குறைக்கப்பட வேண்டும்,ஊழல் மோசடிகள் ஒழிக்கப்பட வேண் டும்என்று கூறிக்கொண்டு ஜே.வி.பியினரும் நான்கு அமைச்சுகளைப் பெற்றுக் கொண்டனர்.

இதேபோன்று நேபாளத்தில் மன்னராட்சி ஒழிக்கப்படவேண்டும், மக்கள் அரசாங்கம் அமைக்கப்படவேண் டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே அரசியல் நீரோட்டத்தில் கலந்து 83 உறுப்பினர்களையும், நான்கு அமைச்சுகளையும் தமதாக்கிக் கொண்டவர்கள் தான் மாவோயிஸ்ட்டுகள்.



இவர்கள் நாடாளுமன்றத்தில் எம்.பிக்களாகவும் அமைச்சர்களாகவும் மாறிய பின் தாம் நினைப்பதை எல்லாம் நடத்தி விட முடியும் என்று கருதினர். ஆனால் அது கைகூடவில்லை. இது அவர்களுக்குப் பெரும் ஏமாற்றமாகி விட்டது.

இங்கு ஜே.வி.பி.யினர் எப்படி நான்கு அமைச்சுப் பதவிகளையும் இராஜினாமாச் செய்துவிட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டும் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றனர்.




இவ்வாறே நேபாள மாவோயிஸ்ட்டுக்களும் தாம் வகித்த நான்கு அமைச்சுப் பதவிகளை இராஜினாமாச் செய்த போதிலும் நாடாளுமன்ற ஆசனங்களைத் துறந்துவிடவில்லை.

ஜே.வி.பி.யினர் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தாலும் அவர்கள் இதுவரை அரசு கொண்டு வரும் சகல தீர்மானங்களுக்கும் ஆதரவாகவே வாக்களித்து வருகின்றனர்.

ஊழல் மோசடி நிறைந்த இந்த அரசைக் கவிழ்ப்போம்; ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்கின்றனர். ஆனால் பிரதான எதிர்க்கட்சியுடன் இணைந்து கவிழ்க்கமாட்டார்களாம். எப்படி இருக்கிறது ஜே.வி.பி.யினரின் சித்தாந்தம்.

இதுதான் ஜனாதிபதிக்கும் பெரும் தலை

**இரா.புத்திரசிகாமணி**

யிடியாக இருக்கிறது. ஒன்று எதிர்க்கட்சியாக இருக்க வேண்டும். அல்லது அரசுடன் இணைந்து செயற்படவேண்டும். இரண்டும் கெட்டானாக இருந்து கொண்டு எப்போது காலைவாரி விடுவார்களோ என்ற அச்சம் நியாயமானதுதான்.

இதேபோன்றுதான் நேபாள இடைக்கால அரசுக்கும்மாவோயிஸ்டுகளால்ஏற்பட்டுள்ளது. இவர்கள் அமைச்சர்களாக இல்லாவிட்டாலும் நாடாளுமன்றத்தில் இரண்டாவது பெரும்பான்மைக் கட்சியாக இருந்து கொண்டு சவால் விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அதாவது, திட்டமிடப்பட்டபடி (தேசிய அலும்பினி ) அரசாங்க சபைக்கான தேர்தலை நடத்த முடியாத நிலையை ஏற்படுத்தி விட்டனர்.

முற்று முழுதாக மன்னராட்சி ஒழிக்கப்பட்ட பின்னரே அரசவாக்க சபைக்கான தேர்தலை நடத்த வேண்டும். அந்தத் தேர்தல் விகிதாசார தேர்தலாக அமைய வேண்டும் என்பது மாவோயிஸ்ட்டுகளின் பிடிவாதம்.

ஆனால் அரசவாக்க சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டதன் பின் அதன் தீர்மானத்தின் படியே முடியாட்சி ஒடுக்கப்படவேண்டும் என்பதே பெரும்பான்மையினரின் வாதம். இதனால், ஏற்பட்ட இழுபறியினால் தேர்தலைப் பிற்போடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதனால் இங்கு எப்படி அரசியல் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளனவோ அப்படியே நேபாளத்திலும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பொதுவாகக் கூறினால் முட்டுக் கொடுப்பவர்களின் ஆதரவை நம்பி இருக்கும் அரசுகளுக்கு தீர்க்க ஆயுசு நித்திய கண்டம் என்பது சரியாகிவிட்டது.

# புரோட்டினெக்ஸ்®

**நாள்தோறும் இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது...**




**100%**

**தாவரப் புரதம்**

**0**

**கொலஸ்ரோல் அற்றது**

**0**

**லக்டோஸ் அற்றது**

**0**

**ஐசோபிலேவோன் அடங்கியது**

**13 விட்டமின்கள் 11 கனியுப்புக்கள் அடங்கியது**

**சூடாகவோ குளிராகவோ பருகலாம்**

**98% கொழுப்பு அற்றது**

**புதிய புரோட்டினெக்ஸின் அனுகூலங்கள்-**

நீங்களும் உங்கள் குடும்பமும் ஏனைய போஷாக்குப் பானங்களை விட புதிய புரோட்டினெக்ஸ் இனை ஏன் தெரிவு செய்யவேண்டும். புதிய புரோட்டினெக்ஸ் ஆனது சோயா புரதம் ஐசோலேட் இனை ஆதாரமாகக் கொண்ட பானமாகும். இதுவே மிகச் சிறந்த முறையில் சுகாதாரமாகக் கொண்ட பானமாகும். இதுவே மிகச்சிறந்த முறையில் சுத்திகரிக்கப்பட்ட தாவரதப் புரதம். மேலும் சோயாப் புரதம் ஐசோலேட் ஆனது 90% இற்கும் அதிகமான புரதத்தைக் கொண்டதுடன் புதிய புரோட்டினெக்ஸ் ஆனது ஏனைய பாற்பொருட்களைப் போலன்றி கொலஸ்ரோல் அற்ற கொலஸ்ரோலைக் குறைப்பதற்கு உதவக்கூடிய, 72 கிராம் புரதம், பீற்றா கரோட்டின், 13 விற்றமின்கள், 11 கனியுப்புக்கள், 2 கிராமிற்குக் குறைவான கொழுப்பு என்பவற்றைக் கொண்டதுடன் முக்கியமாக Isoflavones இனையும் கொண்டுள்ளது. புதிய புரோட்டினெக்ஸ் ஆனது ஆரோக்கியமான சுகவாழ்விற்கு அவசியமான 22 அமினோ அமிலங்களைக்கொண்ட ஒரேயொரு தாவரப் புரதம் என்பது மட்டுமன்றி ஏனைய அனுகூலங்களையும் கொண்டுள்ளது.

**Isoflavones என்பவை யாவை?**

இவை தாவரங்களில் காணப்படும் (phytochemical) என்னும் வகுப்பைச் சேர்ந்த ஒட்சியேற்றத்திற்கு எதிராகச் செயற்படக்கூடிய தன்மையைக் கொண்டவை. அன்டிஒக்ஷிடன்ட் (Antioxident) என்பவை சூழல் மாசு, சூரிய ஒளி மற்றும் எமது உடல் செயற்பாட்டால் ஏற்படும் கலச் சேதத்தினைத் தடுக்க அல்லதுமீள் உருவாக்க வல்லவை. மேற்குறிப்பிட்ட காரணிகளால் உடலில் ஒட்சியேற்றம் ஏற்படுவதால் அபாயகரமான இரசாயனப் பதார்த்தங்கள் (free radical) உருவாகின்றன. இவை அதிக தாக்குதிறன் கொண்டதால் DNA யினை சேதப்படுத்தி கல மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இதுவே புற்றுநோய் ஏற்படுவதற்கான காரணமாகும். இவ் இரசாயனப் பதார்த்தங்கள் உடலின் நோயெதிர்ப்புத் தன்மையை செயலிழக்க வல்லது. மேலும் இவை முதுமையடைதலின் போது ஏற்படும் மாற்றங்களுக்கும் காரணமாக விளங்குகின்றது.

புரோட்டினெக்ஸ் (Soy Protein Isolate) உள்ள isoflavones ஆனது free radical உருவாகும் இரசாயனத் தாக்கத்தினை தடுப்பதுடன் உருவாகி உள்ளவற்றையும் அழிக்கவல்லது.

**புதிய புரோட்டினெக்ஸ் இன் மூலம் உடல் ஆரோக்கியத்திற்கான அனுகூலங்கள் யாவை?**

1. இழைய மற்றும் தசை வளர்ச்சி

சோயாப்புரதம் ஆனது குளுடமின், ஆர்ஜனின் லைசின் மற்றும் கிளை- சங்கிலி அமினோ அமிலங்கள் அடங்கலாக பல அமினோ அமிலங்களையும் விலங்குப் புரதத்தினையும் விட அதிகளவில் கொண்டிருப்பதால் இழைய வளர்ச்சிக்கு உன்னதமானது. ஆர்ஜனின் ஆனது தசை விருத்திக்கு மிக முக்கியமானதுடன் மேம்படுத்தப்பட்ட நோயெதிர்ப்புத் தன்மைக்கும் உதவுகின்றது.

2. பீற்றா கரோட்டின் அனுகூலங்கள்-

புரேட்டினெக்ஸ் பீற்றா கரோட்டினைக் கொண்டுள்ளது. இதன் முக்கிய அனுகூலம் அன்டிஒக்சிடென்ட் (Antioxidant) ஆகத் தொழிற்படுவது. இது விற்றமின் A,E யினைப் போன்று நோயெதிர்ப்புத் தன்மையை வலுவடையச் செய்யக்கூடியது. இது free radical இனை நடுநிலையாக்குவதன் மூலம் கலங்களைப் பாதுகாக்கவல்லது. Free radical ஆனது ஒட்சியேற்றம் என்னும் செயற்பாட்டின் மூலம் உடலைத் தாக்க வல்லது. இச் செயற்பாட்டை பீற்றா கரோட்டின் தடுப்பதன் மூலம் நோயெதிர்ப்புத் தன்மையை வலுவடையச் செய்யும். ஆய்வுகளின் படி பீற்றா கரோட்டின் ஆனது புற்றுநோயைத் தடுக்கவல்லது. விற்றமின் A யானது நுரையீரல் இழையத்திற்கு போஷனையை வழங்குவதன் மூலம் புற்றுநோயை தடுக்கவல்லதுடன் தொற்று நோயிலிருந்தும் பாதுகாக்கும். பீற்றா கரோட்டினானது கொலஸ்ரோலின் கட்டமைப்பை மாற்றுவதன் மூலம் நாடிகளில் கொலஸ்ரோல் படிவதைத் தடுக்கின்றது. அத்துடன் பீற்றா கரோட்டினானது உடலிலுள்ள T-கலங்களினை வலிமையாக்குவதன் மூலம் HIV தாக்கத்தைக் கட்டுப்படுத்துகின்றது.

3. இருதய நோய் அபாயத்தைக் குறைக்கின்றது-

புரோட்டினெக்ஸ் (Soy Protein Isolate) உள்ள isoflavones ஆனது LDL இனைக் குறைப்பதினாலும் இரத்தம் உறைதலை குறைப்பதனாலும் மாரடைப்பு மற்றும் பாரிசவாத அபாயத்தைக் குறைக்கின்றது. மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி 25 கிராம் சோயாப் புரதம் 9 வாரங்களுக்கு உட்கொள்வதன் மூலம் சராசரி 5% LDL குறைவடைகின்றது. மேலும் அதிகளவு LDL உள்ளவர்களில் 11% வீழ்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது. (ஒவ்வொரு 10 % முதல் 15 % LDL வீழ்ச்சிக்கும் 20% முதல் 25% வரை மாரடைப்பு அபாயம் குறைவடைகின்றது)

> 1999ம் ஆண்டு FDA என்னும் அமைப்பு அனுமதியளித்ததன்படி கொழுப்பு மற்றும் கொலஸ்ரோல் குறைவான உணவிற்கு மேலதிகமாக 25 கிராம் isoflavones அடங்கிய சோயாப் புரதத்தினை உட்கொள்வதால் மாரடைப்பு அபாயத்தினைக் குறைக்கின்றது.

4. புற்றுநோய்க்கெதிரான பாதுகாப்பு-

புரோட்டினெக்ஸில் உள்ள isoflavones ஆனது மார்பகப் புற்றுநோய் கருப்பை புற்றுநோய் முன்னிலைச் சுரப்பி புற்றுநோய் போன்ற ஹோர்மோன் சம்பந்தப்பட்ட புற்றுநோய்களில் இருந்து உடலைப் பாதுகாக்கின்றது. isoflavones ஆனது புற்றுநோய்க்கெதிரான மருந்துகள் செயற்படும் அதே முறையில் செயற்படுகின்றது. சனத்தொகையை ஆதாரமாகக் கொண்ட ஆய்வுகளின்படி உட்கொள்ளப்படும் isoflavones ற்கும் மார்பகப் புற்றுநோய் மற்றும் கருப்பைப் புற்றுநோய் அபாயம் குறைவடைவதற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உள்ளது. சோயாப் புரதம் மற்றும் isoflavones செறிவான ஏனைய உணவுகளை உட்கொள்ளும் பெண்களில் கர்ப்பப்பைப் புற்றுநோய் அபாயம் 54% குறைவடைகின்றது.

5. ஒஸ்டியோபொரோஸிஸ் இற்கு எதிரான பாதுகாப்பு-

புரோட்டினெக்ஸில் உள்ள (Soy Protein Isolate) ஆனது உடலில் கல்சியத்தை தக்க வைத்துக்கொள்ளும் தன்மையையும் எலும்புகள் கல்சியத்தை உள்ளெடுக்கும் தன்மையையும் மேம்படுத்துகின்றது. அத்துடன் isoflavones ஆனது எலும்பு இழப்பு எலும்பு முறிவு போன்றவற்றைக் கட்டுப்படுத்தி ஒஸ்டியோபொரோஸிஸ் ஏற்படுவதைத் தடுக்க உதவுகின்றது. அத்துடன் isoflavones புதிய எலும்புகள் உருவாகுவதற்கு உதவுவதற்கான சான்றுகளும் உள்ளன. ஆய்வுகளின் படி நாள் ஒன்றுக்கு 40g சோயா புரதம் உட்கொள்ளும் மாதவிடாய் நிரந்தரமாக நின்றுபோன (இறுதி மாதவிடாயின்பின்) பெண்களின் முதுகெலும்பு கனியுப்பு அடர்த்தி கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இதுவே ஒஸ்டியோபொரோஸிஸில் கூடுதலாக பாதிக்கப்படும் எலும்பு.

6. இறுதி மாதவிடாயின் பின்பும் அதற்கு முன்பும் ஏற்படும்-

அறிகுறிகளைக் கட்டுப்படுத்துகின்றது. புரோட்டினெக்ஸிலுள்ள isoflavones ஆனது உடலின் ஈஸ்ரஜன் குறைவடையும் அல்லது மாறுபடும் சந்தர்ப்பங்களில் அதனைக் கட்டுப்படுத்த உதவுவதன் மூலம் இறுதி மாதவிடாய் (நிரந்தரமாக நின்றுபோன) மற்றும் அதற்கு முன்பான அறிகுறிகளைக் குறைக்க உதவுகின்றது.


7. முன்னிலைச் சுரப்பியில் ஏற்படும் பிரச்சினைகளுக்கெதிராகச் செயற்படுகின்றது-

புரோட்டினெக்ஸ் போன்ற சோயா செறிந்த உணவுகளை உட்கொள்வதால் ஆண்களில் முன்னிலைச் சுரப்பி பெரிதாவது தடுக்கப்படுகின்றது. ஆண்களில் வயது முதிரும்போது முன்னிலைச் சுரப்பியும்பருமனில் பெரிதாவதால் அடிக்கடி இரவில் சிறுநீர் கழித்தல் மற்றும் சிறுநீர் கழிக்கும் போது சிரமம் போன்றவை ஏற்படக்கூடும்.

8. Endometriosis இற்கு எதிராகச் செயற்படுகின்றது-

Endometriosis என்பது அசாதாரணமாக கருப்பைச் சுவர் வெளிப்புறமாக தடிப்படையும் செயற்பாடு. இதன் போது வயிற்றில் வலி ஏற்படும். புரோட்டினெக்ஸில் உள்ள isoflavones ஆனது ஈஸ்ரஜனின் தொழிற்பாட்டை மேம்படுத்துகின்றது.

**Manufactured by:**
**Astron Limited.,**
**688, Galle Road, Ratmalana, Srilanka.**
**Tel: 2636741, 5566741 Fax: 2636173**
**E-mail: astron@astron.lk**
**www.astron.lk**




# மச்சத்திலிருந்து ஏற்படக்கூடிய சரும புற்றுநோய் மிகவும் பயங்கரமான விளைவுகளைத் தரவல்லது



கேள்வி: எனக்கு மார்பில் ஒரு மச்சம் இருக்கின்றது. அது எனக்கு அதிர்ஷ்ட மச்சம் என்று எனது பெற்றோர் கூறுவார்கள். கடந்த சில வாரங்களாக இந்த மச்சம் வளர்வது போல் தெரிகிறது. சிறிது அரிப்பும் ஏற்படுகிறது. எனது நண்பர்கள், இது புற்று நோயாக மாறலாம் அகற்றிவிடு என்கின்றார்கள். எனது அதிர்ஷ்ட மச்சத்தை அகற்ற எனக்கோ விருப்பமில்லை. மாற்றுவழி அல்லது பரிகாரம் வேறு ஏதாவது கூறவும்?

பதில்: உடலில் உள்ள மச்சத்தில் மாற்றம் ஏதும் ஏற்பட்டாலோ, சவரம் செய்யும் போது, அல்லது உடைஅணிந்திருக்கும்போது அரிப்பு, நமைச்சல் ஏற்பட்டாலோ மருத்துவரைச் சந்தித்து ஆலோசனை பெறுவது நல்லது. இப்படிச் சாதாரண மச்சத்திலிருந்து ஏற்படக்கூடிய சருமபுற்றுநோய் (Melanoma), மிகவும் பயங்கரமான விளைவுகளை தரவல்லது. எனவே, உங்கள் மச்சம் பற்றி மருத்துவர் ஒருவரின் ஆலோசனை பெறுவது அவசியம். அதிர்ஷ்ட மச்சமாக இருந்தாலும் துரதிஷ்டவசமாக அது புற்று நோய்க்கு அடிகோல நாம் சந்தர்ப்பம் அளிக்கக்கூடாது. அதேவேளை, மச்சத்தை நீங்களாகவே வெட்டி எடுப்பதற்கோ ஏதாவது பூச்சுமருந்து தடவி அகற்றுவதற்கோ முயலாதீர்கள். சத்திரசிகிச்சை மூலம் மச்சம் அகற்றப்பட்டாலும் அதனை நோயியல் (Pathology) நிபுணரின் பரீட்சைக்கு உட்படுத்தி அதில் புற்றுநோய் வருவதற்கு ஏதாவது அறிகுறிகள் உள்ளனவா என்பது கண்டறியப்படவேண்டும்.

கேள்வி: ஆண், வயது 26. எனது இரு பாதங்களிலும் 'ஆணி' முளைத்திருக்கின்றது. ஒன்றுக்கு மேற்பட்ட 'ஆணி'கள் பாதங்கள் இரண்டிலும் உள்ளன. டாக்டரிடம் காட்டினால் அவர் அவற்றை சத்திரசிகிச்சை மூலம் அகற்றச் சொல்கின்றார். இரண்டுகால்களிலும் சத்திர சிகிச்சை செய்தால் எப்படி நாளாந்த வேலைகளை, கடமையைச் செய்வது? உங்கள் ஆலோசனையை வேண்டுகின்றேன்.

பதில்: உங்களுக்கு ஏற்பட்டிருப்பது Plantar Warts எனப்படும் ஒருவித வைரஸ் சருமத் தொற்று. தொற்று என்று ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால், பொதுவான குளியலறைகளை, கழிப்பிடங்களை, நீர்தேங்கிநிற்கும் குசினி அறைகளை உபயோகிக்கும்போது இந்த வைரஸ் பாதங்களை தாக்கி பாதத் தோலில் உட்புகுகின்றது. வைரஸ் அழற்சியினால் பாதத்தில் இவ்வாறு கட்டிகள் ஏற்படுகின்றன. நடக்கும்போது அழுத்தத்தினால் தாங்க முடியாத வலி ஏற்படுகின்றது. எனவே, இவற்றை சத்திரசிகிச்சை மூலம் அகற்ற பரிந்துரைக்கின்றார்கள். இரு பாதங்களிலும் ஒன்றுக்கும் அதிகமாக இந்தக் கட்டிகள் இருந்தால் முதலில் ஒரு பாதத்தை சத்திரசிகிச்சை செய்தபின்னர்தான் மற்ற பாதத்தில் சிகிச்சை செய்யலாம். எனவே, நீங்கள் இதுபற்றி கவலைப்படவேண்டியதில்லை. சத்திரசிகிச்சையின்போது கட்டிகளைத் தோண்டியெடுத்து தையல்போடவேண்டி நேரிடும். தையல் ஐந்து அல்லது 7 நாட்களின் பின்னர் பிரிக்கப்படும். சத்திரசிகிச்சையின் பின்னர் இரண்டு நாட்கள் கழித்து வழக்கம் போல் நடக்கலாம். பாதத்தில் ஒன்று அல்லது இரண்டு கட்டிகள் இருந்தால் - Corn Plaster எனப்படும் மருந்து சேர்த்த பிளாஸ்டர்களை ஒட்டி அவற்றை நீக்குவது எளிது.

கேள்வி: பெண். வயது 24. கர்ப்பமாகி இரண்டுமாதம் ஆகின்றது. தினமும் வாந்தி. உடம்பு உருக்குலைந்து விட்டது. சிலவேளைகளில் வாந்தியோடு இரத்தமும் வருகின்றது. டாக்டர்களிடம் போனால், சேலைன் (Saline) ஏற்றி ஓரிரு நாட்கள் தங்கவைத்து வீட்டுக்கு அனுப்புகின்றார்கள். திரும்பவும் அதே கதைதான். என்னைப் பார்க்கவரும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மருந்துகள், கைமுறை வைத்தியங்கள் சொல்கின்றார்கள். அதற்கெல்லாம் இந்த வாந்தி கட்டுப்படவில்லை. ஆனால், எனது மாமா ஒருத்தர் கொஞ்சம் 'பியர்' குடிக்கச் சொன்னார். பியருக்கு இந்த வாந்தி அடங்குகின்றது. கர்ப்பிணியான எனக்கு பியர் (Beer) குடிப்பதால் பிரச்சினை ஏற்படுமா?

பதில்: கர்ப்பமுற்ற சில பெண்களுக்கு வாந்தி ஏற்படுவது வழக்கமானதுதான். சிலருக்கு இந்த வாந்தி மிகவும் அதிகமாக உள்ளது. இதனை Hyperemesis Grauidarum என்று சொல்வார்கள். கர்ப்பமுற்ற ஒரு மாதத்திலிருந்து கூடியது 3 மாதம் வரை இந்த வாந்தி இருக்கும். ஒரு சிலர் பிரசவம் ஆகும் வரை மாதத்திற்கு சில தினங்கள் இப்படி வாந்தி எடுப்பதை அனுபவத்தில் கண்டுள்ளேன். உயிருக்கு ஆபத்து ஏற்படும் வகையில் இந்த கர்ப்ப கால வாந்தி இருப்பதில்லை. வாந்தியை நிறுத்த மருந்துகள் கொடுத்தாலும் பெரிதாகக் குணம் காணுவதில்லை. மருந்தை நிறுத்தியவுடன் வாந்தி திரும்பவும் தொடங்கிவிடும். Saline என்கின்ற நாளங்களில் ஏற்றும் மருந்து- வாந்தியால் ஏற்படும். தேகத்தின் நீர் இழப்பீட்டை சமப்படுத்துமே அன்றி வேறு எதுவித குணமாக்கும் திறனோ, குணமோ சேலைனுக்கு கிடையாது.

இப்படி கர்ப்பகாலத்தில் ஏற்படும் வாந்தி, மசக்கை என்பவை தாயின் உடலில் ஏற்படும் ஹோர்மோன் மாற்றங்களினால் ஏற்படும் விளைவுகள்- ஆரம்பத்தில் சுரக்கப்படும் இந்த ஹோர்மோன்கள் மூன்று மாதத்தின் பின்னர் குறைந்து, கருவளர்ச்சிக்கு அவசியமான ஹோர்மோன்கள் சுரக்கப்படும்போது இந்த குணங்களும் மறைந்துபோகும்.

இந்த கர்ப்பகால வாந்தியை குணமாக்க மருந்துகள் இல்லாவிடிலும் சில கைகண்ட வைத்தியமுறைகளை எமது முன்னோர் சொல்வார்கள். கர்ப்பமுற்றிருக்கும் பெண்ணுக்கு சில வாசனைப்பொருட்களை, சில உணவு வகைகளை நினைத்தாலோ, நுகர்ந்தாலோ வாந்தி ஏற்படும். அசாதாரண ருசி, சுண்ணாம்பு, மாங்காய், கரி என்பவற்றில் ஆசை ஏற்படும். இதற்காக அந்தத் தாய்க்கு பிடிக்காத உணவுகளை வீட்டில் சமைப்பதை தவிர்ப்பார்கள். சிலருக்கு வேறெங்கோ சமைத்த உணவு - ருசியாகவும் வாந்தி எடுக்காத விதத்திலும் இருக்கும். அதனைத் தருவித்துக் கொடுப்பார்கள். அதிகாலையில் எழுந்தால், வாந்திவரலாம் என்பதனால் நன்றாக காலை வேளைகளில் பலமணி நேரம் கர்ப்பிணிப் பெண்களை தூங்கவிடுவார்கள். இப்படியான ஒருமுறையில் Beer அருந்துவதை ஒரு சிகிச்சையாக சிலர் உபயோகிப்பதை அறிந்துள்ளேன். Beer இல் உள்ள அல்கஹோல் என்ற மதுசாரம் கருவுக்கு தீங்கு தரக்கூடியது. எணவே, தற்காலிகமாக ஏற்படும் இந்த கர்ப்பவாந்திக்கு கட்டாயம் Beer குடிக்கவேண்டுமா என்பதே என் பதில்.

கேள்வி: ஆண். வயது 28. கடந்த சில மாதங்களாக காலையில் எழுந்ததும் தும்மல் ஏற்படுகிறது. தொடர்ந்து காலை 8மணி வரையுமாவது இப்படித் தும்மல் வருகின்றது. டாக்டர்களிடம் காட்டினால் இது ஒவ்வாத்தன்மை, தூசிதுகள்களால் ஏற்படுகின்றது என்று நிதானித்து இரவில் படுக்கப்போகும் முன் எடுக்கச் சொல்லி சில மாத்திரைகள் தருகின்றார்கள். அவற்றை உபயோகித்தால் இந்தத் தொந்தரவு இல்லை. ஆனால், அதற்காக எனது ஆயுள் பரியந்தம் மாத்திரைகளை உபயோகிக்கமுடியுமா? பரிகாரம் கூறவும்.

பதில்: உங்களுகக்குள்ள காலைவேளைத் தும்மல், டாக்டர்கள் அனுமானித்தபடி ஓரளவுக்கு ஒவ்வாமை யினால் ஏற்பட்டதாக கருதுவதற்கு இடமிருக்கின் றது. காலைவேளைகளில் புதிதாக மலர்ந்த மலர்களிலிருக்கும் மகரந்தப் பொடிகள் காற்றில் கலந்து நாசியில் ஒவ்வாத்தன்மையை உருவாக்கலாம். அடுத்ததாக - காலையில் வீசும் குளிர்காற்று நாசித்துவாரத்தில் உள்ள உணர்வு நரம்புகளைத் தூண்டிவிட்டு தும்மலை உருவாக்கலாம். ஒவ்வாத தன்மையால் உடலில் Histamine என் கின்ற பொருள் சுரக்கப்படுகின்றது. இந்தப் பொருள் நாசியில் உள்ள இரத்தோட்டத்தை அதிகரிப்பதால் நாசி அடைப்பு, அரிப்பு என்பவை ஏற்பட்டு தும்மலுக்கு வழிகோரலாம். இந்த நிலையில் இந்த Histamine எதிர் மருந்து களான Anti Histamine வகை மருந்துகளை உபயோகிப்பதால் அந்த Histamine சுரப்பின் தாக்கம் குறையும். இதனைத் தான் உங்கள் டாக்டர் மாத்திரைகளாக இரவில் உபயோகிக்க அறிவுறுத்தியுள்ளார்.

என்றாலும் நாசியினுள் வளரும் Polyps என்ற வளர்ச்சிகள், பீனிசம் என்று அழைக்கப்படும் Sinusitis என்கின்ற நாசி காற்றறைகளின் அழற்சி, என்பவை கூட தும்மலைத் தரும். மற்றும் வயிற்றில் பூச்சி, Filaria என்னும் யானைக்கால் வியாதி பற்றீரியாக்கள் இரத்தத்தில் ஒவ்வாத் தன்மையை உருவாக்கி Tropical Eosinophilia ஈஸினோபீலியா என்ற நோயை உருவாக்கும். இந்த நோயின் ஒருகுணம் தும்மல் என்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும். எனவே, ENT எனப்படும் காது, நாசி, தொண்டை வைத்திய நிபுணரின் ஆலோசனை பெறுவது நல்லது என்று நம்புகின்றேன்.

கேள்வி: வயது 40. ஆண். எனக்கு நடந்து செல்லும் போது திடீரென்று முதுகுப் புறத்திலிருந்து வலி எற்பட்டு கால்களுக்குச் செல்கின்றது. சிலவேன்ளகள் உட்கார்ந்திருந்துவிட்டு எழும்பும்போது திடீரென்று இந்த வலி வருகின்றது. ஆயுள்வேத எண்ணெயை தினமும் இரவில் பூசியும் முதுகில் ஒத்தடம் கொடுத்தும் எதுவித குணமும் காணவில்லை. பரிகாரம் கூறவும்?

பதில்: உங்களுக்கு ஏற்பட்டிருப்பது Sciatica என்கின்ற Sciatica Nerve. காலுக்கு செல்லும் ஒரு நரம்பின் பாதிப்பால் ஏற்பட்டுள்ள கால்வலி. நமது முதுகு எலும்புகள் வரிசையாக ஒன்றின் கீழ் ஒன்றாக இடைவெளியில் அமைந்துள்ளன. இந்த இடைவெளிக்கூடாக Peripheral Nerves எனப்படும் அங்க அவயங்களுக்கு செல்லுகின்ற பல நரம்புகள் வெளிவருகின்றன. இவற்றில் Sciatic Nerve என்ற நரம்பும் ஒன்று. முதுகெலும்பில் ஏற்படுகின்ற கோளாறுகளில் இரண்டு முதுகெலும்புகள் ஒன்றை ஒன்று அழுத்தும் நிலைமை ஏற்படும்போது இடைவெளியினூடாக வெளியே வரும் நரம்பு அழுத்தப்படுகின்றது. அல்லது பாரமான பொருளை பிழையான நிலையில் முதுகை வளைத்துத் தூக்கும் போது இரண்டு முதுகெலும்புகளுக்கு இடையே உள்ள சவ்வு நகர்ந்து வெளியேறும் நரம்புகளை அழுத்தும். இப்படியான நிலைமை 'சயட்டிக்' நரம்புகளுக்கு ஏற்படும் சந்தர்ப்பம் அதிகம். உங்களுக்கு ஏற்பட்டுள்ள நடக்கும்போது ஏற்படும் வலி குந்தி இருந்து எழும்பும் போது ஏற்படும் திடீர்வலி (Shooting Pain) என்ற குணம் குறிகளைத் தவிர கால்சக்தியற்று தளர்ந்து போகின்ற நிலை, வலி சீராக மெல்ல மெல்ல அதிகரித்துக்கொண்டு போகும் நிலை என்பவை கூட ஏற்படக்கூடும். ஆரம்பத்தில் இந்த கோளாறுகளுக்கு Physiotherapy என்கின்ற முறையில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு அதற்கு எதுவித குணமும் காணாவிடில் முதுகெலும்புக்கு உள்ள முன்னாண் கால்வாயில் (Spinal Canal) ஸ்டீரொய்ட் (Steroid) மருந்தை ஊசி மூலம் ஏற்றி சிகிச்சை செய்யலாம். இதற்கும் குணமாகாவிடில் மிகவும் நுட்பமான சத்திரசிகிச்சை மூலம் உங்கள் கால்வலியிலிருந்தும் குணம் பெறலாம். எனவே, எலும்புநோய் நிபுணர் (Orthopaedic Surgeon) ஒருவரின் ஆலோசனை பெறவும்.

இலவச மருத்துவ
ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி
மாவத்தை, கொழும்பு-14.



# அறிவியல்

ரி.கே.ஆர்



## 'ப்யூடலாக்கோசாரஸ் டியூக்கி'

பார்ப்பதற்கே பயமாக இருக்கும் டைனோசர்களின் படத்தை பிரேசில் நாட்டில் 'ரியோ டி ஜெனிரோ' நகரில் உள்ள தேசிய வனவிலங்கு காப்பகம் வெளியிட்டுள்ளது. இதில் புதிய வகை டைனோசர்களின் படங்களும் இடம் பெற்றுள்ளன. இந்த டைனோசருக்கு 'ப்யூடலாக்கோசாரஸ் டியூக்கி' எனப் பெயர் வைத்துள்ளனர். இவை ஆர்ஜென்டீனாவில் உள்ள பேரியல்ஸ் ஏரிக்கரையில் உலவி இருக்கலாம் என கருதப்படுகின்றது. இவை 8.8 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் உலா வந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

## புதிய கிரகம்



சூரியக் குடும்பக் கிரகமான புளூட்டோ கிரகம் போன்ற புதிய கிரகமொன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். 'Embryos' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தக் கிரகம் புளூட்டோவின் அளவானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சூரிய குடும்பத்திலிருந்து 60 ஒளியாண்டுகளுக்கு குறைவான தொலைவில் இந்தக் கிரகம் அமைந்துள்ளது. இந்தக் கிரகத்துடன் மூன்று நட்சத்திரங்களும் சுற்றி வரக் காணப்படுகின்றன என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Au Microscopll மற்றும் Beta Pic^toris (Aumi, Beta Pic)என்ற இரு நட்சத்திரங்களும் 12 மில்லியன் ஆண்டுகள் வயதுடையன.

Formalhaut என்ற நட்சத்திரம் 200 மில்லியன் ஆண்டுகள் வயதுடையது.

கிரகங்களின் உருவாக்கம் குறித்து இதற்கு முன்னர் பெறப்படாத தகவல்களை இந்த கிரகத்தை ஆய்வு செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். நாஸாவின் Hubble Space தொலைநோக்கியினூடாக இந்த புதிய கிரகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## இறந்த நட்சத்திரம்

வழமையான நட்சத்திரங்களில் காணப்படும் தன்மைகளுக்கு அப்பாற்பட்ட வித்தியாசமான அமைப்பைப் கொண்ட இறந்த நட்சத்திரமொன்று பூமிக்கு அருகில் இருப்பதை விண்வெளி



ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

'நியூட்ரன் நட்சத்திரம்' என்று அழைக்கப் படும் இந்த நட்சத்திரம், புவியில் இருந்து தொலை நோக்கியின் மூலமாக நடத்திய ஆய்வின் போது கண்டு பிடிக்கப்பட்டது.

'உர்ஸா மயினர்' எனப்படும் நட்சத்திரக் கூட்டத்துக்குச் சொந்தமான இந்த நட்சத்திரம், ஆரம்பத்தில் கூட்டமாக இருந்து பின்பு தனியாகப் பிரிந்துள்ளது என்றும் அந்த நட்சத்திரக் கூட்டம் தற்போதும் இயக்கமுடையதாக இருக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது 'கல்வாரா' என்று தற்காலிகமாக இதற்கு பெயரிடப்பட்டுள்ளது. 'கல்வாரா' என்பது 60 களில் 7 பாகங்களாக வெளிவந்த ஒரு திரைப்படமாகும்.

இந்த நட்சத்திரமானது, 7 நட்சத்திரக் கூட்டங்கள் இணைந்த ஒன்றிலிருந்து பிரிந்து வந்துள்ளது. பூமியிலிருந்து 250-1000 ஒளியாண்டுகள் தொலைவில் இந்த நட்சத்திரம் இருக்கின்றமை குறிப்பிடத் தக்கது.

'ஸ்டே கேபிள்' தொழில் நுட்பத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள இந்தப் பாலம், வடக்கு ஜெர்மனியில் உள்ள ஸ்ட்ரால்சந்த் நகரையும் பால்டிக் தீவில் உள்ள ரூஜென் நகரையும் இணைக்கிறது. 4.7 கி.மீ. நீளமுள்ள இப்பாலம் ஜெர்மனியின் மிக நீளமான பாலம் என்ற பெயரைப் பெற்றுள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் சுற்றுலா சூடு பிடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நீளமான பாலம்



## நம்மூர் மிளகு



நாம் அன்றாடம் சாப்பிடும் உணவில் ஏதாவது ஒரு வகையில் மிளகை பயன்படுத்தி வருகிறோம். அதை, மிளகாய் காரத்திற்கு பதிலாகவும், உணவில் சுவை சேர்ப்பதற்கும் மற்றும் சளி, இருமல், போன்ற சில நோய்களை குணப்படுத்துவதற்கும், 'பாட்டி வைத்தியமாக' பயன்படுத்தி வருகிறோம். ஆனால், அது மிகச் சிறந்த உடனடி வலி நிவாரணி என்று, சமீபத்தில் லண்டனில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் தெரிய வந்துள்ளது.

லண்டனில் உள்ள ஹாவர்ட் மருத்துவக் கல்லூரியில் செய்யப்பட்ட புதிய ஆய்வில், மிளகு மிகச் சிறந்த வலி நிவாரணியாக பயன்படுகிறது என்று தெரியவந்துள்ளது. மிளகில் கிடைக்கக் கூடிய கேப்சசின் என்ற பொருளிலிருந்து க்யூஎக்ஸ்-314 என்ற மருந்து தயார் செய்யப்பட்டுள்ளது. பிள்ளைப் பேறு காலத்திலும், மருத்துவத் தொழிலிலும் வலியை போக்குவதில் இது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட விசேஷ கலவையிலிருந்து நீண்ட நேரமாக வலியால் அவதிப்படும் நோயாளிகள் கூட தங்களுடைய பழைய, தீராத வலியிலிருந்து நிவாரணம் பெற முடியும் என்று சோதனை மூலம் கண்டறிந்துள்ளனர். ஹாவர்ட் மருத்துவக்கல்லூரி ஆய்வாளர்கள், மிளகைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்த மருந்து:

வலியுள்ளவர்களின் உடலில் உள்ள எந்த ஒரு நரம்புக்கும் கெடுதல் ஏற்பட்டால் அதை முழுமையாக தீர்க்கிறது. மக்கள் வலியால் அவதிப்படும் போது வலி நிவாரணியாக சாதாரண மாத்திரைகளை பயன்படுத்தி வருகின்றனர். ஆனால், அதுபோன்ற மாத்திரைகள் உடலில் வேறொரு பாகத்திற்கு கேடு விளைவிக்கிறது. இந்த சோதனையை ஒரு எலியிடம் செய்து பார்த்துள்ளனர். அதன்படி, எலிக்கு சாதாரண வலி நிவாரணி மாத்திரை தரப்பட்டது. அரை நிமிடத்திற்கு பிறகுதான் எலிக்கு வலி குறைந்தது தெரியவந்தது. ஆனால் மிளகை வைத்து செய்த புது ஆய்வால், வலி மிக விரைவிலேயே குணமாவது மட்டுமல்லாமல், நோயாளிக்கு முன்பு இருந்த பழைய நோய்களும் குணமடைகின்றன என்று தெரிவிக்கின்றனர்.




**அன்பு மாணவர்களே, பெற்றோர்களே, வழிகாட்டும் ஆசிரியர்களே!**

2008ஆம் ஆண்டு தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள (தற்போது தரம்-04 இல் கற்கும்) இளம் சிறார்களை பாடத்திட்ட ஒழுங்கில் இறுதிப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் நோக்கில் எமது அயராத முயற்சியாலும் பிரபல இளம் தலைமுறை ஆசிரியர்களான து.திலீப்குமார் - கொழும்பு, சண்.சுதர்சன் -கண்டி, தி.சுரேஸ்குமார்-கம்பளை மற்றும் பிரபல ஆசிரியர்களின் கூட்டுமுயற்சியினாலும் உருவாக்கப்பட்ட படிமுறை மாதிரிப்பரீட்சை வினாத்தாள்கள் இப்பகுதியில் வாரந்தோறும் வெளிவரும். இதனை மாணவர்கள் தொடர்ந்து பயிற்சி செய்தால் பரீட்சையில் வெற்றி அடைவதுடன் மாணவர்களின் முன்னேற்றம் இயல்பாகவே புரியும் என்பது எமது அசையாத நம்பிக்கை. அந்த வகையில் எட்டாவது வினாத்தாள் இன்று வெளிவருகின்றது.

**இவ்வாரப் பரீட்சையையொட்டி, எப்பத்திரிகையிலும் இல்லாத ஒரு விசேட சேவையை எமது கல்விச் சுடர், முதல்முறையாக ஆரம்பித்து வெற்றிநடைபோடுகின்றது.**

அதாவது, இப்பகுதியில் பிரசுரமாகும் படிமுறைப்பரீட்சை வினாத்தாளுக்கு அன்றையதினமோ அல்லது அடுத்துவரும் நாட்களில் மாணவர்கள் சுயமாக விடையளித்து இவ்வினாத்தாளை எமக்கு தொடர்ந்துவரும் வியாழக்கிழமைக்கு முன் அல்லது வியாழக்கிழமை கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தால், அவை எமது கல்விச்சுடர் ஆசிரியர் குழுவினால் திருத்தி, புள்ளியிடப்பட்டு மறுநாளே தங்களுக்குத் தபாலிடப்படும். நீங்கள் இவ்வினாத்தாளை அனுப்பும் போது அதனுடன் தங்கள் சுயமுகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை ஒன்றையும் அனுப்புதல் அவசியமாகும். பாடசாலைகள், கல்வி நிலையங்கள் அதிக வினாத்தாள்களை அனுப்பவேண்டி இருப்பின், அதனை அனுப்பும் போது அதன் நிறைக்கேற்ப பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட பெரிய கடிதஉறை ஒன்றையும் வைத்து அனுப்புதல் அவசியமாகும்.

வினாத்தாளின் மேலே உள்ள சுயவிவரங்கள் யாவும் தெளிவாகப் பூர்த்தி செய்யப் பட்டிருத்தல் வேண்டும்.

**உங்கள் வினாத்தாள்களை அனுப்பவேண்டிய முறை:-**

கடித உறையின் வலதுபக்க மேல்மூலையில் படிமுறைப் பரீட்சை -08 (Steping Exam - 08) எனக் குறிப்பிட்டு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

| | |
|---|---|
| ஆசிரியர்,<br>கல்விச்சுடர்,<br>உதயன் பணிமனை,<br>இல.361,<br>கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். | ஆசிரியர்,<br>கல்விச்சுடர்,<br>சுடர்ஒளி பணிமனை,<br>இல.85,<br>ஜயந்த மல்லிமராச்சி மாவத்த,<br>கொழும்பு-14. |

**"எந்தமாதிரியும் இல்லாத முன்மாதிரியான கல்விச்சுடரின் புதிய படைப்பு"**

மாணவர்களே! பெற்றோர்களே! வழிகாட்டும் ஆசிரியர்களே!

எம்முடன் இணைந்து இந்த அளப்பெரிய சேவையின் பயனை அனுபவிக்க உங்களுக்குக் கிடைத்துள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்.

**பாராட்டப்படும் கல்விச்சுடர் மாணவச் செல்வங்கள்**

படிமுறைப் பரீட்சை - 06 இல் சிறந்த புள்ளிகளைப் பெற்ற கீழ்வரும் மாணவர்களை நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



M.சர்ஜூன் 179 (மாவனல்ல) | டன்ஸ்டன் ஹென்றிக் 176 (கல்முனை-01) | M.நுஹ்மான் 158 (இப்பாகமுவ) | S.அஹ்தர் அலி 158 (உ.ஞக்காப்பள்ளம்) | T.பிரதீப் 152 (மட்டக்களப்பு)

F.முஸர்பா 180 (ஏறாவூர்)
R.ஜான்ஸி 152 (தெரணியகலை)
S.சரண்யன் 170 (திருமலை)
V.செந்தூரன் 152 (கல்லாறு)
R.கானப்பிரியா 158 (வெள்ளவத்தை)

**நிந்தவூர் மாணவர்களுக்கு .......**

எமது கல்விச்சுடரின் படிமுறைப் பரீட்சை U.L.M சாஜித் அவர்களின் தலைமையில் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறுகின்றது. பரீட்சையில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் பி.ப 4.30 மணிக்கு கீழ்வரும் முகவரிக்கு நேரில் சமுகமளிக்கலாம் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

ILMA HOLYDAY SCHOOL, Bank Road, Ninthavur-12.

தொடர்புகட்கு:- 0779597407

- கல்விச்சுடர் ஆசிரியர்-

U.L.M சாஜித் அவர்களின் தலைமையில் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெற்ற பரீட்சையில் தோற்றி சிறந்த புள்ளிகளைப் பெற்ற கீழ்வரும் மாணவர்களை நாம் பாராட்டுகின்றோம்.



H.நுஹா (181) | F.சமீஹா (180) | F.நுப்லா (177) | F.ஹஸ்னா (168) | F.நிஸ்பா (165) | M.ஆஷிப் (162)

சுடர் சிந்தனை:- "கல்விக்காக எதையும் தியாகம்செய் - ஆனால் எதற்காகவும் கல்வியைத் தியாகம் செய்யாதே"

## படிமுறைப் பரீட்சை - 08 நேரம்:1மணி

மாணவர் பெயர் : ..............................................................
முகவரி : ..............................................................
கற்கும் பாடசாலை/ : ..............................................................
கல்வி நிலையம் ..............................................................
தொலைபேசி இலக்கம் : ..............................................................

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01.** பின்வரும் பாடலை வாசித்து 1-5 வரையான வினாக்களுக்கு விடை தருக.

மண்ணைக் குயவன் கண்டனன்
மக்கள் தாகம் தீர்த்திடும்
தண்ணீர் வைக்கும் பானையாய்
மண்ணை நொடியில் மாற்றினன்.

1) மண்ணைப் பானையாக மாற்றியவன் யார்?
..............................................................
2) பானையின் உபயோகம் யாது?
..............................................................
3) குயவன் என்பதன் எதிர்ப்பாற் சொல் யாது?
..............................................................
4) தாகம் தீர்ப்பது எது?
..............................................................
5) வெந்நீர் என்பதன் எதிர்ச்சொல்லை பாடலில் இருந்து தெரிந்து எழுதுக.
..............................................................

**02.** பின்வரும் சொற்களின் ஒத்தகருத்துப் பதங்களைத் தருக.


1) அகம் - ..............................
2) உவகை - ..............................
3) சாதுரியம் - ..............................
4) வெகுமதி - ..............................

**03.** பின்வரும் சொற்களின் எதிர்க்கருத்துப் பதங்களைத் தருக.

1) வள்ளல் - ..............................
2) ஞானம் - ..............................
3) புராதனம் - ..............................
4) பகிரங்கம் - ..............................

**04.** பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்றொடருக்குப் பொருத்தமான படத்தைத் தெரிவுசெய்து கோடிடுக.


1) பறக்கும் - முலையூட்டி - உயிரினம்

A  B  C  D 

2) அழகு - மென்மை - மழலை

A  B  C  D 

3) கட்புல செவிப்புல சாதனம்

A  B  C  D 

4) தாவர உண்ணி

A  B  C  D 

**05.** கீழே தரப்பட்டுள்ள வினாக்களில் பிழையான கருத்து இடம்பெறும் விடையின் கீழ்க் கீறிடுக.

1) 1. தலதா மாளிகை பௌத்தர்களின் வழிபாட்டுத்தலம் ஆகும்.
2. வில்பத்து என்னும் இடத்தில் விலங்குகள் சரணாலயம் அமைந்துள்ளது.
3. தோமஸ் அல்வா எடிசன் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்.






**ஹ**ங்கேரி நாட்டில் செக்ஸ் தொழிலை அங்கீகரிக்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது. இதன்மூலம் செக்ஸ் தொழிலாளர்கள், தங்களிடம் வரும் வாடிக்கையாளர்களிடம் ரசீது கொடுத்து பணத்தைப் பெறவேண்டும். இந்தப் பணத்துக்கு வரிவிதிக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது.

## நடுவானில் விமானத்தில் குளித்த பயணி

**ப**றக்கும் விமானத்தில் உள்ள கழிப்பறையில் ஒருவர் குளித்தார். அவர் பெயர் ஜின் ஷெங். சீனாவில் உள்ள நானிங் என்ற இடத்தில் இருந்து சோங்கிங் என்ற இடத்துக்கு புறப்பட்டார். அவர் கழிப்பறைக்குள் சென்றார். ரொம்ப நேரமாக திரும்பி வரவில்லை. சக பயணிகள் ரொம்ப நேரமாக கதவு மூடிக் கிடப்பதாக விமான சிப்பந்திகளிடம் புகார் கூறினார்கள். இதை தொடர்ந்து விமானசிப்பாந்தி ஒருவர் மூடிக்கிடந்த கழிப்பறை கதவை தட்டினார். அவர் திறக்கவில்லை, இதனால் விமான சிப்பாந்தி, சாவி கொண்டு கதவைத்திறந்தார். அப்போது ஒருவர் குளித்துக் கொண்டிருந்தார். உள்ளே இருந்த அவர் தாம் குளித்துக்கொண்டிருப்பதாக கூறியதோடு, ஷாம்பு இருக்கிறதா என்று கேட்டார்.

அவர் இப்போது தான் முதல் முறையாக விமானத்தில் பயணம் செய்கிறார். ''விமானத் தில் குளியல் அறையையும், அதில் சுடுதண்ணீர் வருவதையும் பார்த்ததும் குளிக்கத்தோன்றியது. அதனால் குளித்துவிட்டேன்.'' என்று அவர் கூறினார்.

விமானத்தில் யாரும் குளிப்பது இல்லை என்றாலும், அதை தடை செய்யும் விதிமுறை இல்லாததால், அவரை தண்டிப்பதற்கு வழி இல்லை என்று விமான அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஒளிபரப்பின் போது வாந்தி எடுத்த டி.வி நிகழ்ச்சி தொகுப்பாளர்

சுவீடன் நாட்டைச் சேர்ந்தவர் ஈவா நமீசன். இவர் 'டி.வி 4பிளஸ்' என்ற சேனலில் ஒரு கேம்ஷோ நிகழ்ச்சியை வழங்கிவந்தார். நேரடியாக ஒளிபரப்பாகும் இந்த நிகழ்ச்சி ஒரு போன்-நிகழ்ச்சி ஆகும். இதில் அவர் ஒரு ரசிகருக்கு புதிர் போட்டார். அந்த புதிருக்கு ரசிகர் விடையளிக்க முயன்ற போது, ஈவாவுக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டது. அவர் திடீர் என்று வாந்தி எடுத்தார். தன் தலையை ஒரு பக்கமாக திருப்பிக்கொண்டு வாந்தி எடுத்தார். இதுவும் ஒளிபரப்பானது. உடனே அவர் திரையை விட்டு மறைந் தார்.

சில நிமிடங்களுக்கு பிறகு அவர் மீண்டும் திரையில் தோன்றினார். தொடர்ந்து நிகழ்ச்சியை வழங்கினார். நிகழ்ச்சியின் முடிவில் அவர் இந்த சம்பவத்துக்கு விளக்கம் அளிக்கும் வகையில் ''எனக்கு அந்த 3 நாட்கள் காரணமாக வலி ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து தான் நான் வாந்தி எடுத்தேன்''. என்று குறிப்பிட்டார்

## சூறாவளியின் உதவி

**சூ**றாவளி பெரும் அழிவை ஏற்படுத்தக் கூடியது என்றாலும், அவைகளால் சில நன்மைகளும் உண்டு என்பதை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். காத்ரினா மற்றும் ரீட்டா போன்ற சூறாவளிக்குப் பின், பவழப் பாறைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன என்பது தெரியவந்துள்ளது. கடலில் குளிர்ச்சியை ஏற்படுத்தி, பவழப் பாறைகள் புத்துயிர் பெற அவை உதவ ளஉள்ளன. தீமையினாலும் நன்மை.













## விதவையின் புலம்பல்

வாசலில்
நூற்றி எட்டு
புள்ளிகள் வைத்து
கோலமிடு
கிறேன்...
பாராட்டு
கிடைத்தது!
என் நெற்றி
யில்ஒரு
பொட்டு
வைக்க
சமுதாயம்
தடைவிதிப்பது
ஏன்






**க**ரும்பு லொரிகளை எதிர்பார்த்து யானைகள் காத்து நிற்கின்றன. கரும்பு லொரிகள் வராவிட்டால் மற்ற வாகனங்களை விரட்டி குழப்பம் செய்கின்றன.

தமிழ்நாடு ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் இருந்து கர்நாடக மாநிலத்துக்குச் செல்ல பல குறுகிய வளைவுகள் கொண்ட பாதை உள்ளது. இந்தப் பாதை அடர்ந்த காட்டுப்பகுதியை ஊடறுத்துச் செல்கின்றது. இந்தப் பாதை வழியாக இரு மாநிலங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் இரவு, பகலாக வந்து சென்றவண்ணம் இருக்கும்.

புள்ளிமான் கள், காட்டு எருமைகள், சிறுத்தைப் புலிகள், கரடிகள்,காட்டு நாய்கள், யானைகள் என பல விலங்குகள் இங்கு உண்டு

குளிர்காலங்களில் இந்த வன விலங்குகள் கொசுக்கடி மற்றும் பூச்சிக்கடியில் இருந்து தப்பிக்கொள்ளவும், உடலை உஷ்ணமாக வைத்துக்கொள்ளவும் காட்டுப் பகுதியில் இருந்து வீதிக்கு வருகின்றன. அதுபோல் வறட்சிக்காலத்தில் தண்ணீரை தேடி யானைகள் கிராமங்களையும், கிணற்றுப்பகுதிகளையும் நாடி வருகின்றன.

இவ்வாறு யானைகள் கூட்டமாக வந்தால் அவை தண்ணீர் குடித்து விட்டு மீண்டும் காட்டுக்குள் சென்றுவிடுவது உண்டு. சில ஆண் யானைகள் வீதிக்கு வந்தால் அங்கேயே அதிக நேரம் சுற்றித்திரிகின்றன. நெடுஞ்சாலையில் சுற்றித் திரியும் யானைகளுக்கு அந்த வழியாக கரும்பு ஏற்றி வரும் லொரிகளின் சாரதிகள் , ஒன்றிரண்டு கரும்புக் கட்டுகளை எடுத்துக் கொடுப்பது வழக்கம். அந்த கரும்புகளை யானை தின்று விட்டு பசி அடங்கியதும் காட்டுப் பகுதிக்குள் சென்றுவிடும். இதனால், கரும்புத் தீனிக்காக நெடுஞ்சாலைக்கு யானைகள் தினமும் வந்து காத்து இருக்க தொடங்கிவிட்டன. லொறி கள் வரத் தாமதமானால் யானைகள் அந்த வீதி யில் சர்வ சாதாரணமாக நடந்து செல்வதும் உண்டு. கரும்பு லொரிகள் வந்தால் யானைகளுக்கு கொண்டாட்டம் . லொரிகள் வந்ததும் அந்த லொரிகளை யானைகள் துதிக்கையால் துளாவிப் பார்க்கும். கரும்பு இருந்தால் பிரச்சினை இல்லை. லொரிச் சாரதிகள் யானைகளுக்கு கரும்புகளை கொடுத்துவிடுவர். ஆனால் கரும்பு இல்லை என்றால், அந்த வாகனங்களை துரத்தி யானைகள் குழப்பம் செய்கின்றன.




**இ**ந்தியாவின் பிரபல நிறுவனங்களில் ஒன்றான 'இந்துஸ்தான் லேட்டக்ஸ் நிறுவனம் சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ள 'வைப்ரேட்டிங் கொண்டம்' பலத்த சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கின்றது. கிரசண்டோ என்ற பெயரில் வெளியாகும் 3 ஆணுறைகள் கொண்ட இந்தப் பாக்கெட்டின் விலை இந்திய ரூபாயில் ரூ.125 . இதில் அதிர்வுகளை உண்டாக்கும் றப்பர் வளையமும் உள்ளது.

மத்திய பிரதேச மாநில பொதுப்பணித் துறை அமைச்சரான கைலாஷ் விஜய் வார்கியா (பா.ஜ.க.) பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு எழுதிய கடிதத்தில் இந்த ஆணுறையைத் தடைசெய்யும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார்.

இந்தூர் தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரான இவருக்கும் இதே தொகுதியில் பா.ஜ.க. எம்.பியான சுமித்ரா மகாஜனுக்கும் பனிப்போர் நிலவிவருவது அரசியல் வட்டாரத்தில் மிகவும் பிரசித்தம். இந்த சுமித்ராவின் மகனான மந்தார் மகாஜன்தான் மத்திய பிரதேசத்தில் கிரசண்டோ ஏஜென்சியை எடுத்திருக்கிறார். எனவே, பழிவாங்கும் நோக்கத்தில்தான் கைலாஷ் இப்படி நடந்துகொள்கிறார் என்பது பரவலான கருத்து. எது எப்படியோ, இந்த சர்ச்சைக்குப் பிறகு கிரசண்டோவின் மவுசு மேலும் அதிகரித்துவிட்டதுதான் உண்மை.

கைலாஷின் கடும் எதிர்ப்பால் பயந்துபோன இந்துஸ்தான் லேட்டக்ஸ் நிறுவனத் தலைவரான எம்.ஐயப்பன் 'மத்திய பிரதேசத்தில் கிரசண்டோ விற்கப்படாது' என்றுகூறி நிலைமையை சகஜமாக்க முயன்றார். ஆனால், கிரசண்டோவுக்கு ஏற்பட்ட கட்டுக்கடங்காத மவுசினால் ஒருவாரத்துக்குள்ளாகவே 'கிரசண்டோவின் விற்பனை தொடரும்' என்றுகூறி இந்துத்வா ஆதரவாளர்களின் கனவைத் தகர்த்தெறிந்தார்.

மத்திய பிரதேசத்தின் உணவு மற்றும் மருந்து கட்டுப்பாட்டுத் துறையை சேர்ந்த உயரதிகாரி ஒருவர், ''இந்த ஆணுறை குறித்து எங்களுக்கு எந்த முறைப்பாடும் மக்களிடமிருந்து வரவில்லை. மாநில அரசிடமிருந்தும் இதற்கெதிராக எந்த உத்தரவும் வரவில்லை'' என்று குறிப்பிட்டார்.

கிரசண்டோ ஆணுறை பாக்கெட்டில், 3 ஆணுறைகளுடன் ஒரு 'வைப்ரேட்டிங் ரிங்' உள்ளது. இது மிகச் சிறிய பாட்டரியால் இயங்கக்கூடியது.

விறைப்புத்தன்மை குறைந்தவர்கள் இந்த வளையத்தை பொருத்திக் கொண்டு முழு இன்பம் பெறமுடியும் என்றும் இந்த 'வைப்ரேட்டிங் ரிங்' தொடர்ந்து 20நிமிடங்கள் இயங்கக்கூடியது என்றும் கூறுகிறார் இந்துஸ்தான் லேட் டக்ஸ் நிறுவனத் தலைவர் ஐயப்பன்.

# ஸ்ரேயாவுடன் வடிவேலு டூயட்!

ரஜினி, விஜய், அஜித், விக்ரம் என முன்னணி நாயகர்களுடன் நடிக்கும் ஸ்ரேயா, வடிவேலுவுடன் டூயட் பாடுகிறார். 'இந்திரலோகத்தில் நா.அழகப்பன்' படத்தில் வடிவேலுவுக்கு மூன்று வேடங்கள். வேடத்துக்கு ஒரு நாயகி என்று மூன்று நாயகிகள். இது போதாதென்று நான்காவதாக வந்திருக்கிறார் ஸ்ரேயா. படத்தில் வடிவேலு தனக்கு எப்படிப்பட்ட பெண் வேண்டும் என கனவு காண்கிறார். அந்தக் கனவின் கன்னியாக ஒரு பெண் வருகிறார். அந்த பெண்ணுடன் வடிவேலு டூயட் பாடுகிறார். இந்தக் காட்சிக்காக ஸ்ரேயாவை அணுகியிருக்கிறார் இயக்குநர். பிரபல்யமான நாயகன்களுடன் நடிக்கும் நான் ஒரு பாடலுக்கு ஆடுவதா? என்று மறுத்திருக்கிறார். ஒரு பாடல்தான ஆனால் சம்பளம் ஒரு படத்துக்கு தரும் சம்பளம் தருகிறோம் என்று தயாரிப்பாளர்கள் கூறியதும் ஒத்துக்கொண்டுள்ளார் ஸ்ரேயா. திருநெல்வேலி கல்லிடைக்குறிச்சி அருகே ஸ்ரேயாவை வைத்துப் பாடல் காட்சியை எடுத்து வருகிறார்கள்.



# அழகிய தமிழ் மகன் பாடல் லீக்!

'சிவாஜி'யைத் தொடர்ந்து 'அழகிய தமிழ் மகன்' படத்தின் பாடல்களும் சில இணைய தளங்களில் லீக் ஆகியுள்ளன. சமீபத்தில், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பாடல்கள் அனைத்தும் அதிகாரபூர்வமாக ஆடியோ கசட் வெளியாவதற்கு முன்பே இணையத்தளத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின. பிறகு படக்காட்சிகளும் இணையத்தளத்தில் வெளிவந்தது. இது குறித்து ஏவி.எம்.தரப்போ, இயக்குநர் ஷங்கர் தரப்போ எந்த விளக்கத்தையும் வெளியிடவில்லை. இந்நிலையில் விஜய், நமீதா, ஸ்ரேயா நடித்துள்ள 'அழகிய தமிழ் மகன்' படத்தில் பாடல்களும் இப்போது இணையத்தளத்தில் வெளியாகியுள்ளன. சிவாஜி படத்திற்கும் ஏ.ஆர்.ரஹ்மான்தான் இசை. இந்தப்படத்திற்கும் ரஹ்மான்தான் இசை. அதிகாரப்பூர்வ ஓடியோ வெளியீட்டுக்கு முன்பாகவே 'அழகிய தமிழ் மகன்' படத்தின் பாடல்களை இப்போது சில இணைய தளங்களில் இலவசமாக கேட்க, டவுண்லோட் செய்ய முடிகிறது. இதுகுறித்து தயாரிப்பாளர்கள் மற்றும் இயக்குநர்கள் தரப்பில் கேட்டபோது, படத்தில் பாடல் உரிமையை எந்த இணையத்தளத்திற்கும் நாங்கள் வழங்கவில்லை என்று மறுத்துள்ளனர்.



சிந்துதுலானி

அர்ச்சனா

'நேற்று இன்று நாளை' படப்பிடிப்பின்போது....



# ழமான முத்தக் காட்சியில் காம்னா

றாசன் ஆரம்பித்து வைத்த 'முத்தப் பரம்பரையில்' பலரும் அவ்வப்போது வந்து சேர்ந்தபடிதான் இருக்கின்றனர். அந்தப் ரையில் இப்பொழுது இணைந்துள்ளவார்கள் தான் ஜீவனும், காம்னாவும். 'மச்சக்காரன் படத்தில் காம்னாவும், ஜீவனும் த்துக்கொள்ளும் ஆழமான முத்தக் காட்சி இடம்பெறுகின்றதாம். படத்தில் ஒரு முத்தம் மட்டுமல்லாது பல இடங்களில் ாவுக்கு முத்தமிட்டு ஒரு முத்தப் புரட்சியையே ஏற்படுத்தியுள்ளாராம் ஜீவன். முத்தக் காட்சிகளில் நடிக்க காம்னா முழு ழைப்புக் கொடுத்துள்ளாராம். இதற்காக இயக்குநரிடம் பாராட்டையும் பெற்றாராம் காம்னா. தமிழ்வாணன் இயக்கத்தில் வாகும் 'மச்சக்காரன்' முழுக்க முழுக்க இளமை ததும்பும் காதல் கதையாம். படத்தில் இடம் பெற்றுள்ள அனைத்துப் ாடல்களும் வசீகரிக்க வைக்கும் வகையில் உள்ளனவாம். படம் முழுவதையும் கொமடியில் பின்னிப் பிணைந்திருக்கிறா ள். கொமடிக்கென 11 பேரை ஒதுக்கியுள்ளனராம். இதுவரை வந்த தமிழ்ப்படங்களில் கொமடிக்கென்று இத்தனை போர் கொத்தாக நடித்தத்தில்லை என்று கூறுகிறார்கள். படத்தில் இளமை பொங்க நடித்துள்ளார் காம்னா. பட அனுபவம் குறித்து காம்னா கூறுகையில்:- ''படத்தில் எனக்கு கொடுக்கப்பட்ட வேடத்தை அருமையாக செய்தி ருக்கிறேன். முத்தக் காட்சி குறித்து கூறமுடியாது. முத்தமிடுவது பாவச் செயல் அல்ல. அன்பை, உணர்வை அழகாக வெளிப்படுத்தும் ஒரு வழிதான். எனது வேடத்துக்கு ஏற்றது போல் நான் நடித்துள்ளேன்'' - என்றார்.



காம்னா

# ஹரி படத்தில் விஜய்

வற்றிப் படஇயக்குநர் ஹரி, அடுத்து விஜய்யை வைத்து ஒரு படத்தை இயக்கத் தயாராகி வரு ர். விஜய்க்கு ஏற்ற ஓர் அருமையான கதை ஒன்றை தயார் செய்தும் விட்டாராம். முன்னணி நாயகர்களை வைத்து அடுத்தடுத்து ஹிட் படங்களைக் கொடுத்து வருபவர் ஹரி. சரத்குமார், , பிரஷாந், சூர்யா, சிம்பு, விஷால் என முன்னணி நாயகர்களை வைத்து அவர் இயக்கிய படங் னைத்துமே அமோக வரவேற்பைப் பெற்ற படங்கள்தான். தற்பொழுது சூர்யா, அசினை து 'வேல்' படத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார் ஹரி. இப்படத்தின் படப்பிடிப்பில் ா சம்பந்தப்பட்ட ஒருசில காட்சிகளைத் தவிர மற்றைய அனைத்துக் காட்சிகளும் முடிந்து ்டன. பக்காவாகத் திட்டமிட்டு படம் எடுக்கும் சில இயக்குநர்களில் ஹரியும் ஒருவர். ந்த நிலையில் எல்லா நாயகர்களையும் வைத்து கிட்டத்தட்ட படம் எடுத்துவிட்ட நிலை ில் ஹரி அடுத்து விஜய்யை வைத்துப் படம் எடுக்க ஆசைப்பட்டுள்ளார். இது தொடர் பாக விஜய் தரப்பிடம் பேச, அவர்களோ முதலில் நல்ல கதையை தயார்செய்யுமாறு கூறிவிட்டார்களாம். இதையடுத்து விஜய் விருப்பப்படி கதையை உருவாக்கியுள்ளார் ஹரி. விஜய்க்கு கதை பிடித்து விட்டால் படத்தை விஜய்யும், ஹரியும் கைகோர்ப் பார்கள்.

# நிறைவேறிய த்ரிஷா ஆசை

தேவதைகளின் ஆசைகள் உடனடியாக நிறைவேறுமாம். நடிப்புத் திறமையை முழுமையாக வெளிப்படுத்தும் படங் களில் நடித்து விருதுகளைப் பெறவேண்டும் என சில மாதங்களுக்கு முன் தனது ஆசையை வெளியிட்டார் த்ரிஷா. அது இப்போது நிறைவேறியிருக்கிறது. மோசர் பியர் நிறுவனமும் பிரகாஷ்காஜின் டுயட் மூவிஸ் நிறு வனமும் இணைந்து ராதாமோகனின் 'அபியும் நானும்' என்ற படத்தை தயாரிக்கின்றனர். இந்தப்படத்தில் த்ரிஷா நடிக்கிறார் இது குறித்து அவர் கூறியதாவது:- ''பிரகாஷ்ராஜுடன் பல படங்களில் சேர்ந்து நடித் திருந்தாலும் இது எனக்கு முக்கியமான ஒரு படம். இதன் மூலம் எனக்கு பல விருதுகள் கிடைக்கும்'' - என்றார் த்ரிஷா.

# கொண்டவனை பகிர்ந்து கொண்டதால் பறிபோன வாழ்வு



## உண்மைக்கதை

கிராமப் புறங்களை சேர்ந்த படிக்காத பெண்கள் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஆண்களை சார்ந்து இருக்க வேண்டிய நிலையே இன்னமும் உள்ளது. எனவே குடும்ப வாழ்வில் ஒரு பிரச்சினை என்று வந்தால் பெண்கள் யோசித்துத்தான் முடிவு எடுக்க வேண்டும். அவசரப்பட்டு கணவனை முழுமையாக நம்பி புத்தியை தவறாவிட்டால் பின்னர் ஆயுள் முழுவதும் அல்லல்பட வேண்டியதுதான் வரும்.

கோமதி அழகி மட்டுமல்ல, அடக்கமானவள். 15வயதிலேயே திருமணம் நடந்து விட்டதால் கணவனே கதி என்றாகிவிட்டது. கணவரும் அன்பானவர்தான். வியாபாரம் செய்து வந்தார். வியாபாரமும் நன்றாக நடந்ததால் குடும்பத்தில் பிரச்சினை இல்லாமல் சுமுகமாகவே சென்றது.

ஆனால் குடும்பத்தின் மழலை சத்தம் மட்டும் இல்லை. இது மட்டுமே பிரச்சினையாக இருந்தது. கோமதியின் கணவர் இதில் கூட அதிக அக்கறை காட்டவில்லை. வியாபாரமே கதி என்று இருந்தார்.

ஆனால் கோமதி தன் கணவனை இரண்டாம் தாரம் கட்டிக் கொள்ளச் சொல்லி நச்சரிக்க ஆரம்பித்தாள். யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளும் என்பது போல கணவனுக்கு கோமதியே பெண் தேட ஆரம்பித்தாள்.

அக்கம் பக்கத்தில் இருப்பவர்களும், உற்றார் உறவினர்களும் அவளுக்கு எவ்வளவோ புத்திமதி சொல்லத் தொடங்கினர். ஆனால் யார் சொன்னதையும் அவள் கேட்கவில்லை. ''எத்தனை பெண்கள் வந்தாலும் என்னைக் கைவிட மாட்டார். நீங்க உங்க வேலையைப் பாருங்கள்'' என்று அவர்களின் வாயை அடைத்து விடுவாள்.

கோமதியின் நச்சரிப்பு தாங்காமல் அவர் கணவர் இரண்டாம் திருமணம் செய்ய சம்மதித்தார். ஒரு ஏழ்மையான குடும்பத்து பெண்ணை பார்த்து கோமதியே முன் நின்று கோயிலில் திருமணம் செய்து வைத்தாள். கோமதிக்கு அப்போது வயது அதிகம் இல்லை. 30 வயதுதான் இருப்பினும் கணவனை இன்னொரு பெண்ணுடன் பகிர்ந்து கொண்டாள்.

திருமணம் ஆன முதல் மூன்று மாதம் வரை எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால் கோமதியிடமிருந்து அவர் கணவர் படிப்படியாக விலகத் தொடங்கினார். இரண்டாம் மனைவி லட்சுமியிடம் அன்பு திரும்பியது. மிக ஒல்லியாக இருந்த லட்சுமி கணவனின் அன்பான கவனிப்பால் மாறத் தொடங்கினாள். தோற்றம், பேச்சு, நடை, உடை,பாவனை எல்லாம் மாறின.

கோமதி நினைத்தது போலவே பத்து மாதத்தில் லட்சுமிக்கு பெண் குழந்தையும் அந்த வீட்டில் பிறந்தது. அதன்பின் கோமதி பிள்ளைக்கு ஆயாவாக மாறிவிட்டாள். இரண்டாவது குழந்தையும் பிறந்தது. அதையும் கோமதியே வளர்த்து ஆளாக்கினாள். ஆனால் கணவன் கோமதியிடம் பேசுவது கூட கிடையாது. அவரது குடும்பம் லட்சுமியுடையது மட்டும் தான் என்பது போல எண்ணினார். கோமதிக்கு அப்போது தான் தவறு புரிந்தது. தலைக்கு மேல் வெள்ளம் போய்விட்ட சூழ்நிலையில் என்ன செய்வது? சோதனை மேல் சோதனை. தனக்கு உரிய சொத்தை பிரித்து தருமாறு கேட்டாள். ஆனால் அவள் கணவர் அதை ஏற்கவில்லை! சொத்தை பிரித்து கொடுக்க மறுத்து விட்டார்.

இதனால் விலகி வாழவும் முடியாமல் ஒட்டி உறவாடவும் முடியாமல் தவிக்கிறாள்.

பெண்கள் எப்பொழுதும் விழிப்புடன் இருக்க வேண்டும். பின் விளைவுகளைப் பற்றி எண்ணிப் பார்க்காமல் அவசரப்பட்டு நடந்து கொண்டால் கோமதிக்கு ஏற்பட்ட கதி தான் ஏற்படும் என்பதை மறந்துவிடக்கூடாது.

## சொற்சிலம்பம் போட்டி இல. 286

சொற்சிலம்பம் 286 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித் தினம் நவம்பர் 03ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் நவம்பர் 18 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.284 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
**'சுடர் ஒளி'**
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 284

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | று | 2 சு | 3 வை | ■ | 4 நா | 5 த | ம் |
| று | ■ | 6 ப | ரி | 7 கா | ர | ம் | ■ |
| 8 ப | 9 த | ம் | ■ | 10 வி | த | ■ | 11 த |
| 12 து | ரு | ■ | 13 ஆ | ய | ர் | 14 பா | டி |
| ■ | 15 ம | 16 க | ர | ம் | ■ | த | ■ |
| 17 க | ர் | வ | ம் | ■ | 18 த | ரா | 19 சு |
| ற் | ■ | சு | ■ | 20 இ | ரு | ட் | டு |
| 21 பு | ல | ம் | ப | ல் | ■ | 22 சை | கை |

## சொற்சிலம்பம் போட்டி இல. 284

1. பி.எஸ்.என்.மூர்த்தி, 44/3, பிட்டவுன், ஹற்றன், 22000.
2. ஸரீனா ஜிப்ரியா, 'ரஹ்மத் மன்ஸில்', 141/1, குமாரதுங்க மாவத்தை, மாத்தறை 81000.
3. திரு.எம்.சி.இயேசுதாசன், 155/07, ஜம்பெட்டா வீதி, கொழும்பு-13.

### பாராட்டுப் பெறுவோர்

1. பயஸ் கிறகோரி, மட்டக்களப்பு.
2. ஏ.ஆர்.பாத்திமா ஸீமா ஹஸ்மத், ஏறாவூர்- 02.
3. திருமதி வ. பாலசுப்பிரமணியம், தம்பிலுவில்- 01.
4. செல்வி பாத்திமா முபாறக்கா, அம்பாந்தோட்டை.
5. திருமதி தவமணி அமரலிங்கம், கொழும்பு- 06.
6. செவ்வன் மொ.அப்துல்லா மொஹிதீன், வெல்லம்பிட்டிய.
7. ஆர்.ராகினி இராமச்சந்திரன், டிக்கோயா.
8. செல்வி எம்.எஸ்.பாத்திமா சிபானா, ஏறாவூர்- 03.
9. செல்வி பஸ்லினா இஸ்ஸடீன், கொழும்பு- 14.
10. எப்.வெரோணிக்கா, தலவாக்கலை.
11. எம்.என்.எப்.நுஸ்கா, வெலிகம.
12. எஸ்.ஜெலினி பெர்னாண்டோ, மன்னார்.
13. திருமதி பரமேஸ்வரி சிறிஸ்கந்தராசா, வெள்ளவத்தை.
14. யோ.லிசாந்தினி, வவுனியா.
15. முஹம்மத் ஸாஜித், வெலிகம.

## சொற்சிலம்பம் போட்டி இல. 286

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 | | ■ |
| 6 | | ■ | 7 | | | ■ | 8 |
| | ■ | 9 | | | ■ | 10 | |
| 11 | 12 | | | ■ | 13 | | |
| ■ | 14 | | ■ | 15 | | | ■ |
| 16 | | ■ | 17 | | | ■ | 18 |
| 19 | | 20 | | | ■ | 21 | |
| | ■ | 22 | | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.286

### இடமிருந்து வலம்

1. ஒன்றைச் செய்வதற்கு முடியாதவன்.
6. புழுதியாய்ப் பறப்பது.
7. குஞ்சு வருவது இதிலிருந்து.
9. தேர் போன்ற வாகனம்.
10. பாவம் புரிந்தவன்.
11. மகன்/முருகன்/ குறிஞ்சி நிலத்துக்கு உரியவன்.
13. பிள்ளைப் பேறு கிட்டாத தன்மை.
14. விழி
15. சவம்/சடலம்.
16. பெருக்கற் குறி.
17. நிறை/எடை/ கனம்.
19. இணக்கச் சொல்.
21. கல் தோன்றிப் பின் தோன்றியது.
22. கூட்டுவதும் பெருக்குவதும் இதனால்.

### மேலிருந்து கீழ்

1. கரம் உயர்த்து.
2. இர.
3. பாலியல் வக்கிரம் கொண்டவன்/ மிலேச்சன்.
4. மட்டமானது/ மொட்டை விழுந்தாலும் இப்படிச் சொல்வர்.
5. ஒரு பலகார வகை.
8. அரிசியைத் தீட்டக் கிட்டுவது.
9. இயலாமல் பணிவது.
10. இடையில் இல்லாததை இணைப்பது.
12. ஓர் இராசி.
13. நாற்றம்.
15. தடி.
16. பத்தாம் திதி.
17. கால்.
18. வாகனம்.
20. போதை தருவது.
21. சமய.

2) 1. தேயிலை ஆங்கிலேயரால் நமது நாட்டுக்கு அறிமுகம் செய்யப்பட்டது.
2. இலங்கையின் மிகஉயர்ந்த நீர்வீழ்ச்சி ஏஞ்சல் ஆகும்.
3. ஒக்டோபர்-01 இல் சிறுவர்தினம் கொண்டாடப்படுகிறது.

3) 1. வடமாகாணத்தின் தலைநகர் வவுனியா.
2. ஆகாயத்தாமரை கடல்வாழ் தாவரமாகும்.
3. மண்புழு விவசாயிக்கு நன்மை செய்கிறது.

06. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிந்து எழுதுக.
1) இலங்கையின் இயற்கைத் துறைமுகம் ................................
( கொழும்பு , திருகோணமலை, காங்கேசன்துறை )
2) சீனித்தொழிற்சாலை ............................ அமைந்துள்ளது.
( கந்தளாயில், புத்தளத்தில், பரந்தனில் )
3) உலகில் மிகப்பெரிய சமுத்திரம் ........................ ஆகும்.
( பசுபிக், அத்திலாந்திக் , அந்தாட்டிக் )
4) ஐம்பதாவது ஆண்டில் கொண்டாடப்படும் விழா
( வெள்ளிவிழா, பொன்விழா, வைரவிழா )
5) திருக்குறளில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை .......... ஆகும்.
( 1330, 1030, 1300 )

07. கீழேயுள்ள வினாக்களில் கூட்டினுள் உள்ள இலக்கங்களுக்குப் பதிலாக பயன்படுத்தக்கூடிய இலக்கங்களைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
1) [6 + 7] + 9 = 22

1. [5 + 9]    2. [18 - 5]    3. [3 x 4]

2) 10 + [5 x 4] = 30

1. [40 ÷ 2]    2. [10 + 8]    3. [30 - 6]


08. கீழே இலக்கங்கள் குறியீடுகளால் காட்டப்பட்டுள்ளது. அவற்றை அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.

⊘ -3   ✡ -4   ⊠ -7   ⚠ -9   ▨ -0   ✳ -6   ◈ -1



1) ⊠ ✳ ⊘ எனும் குறியீட்டுத் தொகுதி குறிக்கும் எண் யாது?
1. 936    2. 963    3. 763


2) சதுர எண்களைக் குறிக்கும் குறியீட்டுத் தொகுதி யாது?
1. ▨ ✡ ⊠    2. ◈ ✡ ⚠    3. ⊘ ✳ ⊠

3) பெறுமதி கூடிய எண்களைக் காட்டும் குறியீட்டுத் தொகுதி
1. ⚠ ✳ ⊠    2. ⚠ ⊠ ✡    3. ⚠ ⊠ ✳

09. பின்வரும் வினாக்களுக்கு மிகச்சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
1)  தரப்பட்டுள்ள திண்ம உருவின் பெயர்
1. கூம்பகம்.    2. நான்முகி.    3. அரியம்.

2) முழு உருவின் 2/6 பங்கு நிழற்றப்படாத உருவைத் தெரிவு செய்க.


1.     2.     3. 


3) அருகே காட்டப்பட்டுள்ள செவ்வக உருவில் இருந்து 2cm பக்க நீளத்தைக் கொண்ட எத்தனை சதுரங்களைப் பெறமுடியும்?


1. 4    2. 8    3. 12

4) 2, 3, 6, 7, 10, 11, .... எனும் தொடரில் உள்ள ஒற்றை எண்களின் கூட்டுத்தொகை
1. 19    2. 28    3. 21

5) 2, 5, 11, 23, ........, ........ எனும் தொடரில் அடுத்துவரும் இரு எண்களும் முறையே
1. 33, 43    2. 47, 95    3. 46, 94

10. தரப்பட்டுள்ள உருக்கோலத்தை நன்கு அவதானித்த பின் கோடிடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவுசெய்க.
1) 

2) 


11. பின்வரும் உருக்களை அவதானித்து அவற்றின் பெயர்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் தருக.
1) 
2) 

த : ..............................    த : ..............................
ஆ: ..............................    ஆ: ..............................

3) 
4) 

த : ..............................    த : ..............................
ஆ: ..............................    ஆ: ..............................

12. பின்வரும் தமிழ்ச் சொற்களின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
1) ஓவியர் - ..............................
2) மின்னழுத்தி - ..............................

13. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.
1) Police station - ..............................
2) Media - ..............................

14. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில்எழுதுக.
1) உசாவிய - ..............................
2) அம்ப - ..............................

15. தரப்பட்டுள்ள படத்தை நன்கு அவதானித்து திருத்தமான எழுவாய், பயனிலைகளுடன் கருத்துள்ள பொருத்தமான வசனப்பிழைகள் அற்ற ஐந்து வாக்கியங்கள் எழுதுக.



1) ..............................................................
2) ..............................................................
3) ..............................................................
4) ..............................................................
5) ..............................................................

முற்றும்


தரம்-04 மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்காக நடாத்தப்படும்

படிமுறைப் பரீட்சை 08 - 2007
ஆசிரியர்:- திரு.சண்.சுதர்சன் (குறிஞ்சி வெளியீடு)
(மதீனா தேசிய பாடசாலை, கண்டி. தொ.பே.இல:071-3456020 )



# தாய்மையின் ஆரம்பநிலை

## பயம் வேண்டாம், எச்சரிக்கை போதும்!

திருமணமான பெண்ணின் வாழ்க்கையில் ஒரு மகத்தான கட்டம், கருத்தரிக்கும் காலம். இச்சமயத்தில் வளரும் சிசுவின் தேவைகளுக்காக, தாயின் உடம்பில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த மாற்றங்கள், ரசித்து உணரக்கூடியவையாக, உற்சாக மூட்டுபவையாக இருப்பதுதான் விசேஷம். அதே சமயம், உடல்ரீதியான மாற்றங்களால் சின்னச் சின்ன பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். வாழ்க்கை முறை, உணவுப் பழக்கம் மற்றும் பழக்கவழக்கங்களில் மாறுதல் ஆகிய பிரச்சினைகளிலிருந்து விடுதலை பெற, சில யுக்திகளைக் கையாள்வது அவசியம்.

திருமணமான பெண்களுக்கு காலை நேரத்தில் வாந்தி அல்லது குமட்டல் பிரச்சினைகள் இருந்தால், அது கருவுற்றிப்பதற்கான அறிகுறியாகக் கருதப்படுகிறது. கர்ப்பத்தின்போது உடம்பில் தோன்றும் ஹோர்மோன் மற்றும் மனரீதியான மாற்றங்களால், வாந்தி அல்லது குமட்டல் தோன்றுகிறது.

முதல் மூன்று மாதங்களில் தோன்றும் இப்பிரச்சினை, அடுத்த மூன்று மாதங்களுக்குள் சகஜமாகிவிடுகிறது. பெரும்பாலான பெண்களுக்கு சிகிச்சை எதுவும் தேவைப்படுவதில்லை.

ஆனால், பிரச்சினை அதிகமாக இருந்தால், ஒரே சமயத்தில் வயிறுமுட்ட சாப்பிடுவதைத் தவிர்த்து, பசிக்கும்போதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடலாம். இந்த மாதிரி நேரங்களில் கொழுப்பு மற்றும் எண்ணெய்ப் பதார்த்தங்களைத் தவிர்க்கவும்.

ஒரு சில பெண்களுக்கு விசித்திரமான நறுமணம் அல்லது உணவுப் பொருட்களைப் பார்த்தாலே வாந்திவரத் தொடங்கும். காலையில் எழுந்த உடன் பிஸ்கெட் சாப்பிட்டு வந்தால் வாந்தி கட்டுப்படும். எக்காரணத்தை முன்னிட்டும் சாப்பிடுவதை நிறுத்தவேண்டாம்.

உடம்பில் தண்ணீர் மற்றும் கனிமப் பொருட்கள் தேவையான அளவு இருக்க வேண்டும். வாந்தி அதிகமாக இருந்தாலோ, 4 மாதங்களுக்குப் பிறகும் நீடித்தாலோ மருத்துவரிடம் சிகிச்சை பெறுவது நல்லது.

### மலச்சிக்கல்

ஹோர்மொன்கள் பாதிப்பு மற்றும் வளர்ந்து வரும் சிசு ஆகியவற்றின் காரணமாக மலச்சிக்கல் ஏற்படும். இதிலிருந்து தப்பிக்கொள்ள வேண்டுமானால், நிறையத் தண்ணீர் குடிக்க வேண்டும். சாப்பாட்டில் பழங்கள், காய்கறிகள், தரமான பருப்பு ஆகியவற்றை அதிகம் சேர்த்துக்கொள்ளுங்கள். அப்படியும் பிரச்சினை தொடர்ந்தால், 'இசப்கோல்' பயன்படுத்துங்கள். பேதி மாத்திரை அல்லது எனிமா சிகிச்சையும் எடுத்துக்கொள்ளலாம்.

பெண்

### மூலநோய்

கர்ப்பகாலத்தில் மலச்சிக்கல் தோன்றுவது சகஜம். இதைக் கவனிக்காமல் விட்டுவிட்டால் குடல்பகுதியில் அதிக அழுத்தம் ஏற்பட்டு, அதுவே மூலநோய்க்கு காரணமாகிவிடும். மூலநோய் காரண மாக, மலம் கழிக்கும்போது அதிக வேதனை ஏற்படுவதுடன், ரத்த மும் வெளியேறக் கூடும். இந் நோய் ஏற்பட்டால், நார்ச்சத்து மிகுந்த உணவுகள் மற்றும் வழவழுப்பான உணவுகளை அதிகம் சாப்பிடவேண்டும்.

'இசப்கோல்'

உபயோகிப்பதும் நல்ல பலன் தரும். கர்ப்பமாக இருக்கும்போது, அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதைத் தவிர்க்கவும்.

### வெரிக்கோசில்

சிசுவின் வளர்ச்சி காரணமாக வயிற்றிலுள்ள ரத்தக் குழாய்களில் அழுத்தம் அதிகரிப்பதால், கால்கள் மற்றும் பிறப்புறுப்பினுள் இருக்கும் ரத்தக்குழாய்கள் விரிவடைகிறது. இதனால், அங்கு வீக்கம் மற்றும் வலி தோன்றுகிறது. 'வெரிகோசில்' ஏற்பட்டால் கூடுமானவரை நின்று கொண்டே வேலை செய்வதைக் குறைத்துக்கொள்ளவும். வேலைக்கு நடுவே ஓய்வெடுத்துக் கொள்வது நல்லது.

பிறப்புறுப்பில் 'வெரிக்கோசில்' பாதிப்பு இருந்தால் அங்மு 'ரப்பர் பேட்' பொருத்தவும். கர்ப்பமாக இருக்கும் போது அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளவேண்டாம்.

### களைப்பு

முதல் மூன்றுமாத காலத்தின்போது பெரும்பாலான பெண்கள் களைப்புடன் காணப்படுகிறார்கள். நீண்டநேரம் தூங்குவதையே அவர்கள் விரும்புவார்கள். ஆனால், அடுத்த மூன்று மாதங்களில் இந்தப் பிரச்சினை சரியாகிவிடும். இதிலிருந்து தப்பிக்க, சத்துள்ள உணவுகளை, தேவையான அளவு சாப்பிடுவது விரும்பத்தக்கது. மருத்துவரிடம் பரிசோதித்து உங்களுக்கு அனீமியா இல்லை என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள். மதியம் ஒரு குட்டித்தூக்கம் போடலாம். தூங்கும்போது ஆழ்ந்து உறங்க முயற்சி செய்யுங்கள்.

### நெஞ்செரிச்சல், புளியேப்பம்

கர்ப்பத்தின்போது தோன்றும் சாதாரண பிரச்சினைகளுள் இவையும் அடக்கம். கர்ப்பபையில் வளர்ச்சி, சிறுகுடல் பகுதியில் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. இதனால், 'ஹைட்ரோகுளோரிக்கமிலம்' தவறான பாதையில் சென்று விடுகிறது. நெஞ்செரிச்சல்,

(27ஆம் பக்கம் பார்க்க)



# அன்புள்ள அம்மாவுக்கு...

*அன்புக்குரிய அம்மா,*

நான் இப்பொழுது சுவர்க்கத்தில் இருக்கிறேன். நான் உன்னுடைய சின்னஞ்சிறிய சிறுமியாக இருக்க விரும்பினேன். எனக்கு எதுவுமே புரியவில்லை என்ன நடந்ததென்று. என்னுடைய உயிர்வாழ்வுப் போராட்டத்தை எண்ணும்போது நான் ஆச்சரியப்படுகிறேன். நான் ஓர் இருட்டறையில் இருந்தேன். இருப்பினும் அது ஒரு நேர்த்தியான இடம். நான் கைவிரல்களையும் கால்விரல்களையும் பெற்றிருந்ததைக் கண்டேன். இன்னும் குறுகிய காலத்தில் இந்தச் சுற்றுச்சூழலுக்கு வந்தடைய நான் அபூர்வமாக மேன்மேலும் வளர்ச்சியடைவதில் மகிழ்ச்சியடைந்தேன்.

நான் அதிகமான நேரத்தை நினைப்பதிலும் தூங்குவதிலுமே கழித்தேன். எனது ஆரம்ப காலத்திலிருந்தே நீயும் நானும் ஒன்றான பந்தத்தில் கட்டுண்டிருந்தோம்.

சிலநேரங்களில் நீ அழுவதைக் கேட்கும்போது நானும் உன்னோடு சேர்ந்தே அழுவேன். நீ பலத்த சத்தமிட்டதையும் வலியினால் கூச்சலிட்டு அழுததையும் நான் அறிவேன். அப்பாவும் பெரும் சத்தமிட்டதையும் கேட்டிருக்கிறேன். நீ இந்தக் கஷ்டத்திலிருந்து விரைவில் விடுபடவேண்டுமென்று எதிர்பார்த்து மனவருத்தப்பட்டதுண்டு. ஏன் அப்படி அழுகின்றாய் என்று எண்ணி ஆச்சரியப்படுவேன்.

ஒருநாள் நீ முழுநாளுமே அழுதாய். அப்பொழுது நான் உனக்காக கவலைப்பட்டேன். ஏன் நீ சந்தோஷமின்றி கவலைப்பட்டாய் என என்னால் நினைத்துப் பார்க்கமுடியாமல் உள்ளது.

அன்றொருநாள் மிக பயங்கரமான சம்பவம் ஒன்று நடந்தது. வெதுவெதுப்பாகவும் நேர்த்தியாகவும் இருந்த அந்த இடத்தில் இயற்கைக்கு மாறான வெப்பம் என்னைச் சூழ்ந்துகொண்டது. நான் மிகவும் பயந்துபோனேன். நான் அலறத் தொடங்கினேன். ஆனால், நீ ஒருமுறையாவது எனக்கு உதவிசெய்ய முயற்சி பண்ணவில்லை. என்னுடைய அந்த அலறல் சத்தத்தை நீ கேட்காமலேயே இருந்தாய். இயற்கைக்கு மாறான அந்த வெப்பம் என்னை நெருங்கிக்கொண்டு வந்தவேளையில் நான் அலறினேன். மேலும் அலறினேன். அம்மா! அம்மா! தயவுசெய்து என்னைக் காப்பாற்று! அம்மா என்னைக் காப்பாற்று! என்று கூக்குரலிட்டேன். முழுமையாக நான் அந்த பயங்கர சூழ்நிலைக்குள் வீழ்ந்தேன். அதற்குமேல் நான் பிழைப்பேனா என்று நினைத்தவாறு அலறினேன். மீண்டும் அலறினேன். அப்பொழுது அந்தக் கொடூரத்தன்மையினால் என் கைகள் சோர்வடையத் தொடங்கின. நான் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டேன். அப்போதிருந்த துன்பத்தை நான் எப்படி விளக்குவேன்? அந்தக் கொடுமை தொடர்ந்தது. ஐயோ! அதை நிறுத்தும்படி எப்படி

(27ஆம் பக்கம் பார்க்க)

# சமைப்போம் சுவைப்போம்

## ஸ்பைசி லங்கான் பொடேடோ

### தேவையான பொருட்கள்

வேகவைத்த உருளைக்கிழங்கு - 500கிராம்
குடைமிளகாய் - 2
வெங்காயம் - 1
எண்ணெய்-2 பெரிய தே.க
கடுகுப்பொடி - ஒரு சிறிய தே.க.
மிளகுப்பொடி - ஒரு சிறிய தே.க.
மிளகுப்பொடி - ஒரு சிறிய தே.க.
கராம்புப்பொடி - அரை சிறிய தே.க.
பூண்டுப்பொடி - ஒரு சிறிய தே.க.
சீனி - ஒரு சிறிய தே.க.



**செய்முறை:**

முதலில் வெங்காயத்தைப் பொடியாக நறுக்கிக்கொள்ளவும். குடைமிளகாயை வட்டமாக வெட்டிக்கொள்ளவும். உருளைக்கிழங்கை தோலுரித்து துண்டுகளாக்கி உப்புத் தடவி வைக்கவும். எண்ணெயைச் சூடாக்கி அதில் வெங்காயத்தைப் போட்டு வதக்கவும். மசாலாவை சேர்த்து மேலும் 2 நிமிடங்கள் வேகவிடவும். பிறகு உருளைக் கிழங்கைச் சேர்த்துக் கிளறவும். மிதமான வெப்பத்தில் 2-3நிமிடங்கள் வேகவிடவும். குடைமிளகாயைச் சேர்த்து மேலும் 2நிமிடங்கள் வேகவிட்டு அடுப்பிலிருந்து இறக்கி விடவும்.

தொடர் - 5

# மியாமி கரைதனில் சிதறிய கடலங்கள்





ரீட்டா ரயிலில் இருந்து குதித்தாள்.

காட்டை நோக்கி வேகமாக ஓடினாள்.

அப்பிரதேசத்தின் எல்லைப்புறமாக காவலில் இருப்பவர்களின் கண்களில் தென்படாமல் இருப்பதற்காகவே அவள் அவ்வாறு ஓடினாள்.

குகையின் இருளில் இருந்து வெளியில் வந்ததும் கொஞ்சம் மணல் வெளி, அதற்கு அப்பால் ஆளளவுக்கு வளர்ந்துள்ள நீர்ப்புற்கள், 'சடசட'வென நீர் தெறிக்கும் சகதி நிலம், நீண்டு செல்லும் அந்த அழுக்கு நீர் கால்வாய், அதோடு ஒட்டியவாறு காடு ஆரம்பிக்கிறது.

அவள் குகையின் இருளில் இருந்து வெளியில் வந்து மணற்பாதைக்கு ஓடியதுமே-

மோட்டார் சைக்கிள் துப்பாக்கி மனிதர்கள் அவளை விரட்டத் தொடங்கிவிட்டார்கள்.

ரீட்டா இதை எதிர்பார்க்கவில்லை.

மணற் பாதையில் நடந்தபோது, கொஞ்சம் தொலைவில் 'படபட'வென மோட்டார் சைக்கிளின் சப்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்தாள்.

அவர்களை கண்டாள்.

தலைக்கு ஆபத்து வந்துவிட்டது. அவள் வெலவெலத்துப் போனாள்; ஓடித் தப்புவதைத் தவிர வேறு வழியில்லை என்று தோன்றியது.

காட்டுக்குள் சேரி மக்கள் இருப்பார்கள். பொலிஸின் அடாவடித் தனத்துக்கு பயந்து போய் அவர்கள் காட்டுக்குள் தப்பியோடி விட்டிருக்கலாம். அவர்களை எப்படியாவது சந்திக்க வேண்டும். உண்மையில் என்ன நடந்தது என்பதைக் கண்டறிய வேண்டும். வெளியுலகத்துக்கு சுடச்சுட விசயத்தை கொண்டு வந்து 'பயங்கரவாதம்' என்று பொலிஸ் அதிகாரி கட்டவிழ்த்து விட்டுள்ள கட்டுக்கதையை அம்பலப்படுத்த வேண்டும் என்ற வெறியுணர்வில் ரீட்டா கொதித்துப் போயிருந்தாள்.

ஆனால்-

அவள் நினைத்ததைவிட பொலிஸார் உஷாராக இருக்கின்றனர் என உணர்ந்தாள்.

மோட்டார் சைக்கிளில் வருவது பொலிஸாரா அல்லது பொலிஸார் சொல்லுவதுபோல பயங்கரவாதிகளா?

புரியவில்லை. தடுமாறினாள். என்றாலும் யாராக இருந்தாலும் ஆபத்து நெருங்கிவிட்டதை ரீட்டா உணர்ந்தாள்.

அவள் ஓர் ஓட்ட வீராங்கனை.

பெண் புரவி போல பறந்தாள்.

மணல் வெளியை கடந்தாள். 'சதக் சதக் சதக்' கென நீர்ப்புற்களிடையே, நீர் சிதறி விழ ஓடினாள்.

அப்புறம்-

அந்த கால்வாய். அதில் இறங்கித்தான் ஓட வேண்டும்.

அது ரொம்பவும் அசிங்கமாக இருந்தது. அதற்குள் என்னென்ன கண்றாவி எல்லாம் இருக்குமோ தெரியவில்லையே!

''ஹோல்ட்! ஹோல்ட்!''

மோட்டார் சைக்கிள் புல்வெளியை 'சதசத' வென கடந்து கொண்டிருந்தது.

துப்பாக்கியை நீட்டிய வண்ணம் ஒருவன் கத்துகிறான். அவன் முகம் தெரியவில்லை. கறுப்புத்துணியால் மூடியிருந்தான். வண்டியை ஓட்டி வருபவனும் அப்படித்தான் இருந்தான். அவர்களின் கண்கள் மட்டுமே தெரிந்தன.

ரீட்டா கால்வாய்க்குள் பாய்வதற்கு தீர்மானித்தாள்.

அப்போது-

புல்வெளிக்குள் பதுங்கிக் கொண்டிருந்த ஒருவன் குபீரென பாய்ந்தான். மோட்டார் சைக் கிள் மனிதர்கள் மீது புலியென பாய்ந்த அவன், ஒரே பிடியில் இருவரையும் நிலத்தில் வீழ்த்தினான்.

மின்னலென அடிகள் இடிபோல் விழுந்தன. ஒருவனின் தொடையில் வெட்டுக்கத்தி வீச்சும் விழுந்தது. மோட்டார் சைக்கிள் எங்கோ சென்று சரிந்துவிட அவர்கள் சுருண்டார்கள்.

கால்வாய்க்குள் பாய்வதற்கு தயாராகிக் கொண்டிருந்த ரீட்டா, அங்கே இடம் பெற்றுக் கொண்டிருந்த திகில் சம்வத்தில் உடல் விறைத்துப் போனாள். ஆள் அளவு உயரத்துக்கு மண்டிக் கிடக்கும் நீர்ப்புற்களில் பதுங்கி, 'குபீ'ரென பாய்ந்த மனிதன் ஒரு நீக்ரோ. திடகாத்திரமான ஆசாமி. டார்சானைப் போல வலிமையான உடல் கட்டமைப்புக் கொண்டவன். வெறும் மேனியனாக காட்சியளித்த அவன் முழங்கால் அளவு நீண்ட உள்ளங்கி மட்டுமே அணிந்திருந்தான்.

அவன் சொசிமோ.

திகைத்து விறைத்துப்போய் விட்டிருந்த ரீட்டாவை தலைதூக்கிப் பார்த்த சொசிமோ, அவளை கால்வாய்க்குள் இறங்க வேண்டாம் என கத்தினான். கால்வாயின் ஓரத்தில் நழுவி விடுவதுபோல் தடுமாறிக் கொண்டிருந்த ரீட்டா தன்னை மிகவும் கஷ்டப்பட்டு சமாளித்துக் கொண்டாள். ஓடிவந்த வேகம், களைப்பு அவளை நிலைகுலைய வைத்தது.




சொசிமோ.

கொடுத்த மின்னல் அடியிலிருந்து மோட்டார் சைக்கிள் மனிதர்கள் இன்னும் மீளவில்லை. அவர்கள் மரத்தில் இருந்து விழுந்த தேங்காய்களைப் போல ஆளுக்கொரு பக்கம் கிடந்தார்கள்.

நீண்ட துப்பாக்கி-

தொலைவில் கிடந்தது. அங்குமிங்கும் அதனைத் தேடிய சொசிமோவின் கண்களில் அது பட்டு விட்டது. பாய்ந்து அதை எடுத்தான். ரீட்டாவை நோக்கி ஓடினாள்.

அவள் கையை பிடித்துக் கொண்டான். 'பரபர'வென இழுத்துக் கொண்டு இன்னொரு திசையில் காட்டுக்குள் ஓடிவிட்டான்.

ரீட்டா அவனுடன் இழுபட்டுக் கொண்டு ஓடினாள். அவள் சிறந்த ஓட்ட வீராங்கனை யாக இருந்த போதும் அவனுடன் போட்டி யிட்டு ஓட அவளுக்கு கஷ்டமாக இருந்தது. அவனுடைய ஓட்டம் ஒரு தீரமிக்க வேங்கையின் பாய்ச்சலாக இருந்தது.

கானகத்தின் நடுமத்திக்கு அவர்கள் வந்து விட்டார்கள். எவரும் தொடர்ந்து வருவதாகத் தெரியவில்லை. ஆபத்து இல்லை என்று தெரிந்ததும் சொசிமோ ரீட்டாவின் கையை விடுவித்தான்.

''பயப்படாதே உன்னை அவர்களிடம் இருந்து காப்பாற்றவே வந்தேன். இவ்வளவு தூரம் காட்டுக்குள் அவர்கள் வரமாட்டார்கள்.''

அவன் களைக்கக் களைக்க சொன்னான்.

''இல்லை! நான் பயப்படவில்லை. உங்களை சந் திக்கவேண் டும் என்றுதான் வந்தேன்.''

ரீட்டா மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கச் சொன்னாள்.

''என்னை சந்திக்கவா. என்னை எப்படித் தெரியும்?''

''உங்களை தனிப்பட்ட முறை யில் தெரியாது. சேரிப்புற மக்களுக்கு ஏற்பட்ட அநியாயத்தை வெளியுலகத்துக்கு செல்வதற்காகத்தான் வந்தேன்.''

''அது சரி நீ யார்?''

'' நான் ஒரு ஜேர்னலிஷ்ட். ஆமாம் என்னை விரட்டிய அவர்கள் யார்?''

''பொலிஸ் அதிகாரி மெக்டோனாலின் கைக்கூலிகள். ஆட்கொல்லிகள்.''

''ஓ! அப்படியா? நினைத்தேன்.''

''என்ன நினைத்தாய்?''

''இந்த மெக்டொனால் ஒரு மோசமானவன் என்று''

''ஆமாம்.''

அப்போது-

மரக்கிளைகள் அடர்ந்து குடைபோல் விரிந்து நிழல் படர்த்திக் கொண்டிருந்த ஒரு பெரிய மரத்தில் இருந்து டுமாச்சி 'சரசர'வென இறங்கினாள்.

ரீட்டா திடுக்கிட்டு சிலிர்த்தாள்.

''யாரது?''

''பயப்படாதே. அவள்தான் டுமாச்சி''

''டுமாச்சியா?''

''ஆமாம்! என் உடன் பிறவா சகோதரி. என் உயிர் நண்பன் பட்ரிக்ஸின் மனைவி.''

''அப்படியா? அவள் எப்படி இங்கே?''

''வா! உனக்கு முழுக்கதையையும் சொல்கிறேன். பத்திரிகையில் அவற்றை எழுது. பொலிஸ் அதிகாரி அந்த நன்றி கெட்ட ராஸ்கலின் வரலாற்றை பக்கம் பக்கமாக எழுதி அம்பலப்படுத்து. அவனை குற்ற வாளிக் கூண்டில் ஏற்று.''

சொசிமோ ஆத்திரமுடன் கத்தினான். கண்ணீர் பெருகி கொட்டியது.

நிலவு கால இரவில் வெட்டப்பட்டு இறந்துகிடந்த பட்ரிக்ஸின் குழந்தைகளை நினைத்து அவன் கதறினான். அவனை கட்டுப்படுத்துவது கஷ்டமாக இருந்தது.

ரீட்டா சொன்னாள்.

''அழாதே! எல்லாவற்றையும் எழுதுகிறேன். இங்கிருந்தே தகவல்களை அனுப்பக் கூடிய சகல விதமான நவீன உபகரணங்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டுதான் வந்திருக்கிறேன்.''

சொசிமோ அவளை ஆச்சரியமுடன் பார்த்தான். டுமாச்சியும் ரீட்டா அருகில் வந்து நின்றாள். அன்புடன் அவள் கைகளைப் பற்றினாள்.

''நன்றி மகளே!'' என்று 'நா' தளதளக்க சொன்னாள். அவள் ஆண் உடையில் இருந்தாள். அவை சொசிமோவின் உடைகள். அதனால் அவளை சரியாக ரீட்டாவால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஏனெனில் தலை முடியையும் முழுமையாக மறைந்து, ஒரு துணியால் அவள் கட்டியிருந்தாள்.

உயரமான மரக் கொப்புகளின் இடையில் பரண் அமைத்திருந்தான் கொசிமோ. கீழிருந்து கொஞ்சமேனும் கண் பார்வைக்கு தெரியாத அதில் தான் கடந்த இரண்டு மூன்று நாட்களாக அவர்கள் இருந்தார்கள்.

''எங்கள் வீடு அதோ அந்த பரண்தான்.''

ரீட்டாவுக்கு அதிசமாக இருந்தது.

சேரி மக்கள் என்று சொல்கிறார்களே! அவர்களின் வேலைத்திறன் எவ்வளவு நுட்பமாக இருக்கிறது என்று அவளால் ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை. அது மட்டுமல்லாது இன்னொருவனின் மனைவியுடன் அங்கே அவன் குடியிருக்கி றான். அவளை எவ்வளவு பாசமுடன் சகோதரி என்ற அறி முகப்படுத்துகிறான். இவற்றை அவளால் நம்பமுடியவில்லை. இங்கே ஆச்சரியமான, திகிலான கதைகள் தனக்கு கிடைக்கும் என்ற எண்ணம் மனத் தில் ஊர்ந்தபோது அளவற்ற மகிழ்ச்சியில் ரீட்டா திளைத்துப் போனாள். தனது ஜேர்னலிஷ வாழ்க்கையில் புதிய அத்தியாயம் ஒன்று உருவாவதை அவள் ஆவலுடன் அவதானித்தாள்.

அவர்களின் துணையுடன் ரீட்டாவும் மரத்தில் ஏறினாள். பரணை அடைந்த போது அவள் பிரமித்துப் போனாள்.

'அடடா! எவ்வளவு அற்பதமாக அமைக்கப்பட்டிருக்கிறது' என்று திக்குமுக்காடிப் போனாள்.

அங்கே-

சாப்பாட்டுக்கு பழவகைகள் இருந்தன. மரவள்ளிக் கிழங்கு அவித்து வைக்கப்பட்டிருந்தது.

''இதெல்லாம் எப்படி?''என்ற அவனு டைய கேள்விக்கு அவர்கள் புன்னகை செய்தார்கள். கடுமையான சோகத்தையும் துன்பத்தையும் வென்று அவர்கள் வாழப் பழகியிருந்தார்கள். அந்த மனவலிமை அவளை ஆச்சரியப்படவைக்கிறது.

அவர்கள் தந்ததை மகிழ்ச்சியோடு சாப்பிட்டாள். சுத்தமான தேனும் அவளுக்கு கிடைத்தது.

தனது முதுகில் அவள் சுமந்து வந்த பையை ரீட்டா திறந்தாள். அதற்குள் லப்டொப் கம்பியூட்டர், கைபோன், சிறிய கமரா, ஒலிப் பதிவு கருவிகள், மொனிட்டர்ஸ் என பலவகை யான உபகரணங்கள் இருந்தன.

அவற்றை ஒவ்வொன்றாக வெளியில் எடுத்த ரீட்டா, சிறியதொரு அன்டனாவை இழுத்து இழுத்து நீட்டி மரக்கிளைகளினூ டாக வான்வெளிக்கு அனுப்பினாள்.

பிறகு-

டுமாச்சி, சொசிமோ இருவரையும் ஒன்றாக அமரச் செய்து கமராவை முன்னே திறந்து வைத்தாள். டுமாச்சியும், சொசிமோவும் மொனிட்டரில் தெரிந்தார்கள். அவர்கள் ஆச்சரியத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகை செய்து கொண்டார்கள்.

''ஹலோ!''

ரீட்டா அழைத்தாள்.

''ஹலோ!''

எங்கிருந்தோ இன்னொரு குரல் குரல் ஒலித்தது.

அப்போது-

நாய்களின் குரைப்புச் சத்தம் உரக்க கேட்கிறது. அவர்கள் பரண்களில் இருந்து பார்த்த போது இரண்டு மூன்று பொலிஸ் நாய்கள் மரத்தின் கீழ் ஓடிக் கொண்டிருந்தன.

(தொடரும்...)




## தத்துவம்

பேக் : லஞ்ச் பேக்கில் லஞ்ச் வைக்கலாம்
ஸ்கூல் பேக்கில் ஸ்கூல் வைக்க முடியுமா?

கொட்டினால் : அரிசி கொட்டினால் வேறு அரிசி வாங்கலாம்
தேள் கொட்டினால் வேறு தேள் வாங்க முடியாது.

நீச்சல் : எவ்வளவுதான் நீச்சல் தெரிந்தாலும்
டம்ளர் தண்ணீரில் நீச்சல் அடிக்க முடியாது.

வலி : நடந்து போனா கால் வலிக்கும்
ஆனால் கால் வலிச்சா நடந்து போக முடியாது.

முடியாது : எவ்வளவுதான் காசு கட்டி பிளேனில் போனாலும்
யன்னலைத் திறந்து வேடிக்கை பார்க்க முடியாது.

## "யார் இவர் தெரிகிறதா?" 15



**இந்த வாரம் பிரசுரமாகி இருக்கும் உருவம் யாருடையது?**

இவர் ஓர் இளவரசர். இவர் யாரெனக் கண்டு பிடித்து இவர் பெயரை தபாலட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சரியான விடை எழுதிய அதிஷ்டசாலிகள் ஐவரின் பெயர் விவரம் பிரசுரிக்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி
"யார் இவர் தெரியுமா?"
85/ஜெயந்தமல்லிமாராச்சிமாவத்தை,
கொழும்பு-14.

★ "யார் இவர் தெரிகிறதா?" இல.12 இற்கான சரியான விடை: கொரிய நாட்டைச் சேர்ந்த ஐ.நா.வின் செயலாளராக உள்ள பான் கீ மூன். சரியான விடைகளை அனுப்பியோர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விவரம் வருமாறு:
1. யோ.செளவுஜன், திருகோணமலை. 2.யோ.லிசாந்தினி, வவுனியா. 3. ஏ.றுகையா, பொத்துவில்-02.
4. திருச்செல்வம் பங்களதேவி, ஹல்தும் முல்லை. 5. எஸ்.எம்.சாமிலா,தென்கிழக்குப்பல்கலைக்கழகம்.

## மணல் துர்கா



இந்தியாவின் பூரியில் துர்கா பூஜையை முன்னிட்டு மணல் சிற்ப கலைஞர் சுதர்சன் பட்நாயக் வரைந்த மணல் சிற்ப துர்கா. இதனை வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பார்வையிடுகின்றனர்.

## 2 இன் 1



## றெக்கை கட்டி பறக்குதடி அழகிகளின் சைக்கிள்



ஹங்கேரியின் புடாபெஸ்ட் நகரில் நடை பெற்ற சர்க்கஸில், ஒரே ஒரு சைக்கிளில் சீனாவின் தேசிய சர்க்கஸ் நிறுவனத்தைச் சேர்ந்த 11 அழகிகள் அசத்தும் காட்சி.

## தங்கக் கலண்டர்



டோக்கியோவில் 6 கிலோ தங்கத்தால் தயாரிக்கப் பட்டுள்ள 2008ஆம் ஆண்டுக்கான கலண்டரை பார்வையிடுகிறார் ஒருவர்.

## சிக்கினுக் கிறியே நெஞ்சு, பக்கினு கீதும்மா



பிரேசிலில் நடந்தகலை நிகழ்ச்சியில் சாகசம் நடத்தும் கனடா குழுவினர்.



## குறும்பு



## குடிமகன்



**சா**ராயக் கடையில் நிறையக் குடித்துவிட்டு இருவர் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

பின்னால் 'கரியரில்' உட்கார்ந்துகொண்டு வந்தவன் வழியில் விழுந்துவிட்டான். அதைக் கவனிக்காமலே மற்றவன் சைக்கிளை ஓட்டிச் சென்று வீட்டை அடைந்ததும் நண்பன் இல்லாததைக் கவனித்தான்.

திரும்பவும் கடையை நோக்கி சென்ற அவன் நடு வீதியில் நண்பன் அமைதியாக உட்கார்ந்திருப்பதை கண்டான்.

"எப்படி இருக்கிறாய்?" என்று கேட்டான்.

"ஓ! பிரமாதம் . இந்த சீட் எவ்வளவு வசதியாக இருக்கிறது! எவ்வளவு தூரம் என்றாலும் பயணம் செய்யலாம்" என்றான் நண்பன்.

# பெருந்தோட்டங்களுக்குள் சிக்கியுள்ள 'இருண்ட கண்டங்கள்'



பெருந்தோட்டங்களில் அநேகமானவை பல பிரிவுகளைக் கொண்டவை; பத்துப் பதினைந்து மைல்களுக்கு மேற்பட்ட விசாலமான நிலப்பரப்பை உள்ளடக்கியவை. நூற்றுக்கணக்கான குடும்பங்களை தன்னகத்தே முடக்குபவை; இருண்ட கண்டத்துக்கு ஒப்பானவை; நவீன வசதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டவை. பேருந்து பயணங்களையோ, ரயில் பயணங்களையோ மேற்கொள்வதற்காக இங்கு மக்கள் பல மைல்களைச் சிரமத்துடன் நடந்து கடந்து வரவேண்டிய அவலநிலை.

ஒரு சில தோட்டங்களுக்குள் மாத்திரம் பேருந்து சேவைகள் ஊடுருவியுள்ளன. இந்த 'வரப்பிரசாதம்' ஏனைய தோட்டங்களுக்கு வாய்க்கவில்லை. இதுகுறித்துத் தம்மை அரசியல் மேதைகளாகக் காட்டிக் கொள்ளும் பிரதேசசபை உறுப்பினர்களோ, மாகாணசபை உறுப்பினர்களோ, தம்மை மலையகத்து ஆபத்பாந்தவர்களாகக்




காட்டிக்கொள்ளும் எம்.பிக்களோ அலட்டிக்கொள்ளவில்லை. சம்பந்தபட்ட அமைச்சுக்கள், தம் சபைகள் ஆகியவற்றை அணுகி, காரியமாற்றவில்லை. அந்தளவுக்குச் சிந்தனை சுழற்சி கிடையாது. அரசியல் பினாமிகள்! இவர்களில் பெரும்பாலானோர் 'ரெடிமேட்' புத்திஜீவிகள்.

இத்தோட்டங்களிலுள்ள தொழிலாளர் அந்திக் கருக்கலில் பல மைல்களைக் கடந்து நகருக்குள் நுழைகின்றனர். ஒரே நடை. பாவனைப் பண்டங்களைக் கொள்வனவுசெய்த பின்னர் மீளநடையைக் கட்டுகின்றனர். இதற்குள் இருள் கௌவிவிடும். மழை காலமானால் பெரும் சங்கடம். ஊளைக்காற்று பந்தங்களை அணைத்துவிடும். தனித்தீப்பெட்டி தேவை.

எது எப்படியோ, 'பந்தங்களும் டோர்ச் லைட்'களும் இவர்களுக்கு வழிகாட்டுகின்றன; மேடுகளையும், மடுக்களையும், அதலபாதாளங்களையும் காட்டுகின்றன; போடப்பட்ட கற்களின் மீது கவனமாகக் கால்வைத்துக் கடக்கவேண்டிய வரைஓடைகளைக் காட்டுகின்றன. நரிகளும், காட்டுப்பன்றிகளும் அரசோச்சும் புதர்களை யும், அடர்ந்த பற்றைக் காடுகளையும் காட்டுகின்றன.

இவற்றினோடு, பல் விழுந்த படிக்கட்டுகளையும் சுட்டுகின்றன. வரும்போதும் போகும்போதும் ஆங்காங்கு கொலுவிருக்கும் தோப்புத் தெய்வங்களையும் வாழ்த்திக் கொள்கிறார்கள். தோப்புகளுக்குள் மேடைகள். அவற்றின் மீது சூலாயுதங்கள், கற்சிலைகள். இராக்காலத்தில் இத்தெய்வங்களின் பாதுகாப்பு உண்டு என்ற ஒரு நம்பிக்கை. எனினும், கல்லறைகளை அண்மிக்கும் போது நடையில் ஓர் அபாரவேகம். அப்படியா எட்டிப்பார்க்கிறார்கள்?!.

நூற்றுக்கணக்கான மாணாக்கர் அயல் நகரப் பாடசாலைகளில் பயில்கின்றனர். பாடசாலைகளுக்கு அதிகாலையிலேயே நடையைக் கட்டுகின்றனர். பாடசாலைகள் விட்ட பின்னர் மீண்டும் அதேநடை. எனினும், நடையில் தளர்ச்சி; உடலில் சோர்வு; தத்தம் இல்லத்தை ஏகியதும் பசிக்கு புசிப்பு. இன்னும் பல மாணாக்கர் வெளி நகரக் கல்விக்கூடங்களுக்கு ஏகுகின்றனர். உரிய நேரத்தில் பேருந்தையோ, ரயிலையோ பிடிக்க துரித நடை.

நகர நெடுஞ்சாலைப் பேருந்து சேவைகளும் கிரமமாக நடைபெறுவதில்லை. மாணாக்கர்களின் கல்வி மேம்பாட்டைக் கருத்திற்கொள்ளாமல் தயாரிக்கப்பட்ட நேர சூசிகளாக இருக்கலாம். வழமையான பேருந்து சேவையும் சிலவேளை முடங்கி விடும். ஏழை மாணாக்கர் பருவகாலச் சீட்டையே நம்பியுள்ளனர். பேருந்து சேவை முடங்கிவிட்ட சமயத்தில் முயற்கொம்பாக எதிர்ப்படும் தனியார் வாகனங்களைக் கண்டு இவர்கள் ஏங்கிநிற்பார்கள்.

பேருந்து சேவையை எதிர்பார்த்து, ஏமாற்றமுற்று எத்தனையோ மாணாக்கர் தத்தம் இல்லம் திரும்பியுள்ளனர்; திரும்புகின்றனர். இன்னும் எத்தனையோ பேர் தம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையையும் க.பொ.த.உயர்தரப் பரீட்சையையும் கோட்டைவிட்டுள்ளனர். பரீட்சைகாலங்களில் கிரமமான பேரூந்து சேவைகளுக்கு ஏற்பாடு செய்யுமாறு இ.போ.ச.பிராந்திய அலுவலக அதிகாரிகளை அணுகி கோரிக்கை விடுவதற்கு மலையகத்தில் நாதியில்லை. இந்த இலட்சணத்தில் பத்திரிகை அறிக்கைகள். இக்கட்டத்தில் சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மகீபால ஹேரத்தின் கருத்தை நான் குறிப்பிட்டே ஆகவேண்டும். இரத்தினபுரி பார்ம்கார்டன் தமிழ்வித்தியாலய ஆசிரியர் தினவிழா அண்மையில் நிகழ்ந்தது. அதிபர் திருமதி எம்.சி.செல்வராஜா தலைமைவகித்தார். மாணாக்கர் அதீத ஆர்வலர்களாக மாறி இவ்விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். மாகாண முதலமைச்சர் மகீபால ஹேரத், பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சத்தான உரையாற்றினார்.

அவர் தம் உரையில் மூவினமக்களின் சமத்துவ உரிமைகளைச் சுட்டிக்காட்டினார். சகவாழ்வை வலியுறுத்தினார். அவர் ஒரு கூட்டத்தில் ''மலையக தமிழ்மாணாக்கரும் இந்நாட்டுப் பிரஜைகள் தாம். அவர்களும் இந்நாட்டிலுள்ள சகல உரிமைகளையும் அனுபவிக்கத் தகுதியுள்ளவர்கள். இதனை ஒடுக்கவோ தடுக்கவோ எவராலும் முடியாது. சிங்களப் பாடசாலைகளுக்கும் தமிழ்ப்பாடசாலைகளுக்கும் சம அந்தஸ்து

(22ஆம் பக்கம் பார்க்க)

---




க.கோமதி,
இலுப்பபடிச்சேனை,
கன்னன்குடா.



**கேள்வி: இலங்கை அரசினால் பெரும்பாலான மக்கள் அகதிகளாகி, உடைமைகளை பறி கொடுத்த நிலையில், சிலர் வாழ்க்கைப் போராட்டத்தால் தற்கொலை செய்யும் அளவுக்கு தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறான மக்களுக்கு நீர் கூறும் கருத்து என்ன?**

பதில்: 'அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே!
உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே.'

என்ற பாரதியாரின் புரட்சிப் பாடல்தான் ஞாபகத்தில் வருகிறது.

ஏ.பாலசூரியன்,
வெலிகாமம்.

**கேள்வி: நாய், கோழி,புறா, ஆடு, மாடு என்பன காதல் செய்வதைப் பார்க்க முடிகிறது! ஆனால், காகத்துக்கு 'அந்த' நினைப்பு இருக்கிறதா, பார்க்க முடிவதில்லையே?**

பதில்: 'அதற்காக' இந்த அளவுக்கு வருத்தப்படுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை! காதல் உணர்வு இல்லாத உயிரினம் என்று எதுவும் பூமியில் கிடையாது. இது சத்தியம். நான் சொல்வதில் உங்களுக்கு நம்பிக்கையில்லாவிட்டால் ஏதாவது ஒரு மரத்தின் மீது ஏறி சில நாட்கள் தங்கி உஷாராகக் கவனித்து வரவும்.

பி.தாட்சாயினி,
சங்கத்தானை.

**கேள்வி: அறிஞர்கள் வீட்டில் உட்கார்ந்திருக்க கண்டவர்கள் எல்லாம் அரசியல்வாதியாகின்றார்களே! அரசியல்வாதியாவதற்கு என்ன தகுதி வேண்டும் பித்தா?**

பதில்: வெட்கம், மானம், சூடு, சொரணை எல்லாத்தையும் தியாகம் செய்ய வேண்டும்!

எல்.சஞ்சீவ்குமார்,
தெதுறுஓயா.

**கேள்வி: என் காதலிக்காக என்னுடைய உடல், உயிர், ஆவி, பொருள் அனைத்தையும் கொடுப்பதாக உள்ளேன் பித்தா?**

பதில்: நீங்கள் என்ன கொடுக்கிறது.



கல்யாணத்துக்கு அப்புறம் அவவேஷி எல்லாத்தையும் எடுத்துக்க மாட்டா?

எஸ்.அனுஷா,
ஹட்டன்.


**கேள்வி: மனித உடலில் உள்ள தேவையில்லாத உறுப்பு என்று எதைச் சொல்வீர்கள் பித்தா?**



பதில்: தோடு, ஜிமிக்கி செலவுகள் எல்லாம் மிச்சமாகும் என்ற நினைப்பில் காது மடல்தான் தேவை இல்லாதது என்று நினைத்துக் கொண்டிருந்தேன். 'வாத்ஸாயனரின் காம சூத்ரா'வை படித்த பிறகுதான் காதலில் காது மடல் எவ்வளவு முக்கியபங்கு வகிக்கிறது என்பதைப் புரிந்து கொண்டேன்.

எஸ். காண்டீபன்,
கொக்குவில்.

**கேள்வி: பித்தா! பொன்னாடை போர்த்திக் கொள்ள வேண்டும் என்பது எனது நீண்ட நாள் ஆசை. எனது ஆசை நிறைவேறுமா?**




பதில்: அடிக்கடி சலூனுக்கு போங்கள்.

பாத்திமா சஸ்னா,
கொட்டியாவத்தை.

**கேள்வி: முட்டாள்களைப் பற்றி ஜோக் ஒன்று சொல்லுங்கள் பித்தா?**

பதில்: அடுக்குமாடி கட்டடத்தில் இரண்டு பேர் வசித்து வந்தார்கள். ஒருவர் முதல் மாடியில், மற்றவர் எட்டாம் மாடியில். இருவருக்கும் இரண்டு நாளாக சொல்ல முடியாத பகை, கோபம், சண்டை. அதனால், எட்டாம் மாடியில் இருப்பவன் முதல் மாடியில் இருப்பவனை அவமானப்படுத்த நினைத்தான். ''எங்கள் வீட்டுக்கு விருந்துக்கு வரவும்'' என்று வேண்டுகோள் விடுத்தான். பகை மறந்து போகிறதே என்று ஏமாந்த முதல் மாடிக்காரனும், கஷ்டப்பட்டு எட்டாம் மாடிக்கு சென்றான். வீடு பூட்டியிருந்தது. அதில் ''உன்னை எப்படி ஏமாற்றினேன் பார்த்தாயா?'' என்று எழுதியிருந்தது. முதல் மாடிக்காரன் ஏமாந்ததாகக் காட்டிக் கொள்ளக் கூடாது என நினைத்து, அந்த வாசகத்துக்கு கீழே இப்படி எழுதினான். ''நான் தான் வரவே இல்லையே எப்படி ஏமாற முடியும்!''

எம்.எம்.றியாஸ்,
கல்முனை.

**கேள்வி: மனிதனுடைய பலவீனங்கள் எவை என்று கூற முடியுமா பித்தா?**

பதில்: காமம், மயக்கம்.

கே.சகுந்தலாதேவி,
அவிசாவளை.

**கேள்வி: பித்தா! நீங்கள் முற்போக்குவாதியா, பிற்போக்குவாதியா?**

பதில்: பொழுதுபோக்குவாதி!

என்.பிரியா,
வெள்ளவத்தை.

**கேள்வி: பித்தா! உங்களுக்கு பிடித்தது வாளை மீனா, கொண்டை மீனா?**

பதில்: ஜமீன்



பித்தன் மீது பித்தாய் உள்ள பித்தர்களே! பித்தனிடம் எத்தனை பித்தான கேள்விகளையும் நீங்கள் தொடுக்கலாம். அவைகளின் தரம் அறிந்து பித்தன் பதிலளிப்பான். அனுப்ப வேண்டிய முகவரி:

'பித்தன் பதில்கள்'
சுடர் ஒளி (வாரஇதழ்)
இல.85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு- 14.

## சினிமா ஸ்டைலில் ....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றுவதற்குரிய நாள் குறிக்கப்பட வேண்டியிருந்தது.

எதிர்பாராத நேரத்தில் நடைபெறுவதுதானே அதிரடித் தாக்குதல்! புலிகளின் முதலாவது விமானத் தாக்குதல் உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கையும் அவுஸ்திரேலியாவும் மோதுவதை முழு இலங்கையுமே மெய்மறந்து பார்த்துக்கொண்டிருக்கும் போது நடந்ததாலேயே வெற்றிகரமாக முடிந்தது.

இந்தத் தடவை அப்படியொரு சந்தர்ப்பம் தானாகவே வந்து மடியில் விழுந்தது.

21ஆம் திகதி ஞாயிறு அநுராதபுரத்தில் கார் ஓட்டப் பந்தயம். மிகவும் பிரபலமான இந்த பந்தயத்தை காணுவதற்கு இலங்கையின் பலகோடியிலும் இருந்து அநுராதபுரம் வந்து சேர்ந்தது மக்கள் கூட்டம். பந்தயம் முடிந்ததும் அன்றிரவு 'சிரச' தொலைக்காட்சியில் சிங்கள் சுப்பர் ஸ்டார் பாடகர் போட்டி. எந்த சிங்கள குடிமகனும் இந்த நிகழ்வை தொலைக்காட்சியில் பார்க்காமல் தூங்குவதேயில்லை. இதற்கென்ன விமானப்படைவீரர் விதிவிலக்கா? விமானத்தளத்தைச் சுற்றியிருந்த காவலரண்களில் - விமான எதிர்ப்பு பீரங்கி காவலரண்களில் இந்த சுப்பர் ஸ்டார் நிகழ்வை பார்க்க தொலைக்காட்சி வசதி இருக்குமா?

இரவு சுப்பர் ஸ்டார் நிகழ்வு தொடங்கியதும் கடமை மறந்து காவலர்கள் விமான நிறுத்த கூடாரத்தில் இருந்த தொலைக்காட்சியில் நிகழ்வைப் பார்க்க கூடிவிட்டார்களாம். நல்ல தருணமடா இதை நழுவவிடாமல் அந்தவேளையில் ஓசையின்றி உள்ளே புகுந்த கரும்புலிகள் காலம் கனியும் வரை காத்திருந்ததாக புதிதாக ஒரு செய்தி வந்துள்ளது.

இந்த அதிரடிப்படையணி விமான ஓடுதளத்தின் வட்புறத்து வேலிகளூடாக - நுவரவேவா பகுதியினூடாக ஊடறுத்துச் சென்று ஓடுபாதையில் இருந்த நான்கு எதிர்ப்பு பீரங்கிகளை அழித்தன. பின்னர் மீந்திருந்த ஒரு ஒரு விமான எதிர்ப்பு பீரங்கிகொண்டு - ஓடுதளத்தில் நின்றிருந்த விமானங்களையும் உலங்கு வானூர்திகளையும் சுட்டு அழித்தன. தொடர்ந்து முன்னேறிச் சென்று அங்கிருந்த கட்டடத்தொகுதிகளையும் Hanger எனப்படும் விமானத்தரிப்பு கூடாரத்தில் நின்றிருந்த வானூர்திகளையும் தகர்த்தன.

செவ்வாய்க் கிழமை வெளியான பிரித்தானிய டெலிகிராப் என்ற பத்திரிகை 19 வானூர்திகள் தகர்க்கப்பட்டதாக கணக்கிட்டு காட்டியிருக்கின்றது. வானில் பறந்து திரிந்து கண்காணிக்கும் விமானம் 'BEACHCRAFT'. இது 28 மில்லியன் டொலர் பெறுமதியானது. சுக்கநூறாகிய வானூர்திகளில் இது முக்கியமான ஒன்று.எம்.ஐ 17 உலங்கு வானூர்திகள் இரண்டு, எம்.ஐ. 14 உலங்கு வானூர்திகள் இரண்டு, கிபிர் மிக் விமானங்கள், குறிபார்த்து, குறி தவறாமல் குண்டுபோட வழிவகை செய்யும் ஆளில்லா உளவு விமானங்கள் மூன்று, கே8, பிரி6 என்ற பயிற்சி விமானங்கள் முறையே ஒன்று, எட்டு என்ற கணக்கிலும் பெல் 212 என்ற உலங்கு வானூர்தி ஒன்றுமாக மொத்தம் 19 வானூர்திகள் என்று டெலிகிராப் கணக்குக் காட்டுகின்றது. இவற்றின் மொத்த இழப்பீடு 40 மில்லியன் டொலர்கள் என்று மேலும் கணக்கிடுகிறது டெலிகிராப். உயிரைத் தியாகம் செய்த 21 கரும்புலிகளுடன் அரச தரப்பில் மேலதிகாரிகள் ஒருவர் உட்பட 13 விமானப்படை வீரர்கள் ஓர் இராணுவ வீரர் அடங்குவர். பெல் 212 என்ற உலங்கு வானூர்தி தகர்ந்துபோன விஷயம் மர்மமாகவே உள்ளது. புலிகளின் விமானம் சுட்டே பெல் ஹெலி வீழ்ந்தது என்று ஒரு சாரார் கூறுகின்றனர். தங்களுக்கு உதவவந்த பெல் 212 ஐ இலங்கை விமானப் படையினரே தவறான இலக்காக புலி விமானமாக கருதிச் சுட்டு வீழ்த்தினர் என்றும் ஒரு வதந்தி கசிகின்றது. தொழில்நுட்பக் கோளாறினால் உலங்கு வானூர்தி விழுந்து நொருங்கியது என்று அரசுத் தரப்பு கூறுகின்றது. இந்த உலங்குவானூர்தியில் சென்ற இரண்டு விமான ஓட்டிகளும் இரண்டு சுடுகலன் வீரர்களும் (GUNNERS) வானூர்தி விழுந்த இடத்திலேயே எரிந்துபோனார்கள். தாக்குதல் எல்லாம் ஒரு ஒன்றரை மணிநேரத்திலேயே பல உயிர்ச் சேதங்கள், பொருட்சேதங்கள் நடந்தேறிவிட்டன.

எப்படி நடந்தது என்பது பற்றி விசாரணைகள் முடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்த விசாரணைகளின் முடிவுகள் எப்படியிருந்தாலும் ? ஏன்? எதற்காக? இந்த இழப்புகள் என்பதை இருதரப்பும் புரிந்து - ஒரு புரிந்துணர்வுக்கு வரும் வரையில் - இந்த அவலங்கள், இழப்புகள் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

## பெருந்தோட்டங்களுக்...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டுள்ளது. தமிழ்மாணாக்கரை இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கணிப்பீடு செய்ய முடியாது; கூடாது'' என்றார். இவர் ஒரு முன்னுதாரண புருஷர். பெரும்பாலான அரசியல் வேஷதாரிகள் தம் செல்வாக்கைக் கட்டியெழுப்புவதற்கும் பாதுகாத்துக் கொள்வதற்கும் பல்வேறுபட்ட தந்திரோபாயங்களைக் கையாளுகின்றார்கள். அவற்றில் ஒன்றுதான் ''ரெட்மேட்'' புத்திஜீவிகள் சிருஷ்டிப்பு. இந்த வேஷதாரிகள் குறுகிய நோக்குடையவர்கள்; தீர்க்கதரிசன சிந்தனையற்றவர்கள்; அரசியல் வங்குரோத்துகள்; பதவி மோகத்தாலும், அதிகாரச் செருக்காலும் கூரிய பார்வையை இழந்து குருடானவர்கள்.

இப்பிரகிருதிகளின் செல்வாக்கு, பரிந்துரை, அதிகாரக்கட்டளை ஆகியவற்றின் உதவியால் இன்று எத்தனையோ பேர், கொல்லைப்புற வழியாகப் புகுந்து பல்வேறு பதவிகளில் ஒட்டிக் கொண்டிருக்கின்றனர். பதவிகளுக்கேற்ப தகுதிகள் கிடையா. தகைமைகள் இல்லை; ஆற்றல் கிடையாது; உயிரினும் மேலாக ஓம்பப்படும் ஒழுக் கநெறிகள் கிடையாது. இந்த 'ரெடிமேட்' புத்தி ஜீவிகளாலும் மலையக சமுதாயம் சீரழிக்கப்பட்டு வருகின்றது.

இந்த 'ரெடிமேட்' புத்திஜீவிகளும் தம்பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காக வேஷதாரிகளாக மாறிவிடுகிறார்கள். வேறுவழி? இவர்கள் அறிவு, ஆற்றல், தகுதி, தகைமை ஆகியவற்றில் விஞ்சி நிறபோரை வஞ்சிக்கிறார்கள். அள்ளிவைப்பு, கொள்ளிவைப்பு ஆகிய கலைகளில் சிறந்து விளங்குகிறார்கள். அரசியல் வேஷதாரிகளுக்கு அடிவருடிகளாக மாறிவிடுகிறார்கள். மலையகத் தொழிற்சங்கங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த நோக்கும் போக்கும் இன்று ஏனைய தொழில்துறைகளுக்குள்ளும் ஊடுருவி விரவி வியாபித்துவிட்டன. அதனால் மலையக சமுதாயத்துக்கான வரப்பிரசாதங்கள் முடங்கிக்கிடக்கின்றன.

அதேவேளை, கொட்டிக்குவிக்கும் கம்பெனிகளே தோட்டங்களைக் கட்டிக்காக்க வேண்டும். தொழிலாளர் சம்பந்தப்பட்ட காரியங்கள் கைவிடப்பட்டால் அதனைத் தட்டிக்கேட்கத் தொழிற்சங்கங்கள் உள்ளன.இது தொழிற்சங்கங்களின் கடமை. இங்கு ஒரு திருப்புமுனை. கம்பெனிகள் தமக்குத் தாமே செய்துகொள்ளவேண்டிய பணிகளை, இன்று அரசியல் சோதனையில் தோல்வி கண்டோர், தமக்கு ஒதுக்கீடு செய்யும் நிதிகளைத் தாரைவார்த்து நிறைவேற்றி வருகின்றனர். அதுவும் தொழிலாளரைச் சாட்டுவைத்தே இக்கைங்கரியம் மேற்கொள்ளப்படுகின்றது.




''டிட்டோ''என்றேன்.காப்பி வந்தது. அதில் சர்க்கரை வில்லைகளை என்னால் போட முடியவில்லை. கை நடுக்கம்.

''இயல்பாக இருங்கள்.... நீங்கள் அமெச்சூர் நாடகங்களில் நடிப்பீர்கள் இல்லையா?'' என்றாள்.

''குற்றவாளி!'' என்றுகையைத் தூக்கினேன்''.

''நான் பார்த்திருக்கிறேன்.''

''நன்றி. உன் பெயர் என்ன?''

''பெயர் முக்கியமா? நான் ஒரு பெண். உங்களை நான் அழைத்ததற்கு ஒரு சுயநலமான காரணம் இருக்கிறது. என்னை நீங்கள் விரும்புகிறீர்கள் இல்லையா?''

''ரொம்ப அப்பட்டமான கேள்வி.''

''அன்பரே! நீங்கள் என் கடிதத்தைப் படித்துவிட்டு என்னை நாடித் தியேட்டருக்கு வந்தது, தெற்கு வியட்நாம் பற்றிப் பேசவோ அல்லது என்னுடன் சேர்ந்து அல்ஜீப்ரா படிக்கவோ இல்லை என்று நினைக்கிறேன். என்ன?''

நான் பதில் சொல்லவில்லை.

''உங்கள் எதிரே நான் உட்கார்ந்திருக்கிறேன். உங்களுக்கும்



எனக்கும் இரண்டரை அடி தூரம் இருக்கிறது. இந்தத் தூரம் குறைய உங்களுக்கு ஆசையாக இல்லையா?'' என்றாள்

''ஆம்'' என்றேன்.

''நான் இப்போது 15- ஏ,ஹனுமான் ரோட்டுக்குச் செல்லப்போகிறேன். அங்கே வந்து என்னைச் சந்திக்கிறீர்களா?''

''எனக்குப் புரியவில்லை. நான் உங்களுடனேயே வரலாமே.''

''அது முடியாது. அதற்கு முன் ஒரு நிபந்தனை. உங்களைப் போல் எனக்கு நாடகப் பித்து உண்டு. நீங்கள் நடிப்பதைப் பார்க்கும்போதெல்லாம், என் வாழ்க்கைச் சிக்கலைத் தீர்க்கக் கூடியவர் நீங்கள்தான் எனத்தோன்றும்....''

''சிக்கலா! எனக்கு அது விளக்கெண்ணெய்''

''இது ரொம்ப விநோதமான, சுவாரஸ்யமான,சோகமான சிக்கல்.''

சில தாள்களை அவள் எடுத்துத் தந்தாள். ஃபர்ப்யூம் மணம் வீசும் நீலத்தாள்கள்.

'' என்ன இது?'' என்றேன்.

''நம் வாழ்க்கையில் சில சமயம் ஒரே மாதிரி சம்பவம் திரும்பத்திரும்ப நிகழ்கிற மாதிரி தோன்றுவதுண்டு இல்லையா? என் அண்ணனுக்கு அந்த அனுபவம் அடிக்கடி வருகிறதாம். எது நடந்தாலும் முன்பே ஒரு தரம் நடந்துதான் மறுபடி நடக்கிறது என்ற எண்ணம் உண்டாகிறதாம் அவனுக்கு.''

''அண்ணனா? எங்கே அவன்?''

''மூன்று மாதமாகிறது காணாமல் போய்.''

'' ஏன்?''

''இந்தக் காகிதங்களில்தான் அதற்கு விடை இருக்கிறது. இதெல்லாம் அவன் எழுதியவை. அவன் வாழ்க்கையில் நடந்ததாம். 'முடிவில்லாமல் திரும்பத் திரும்ப இது வருகிறது. இதை முடித்து வைத்துவிட்டு, தினசரிப் பத்திரிகையில் ஒரு அறிவிப்புக் கொடு. நான் வருகிறேன்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.''

''நான் என்ன செய்ய வேண்டும்?''

''நீங்கள் நடிகர். கற்பனையுள்ளவர். இதற்கு ஒரு முடிவைச் சொல்லுங்கள். என் பிரிய சகோதரனை நான் திரும்ப அடையத் தயவு பண்ணி உதவுங்கள்.''

''அழாதே. இப்போதே படிக்கிறேன்.''

'' படியுங்கள். நான் போகிறேன். அங்கே காத்திருக்கிறேன்...15- ஏ ஹனுமான் ரோடில். உங்களுக்காக அங்கே காத்திருக்கிறேன். நிதானமாக இங்கேயே படியுங்கள். படித்துவிட்டு யோசியுங்கள். யோசித்துவிட்டு என்னிடம் வாருங்கள். சரியா?''

''சரி''

''ஞாபகமிருக்கட்டும், நான் உங்களையே நம்பியிருக்கிறேன். என் அண்ணனை நான் பிரிந்திருக்க முடியாது. சரியாகப் படியுங்கள். நான் நிறைய கேள்விகள் கேட்பேன்.''

அந்தக் காகிதங்களை நான் அடுக்கினேன். துவக்கத்தைத் கவனித்தேன். புது விதமாக இருந்தது. ஆரம்பமே அலாதியாக இருக்கிறது என்று சொல்லி நிமிர்ந்தேன். அவளைக் காணவில்லை. அந்த விநோதமான துவக்கம் என்னை ஈர்த்தது.

அன்புள்ள வாசகரே, நீங்கள் இதைப் படிப்பதற்கு முன்னால் ஒரு விஷயம். இதைப் படிக்காதீர்கள். இது ஒரு மாயச்சூழல். இதில் அகப்பட்டுக்கொண்டு நான் இதுவரை தப்பவில்லை. முதலிலேயே எச்சரிக்கையாகச் சொல்லிவிட்டேன், விலகுங்கள். இன்னும் படித்துக்கொண்டிருக்கிறீர்களே! ஒரு தடவை சொன்னால் உங்களுக்கு தெரியாது? ஏன் இந்த பிடிவாதம் ? படிக்காதீர்கள்.ஐந்து எண்ணப் போகிறேன் பார்க்கலாம். 5 4 3 2 1...

ஹலோ! இன்னமும் என்னுடனேயே இருக்கிறீர்களே !சரி, உங்கள் விதி இது. எப்பொழுதோ நிர்ணயித்த அமைப்பின்படி நமக்கும் உங்களுக்கும் எனக்கும்- நடக்கிறது. அதனால்தான் நாம் இருவரும் இங்கே அகப்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

நாம் இருவரும்.

என்னைத் தெரியாது உங்களுக்கு. சொல்கிறேன். நான் டில்லிவாசி. இளைஞன். எப்படிப்பட்ட இளைஞன்? அந்த வியாழக்கிழமை காலை எனக்கு வந்த கடிதத்தைப் பார்த்துவிட்டு அளவில்லாத ஆனந்தம் அடைந்தவன்.


அப்படி என்ன கடிதம்?'ரொம்ப அந்தரங்கம்' என்று விலாசத்துக்கு மேல், எழுதி, சிவப்பில் அடிக்கோடிட்ட கடிதம். ஒரு பெண்ணின் வட்டவட்டமான

(23ஆம் பக்கம் பார்க்க)




**தரம்-04 மாணவர்களுக்காக கடந்தவார சுடர்ஒளி வாரமலரில் வெளிவந்த படிமுறைப்பரீட்சை -07 இன் விடைக்குறிப்புக்கள்.**


ஆசிரியர்: திரு.யுஎல்.எம்.சாஜித்,கல்முனை.

01. 1) பலூன்கள். 2) ஊத ஊத.
    3) சுவாசத்தை அடக்கி. 4) அழகு + அழகான.
02. 1) காடு/கானகம்/வனம்/ஆரணியம்.
    2) கொடை/தானம். 3) மருந்து. 4) இரவு.
03. 1) அந்தம். 2) மாரி. 3) சேய்மை. 4) இகழ்.
04. 1) 4 2) 2 3) 4 4) 1
05. 1) Apple. 2) Computer. 3) Srilankan National Flag.
06. 1) B 2) A 3) A 4) B
07. 1) 2 2) 1 3) 2 4) 3
    5) 2 6) 2 7) 1
08. 1) 905 2) 1.2, 0.9, 0.6, 0.4
    3) 5000 + 600 + 90 + 1 4) 9098, 9100 5) 0
09. 1) 2 2) 2 3) 3 4) 1
    5) 3 6) 3
10. 1)  2)

| | | |
|---|---|---|
| | 4 | |
| 9 | 14 | 11 |
| | 33 | |

11. 1) 1 2) 2
12. 1) த-நரி, ஆ-Fox
    2) த-மரங்கொத்தி, ஆ-King Fisher
    3) த-உழவு இயந்திரம், ஆ-Tractor
    4) த-ஒலியெழுப்பத் தடை, ஆ-No Horning
13. 1) Exhibition 2) News
14. 1) போத்தல் 2) செய்தித்தாள்/பத்திரிகை.
15. 1) சமயம். 2) கடிகாரம்.
16. பொருத்தமான கருத்துள்ள திருத்தமான ஐந்து வாக்கியங்கள்.





கொழும்பு ஹின்னி அப்புஹாமி மாவத்தையில் உள்ள ராஜேஸ்வரி கல்வி நிலையத்தில் விஜயதசமி அன்று பாலர் பாடசாலை மாணவர்களுக்கிடையில் வினோத உடைப்போட்டி இடம்பெற்றது. இதில் பங்குபற்றிய பாலர்களும், பெற்றோர்களும் முதலாவது படத்தில் காணப்படுகின்றனர். இரண்டாவது படத்தில் பாலர்களுடன் சக்தி எப்.எம். அறிவிப்பாளர் எல். கிருபா, கல்வி நிலையப்பணிப்பாளர் திருமதி மஞ்சுளா, பாலர் கல்வி ஆசிரியை செல்வி அனுஷா, தரம் ஐந்து புலமைப்பரிசில் ஆசிரியர் பி. அம்பிகைபாகன், விஞ்ஞான ஆசிரியர் ரவி ஆகியோர் காணப்படுகின்றனர்.

# மன்னிக்கவும்...

(22ஆம் பக்கத் தொடர்ச்சி)

கையெழுத்து . எனக்கு அதற்குமுன் பரிச்சய மில்லாத அழகான, மிக அழகான மேற்படி. கிழித் துப் பிரித்துப் படித்தேன். சிவமயம் கிடையாது. தேதி கிடையாது. விலாசம் கிடையாது 'டியர்' கிடையாது. அன்பரே கிடையாது. நேராக அம்பு போன்ற வாசகங்கள்.

''உங்களைத் தினம் காலையில் ஜன்னல் வழியாகப் பார்க்கிறேன். எந்த ஜன்னல், எந்த வீடு என்பது உங்களுக்குத் தெரியாது. உங்களுடன் பேச எனக்கு விருப்பம். உங்கள் முகத்தின் கவர்ச்சியும், கலைந்த தலையின் கவர்ச்சியும், கண்களில் தெரியும் குறும்பும் எனக்கு இதை எழுதும் தைரியத்தைத் தருகின்றன. சத்தியமாக நான் உங்களைக்-

நான் இதுவரை எழுதியதில் 'சம்மதமிருந்தால்' என்னைச் சந்திக்க உங்களுக்கு ஆவலிருந்தால், த. செய்து 26ஆம் தேதி 'மாலை 5- 30'க்குப் பாரகம்பா ரோட்டும் கனாட் வெளிவட்டமும் சந்திக்கும் இடத்திற்கு அருகில் உள்ள பஸ் ஸ்டாண்டில் காத்திருங்கள். நான் உங்களைச் சந்திக்கக் கட்டாயம் வருகிறேன்..

உங்களுக்கு என் அன்பு X X X

பி.கு: நான் சற்று உயரமான பெண். ராத்திரி நீலத்தில் சாரியும் அதே நீலத்தில் சோளியும் அணிந் திருப்பேன். தலையில் ஒரு ரோஜா வைத்திருப்பேன்.

கடிதத்தைப் படித்ததும் நான் குதித்தேன் என்பது மிகையாகாது. படித்ததும் எனக்கு ஏற்பட்ட உணர்ச்சிகள் வார்த்தைகளாகமாட்டாது. நான் ஒன்றும் பெரிய பால் நியூமன் இல்லை. சுமாரான முகம்தான். இந்தச் சுமாரில் மோகம் கொண்டு அவ்வளவு தைரியமாகக் கடிதம் எழுதுகிறாள் என்றால் அவளுக்கு மிகவும் தனிப்பட்ட ரசனை இருக்க வேண்டும். அதுவும் எப்படிப்பட்ட கடிதம்,'நான் உங்களைக்- என்று கோடிட்டிருப்பதற்கு என்ன அர்த்தம்? கடிக்கப் போகிறேன் என்றா? இல்லை. அப்புறம் X X X

அது என் மனத்தில் தோற்றுவித்த அது என்ன வார்த்தை?

தேதி என்ன?25. நாளை அவளைச் சந்திக்க வேண்டும். டெரிலின்களைத் துவைத்தேன். பாண்டை ட்ரைக்கிளீன் செய்தேன் அந்த நவீன சலூனுக்கு(077லைசன்ஸ் டு கட்)சென்று தலை வெட்டிக்கொண்டேன். நடை பழகினேன். பூட் ஸுக்கு முகம் தெரிய பொலிஷ் கொடுத்தேன்.

நீங்கள் எப்பொழுதாவது ஒரு பஸ் நிலையத் தில் மாலை வேளையில் கருநீல சாரியும் தலை யில் ஒற்றை ரோஜாவும் அணிந்த முன்பின் தெரியாத பெண்ணுக்காகக் காத்திருக்கீறீர்களா? கஷ்டமான வேலை. ஏன் சொல்லுகிறேன். பஸ் ஸ்டாண்ட் ஜனங்கள் வரும் இடம். பஸ்கள் சிவப்பு வெள்ளமாக வந்து வந்து போகும் இடம். பிச்சைக்காரர்கள், பட்டன் விற்பர்கள், ஆண்கள் பெண்கள் எவ்வளவு பேர்! இதில் அந்தக் கருநீலத் தைத் தேடுவது எனக்குக் கடினமாக இருந்தது. அன்றைக்கென்னவோ ரொம்பப் பேர் பிடிவாத மாகக் கருநீலத்தில் புடைவை கட்டிக்கொண்டு எனக்கு எனக்கு முன் மிதந்தார்கள் மேலும் ராத்திரி நீலம் என்பது என்ன வர்ணம் ? நாகப்பழ வர்ணமா? அதுவே எனக்குச் சரிவரத் தெரிய வில்லை. முன் சொன்னபடி நிறையப்பெண்கள் பிடிவாதமாகக் கருநீலம் அணிந்திருந்தார்கள். ஒற்றை ரோஜா இல்லாததால் அவர்களை விலக்கி னேன். ஒற்றை ரோஜா அணிந்திருந்தவர்களிடம் புடைவை நிறமில்லை. இரண்டும் இருந்த ஒருத்தி வந்தாள். வயது 50க்கு மேலிருக்கும்.

35 நிமிடத்தில் டில்லிப்பெண்கள் உடையணி யும் பாணியைப் பற்றி 5 பக்க வியாசம் எழுதும் அளவுக்கு என் அனுபவம் பெருகியிருந்தது. அவளைக் காணோம்.

என் அருகில் மற்றோர் இளைஞன் நின்று கொண்டிருந்தான். அவனும் தலைவாரிக் கொண் டிருந்தான். அவனும் டெரிலின் அணிந்து கொண்டு போகிற வருகிற பெண்களை எல்லாம் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். என் அருகே வந்து வாயில் சிகரெட் பொருத்திக்கொண்டு தீ கேட்டான்.

நான் பைக்குள்ளிருந்த ' லைட்'டரை எடுத்து அவன் முன் 'க்ளிக்'கினேன்.

அந்த இளைஞன் என்னையே பார்த்தான். பார்த்துச் சிரித்தான்.

''எத்தனை நேரம் காத்திருக்கிறீர்கள்?''

''அரை மணியாக.''

''பஸ்ஸுக்காக?''

''இல்லை, வரப்போகிற ஒரு நண்பருக்காக.''

''நான் சற்று முன்தான் வந்தேன். இங்கே ஒரு பெண் வந்தாளா?பார்த்தீர்களா? கருநீலத்தில் சாரியும் தலையில் ரோஜாவும் அணிந்த உயரமான பெண்.''

எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''இல்லை. இதுவரை வரவில்லை. நீங்கள்.....''

- என்று சொல்லி முடிப்பதற்குள் எதிரே அவள் வருவதைப் பார்த்தேன். ஒரு 75 அடி தூரத்தில். சத்தியமாக அழகான பெண். சுருங்கச் சொன்னால் தேவதை. இன்னும் சுருங்கச் சொன்னால் வாவ்! இரட்டைச் சுற்றாகச் சற்று உடம்போடு ஒட்டி அந்தக் கருநீலத்தைக் கட்டி யிருந்தாள். உடல் நிறம் சாரிக்கு நேர் எதிர். எப்ப டிப்பட்ட அழகு! எதிரே போகும் இளைஞர்களை, 'டிஸ் ஆர்மமெண்ட்' பற்றித் தீவிரமாகப் பேசிக் கொண்டு செல்லும் இளைஞர்களை, தடுத்து நிறுத்தி ஏற இறங்க விசிலடிக்க வைக்கும் அழகு.

சிகரெட் இளைஞன் கடந்து சென்று எதிரில் வந்தவளைச் சந்தித்தான். அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள். பேசினாள். அவன் ஆள்காட்டி விரலைக் கவிழ்ந்த 'எல்' வடிவத்தில் வாயில் வைத்து,சீழ்க்கையடித்து டாக்ஸி வரவழைத்து அதில் ஏறிக் கொண்டார்கள். சென்றார்கள்.

நான் எப்படி உணர்ந்தேன்?' நித்த நித்தம் பொய்யடா பேசும் மாதர் சவகாசம் விட்டு உய்யடா உய்யடா உய்!' என்று ரோஷமாகப் பாடிய பட்டினத்தார் போல்.

என்னை இப்படி ஏமாற்று வதில் அவளுக்கென்ன சந்தோஷம்

நான் ஒரு அப்பாவி! சாதாரண ஆசாமி. ஏன் என்னைத் தேர்ந்தெடுத்து வரவழைத்து இப்படிப் புத்தியைக் காட்ட வேண்டும்?

ஏன் என்பதற்குப் பதில் மறுநாளைக்கு மறுநாள் கிடைத்தது.

ஒரு கடிதம் வந்தது.

''ரொம்ப ரொம்ப ரொம்ப ரொம் ஸாரி! அன்று உங்களுக்கு என்மேல் அளவில்லாத கோபம் வந்திருக்கும்.1. நான் லேட்டாக வந்தேன் 2.உங்களை நான் சந்திக்க ஆவலாக வந்துகொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக என் தம்பி வந்துவிட்டான். நான் உங்களைச் சந்திக்கப் போவது என் தம்பிக்குத் தெரியக்கூடாது அவன் ஒரு மாதிரி.

இந்த தடவை நிச்சயம் உங்களை ஏமாற்ற மாட்டேன். தயவு செய்து திங்கட்கிழமை இரவுக் காட்சிக்கு ஓடியன் தியேட்டருக்கு வாருங்கள். உடன் டிக்கெட் வைத்திருக்கிறேன். ஸீட் நம்பர் ஜி-18.ஜி-17 இல் நான் காத்திருப்பேன்.

பி.கு: பழைய படம். கூட்டமிருக்காது.

பி.பி.கு: சமர்த்தாயிருங்கள்.''

நான் இதைப் படித்ததும் புதிதாகப் பிறந்தேன். எவ்வளவு சுலபமாக அவளை நான் சந்தேகித்துவிட்டேன்! கண்ணே,ஆம்ப்லேட் என் கனவுகளில் வரும் கன்னி நீ. என்னை மன்னி. உன்னைப் பார்க்க ஓடியனுக்கு என்ன, கம்போடியாவுக்குகூட வருகிறேன்.

தியேட்டரில் கூட்டமில்லை. 9.30க்குக் காட்சி. துப்பாக்கி- குதிரை- சிவப்பு இந்தியர்கள் படம். முடிவெட்டுத் தேவையுள்ள சில இளை ஞர்கள் சிகரெட் பிடிக்கப் பழகிக்கொண்டிருந் தார்கள். கட்டம் கட்டமாகச் சட்டையணிந்த ஒரு இளைஞனின் முதுகு தெரிந்தது. ஐஸ் க்ரீம் சப்பிக்கொண்டே திரும்பினான். மன்னிக் கவும். அது ஒரு பெண். பார்க்குமிடமெல்லாம் ஒளிபரப்பும் 'மார்க்கி' . சதிஷ் குஜ்ராலின் நவீன ஓவியங்களை, ஏதோ நாய் கொண்டு வந்து போட்ட வஸ்துவைப் போல் பார்த்துக் கொண்டிருந்தார் ஒரு பெரியவர், அந்தக்கட் டத்தில் அவள் இல்லை. மாடியில் நான் ஜி- 18ல் போய் உட்கார்ந்தேன். ஜி 17- காலியாக இருந்தது. ஏன் ஜி- 16,15,14,13- அந்த வரிசையே காலி. மேலும் ஏ,பி,ஸி,டி,ஈ,எஃப் எல்லா வரிசைகளும் காலி. ஓரத்தில் சாஸ்திரத் துக்கு ஒரு சர்தாஜி உட்கார்ந்திருந்தான். அவன் என்னைப் பார்த்தது எனக்குப் பிடிக்கவில்லை.

ஸாடின் திரையைத் தூக்கினார்கள். அவள் வரவில்லை. அசௌகரியமான நாட்களில் ஏதோ சாப்பிடுங்கள் என்று ஒரு பெண் சிரித்தாள். அவள் வரவில்லை. பன்னிரண்டு பையன்கள் ஸ்நானம் செய்துவிட்டுக் கார்பாலிக் சோப் உபயோகிக்கச் சொன்னார்கள். அவள் வரவில்லை. டினு மினு மின் என்று ஸிதார் வாசித்துவிட்டு 3 சிங்கம் காட்டிவிட்டு, குடும்பக் கட்டுப்பாடு பற்றி டாகுமெண்டரி காட்டினார்கள். அவள் வரவில்லை. டொம் அன்ட் ஜெர்ரி கார்ட்டூன். ம்ஹூம், ட்ரெய்லர்கள்.... இடைவேளை,திரை விழுந்தது. அவள் வரவில்லை.

நான் என்பெயரைச் சொல்லிக்கொண்டு உன்னைப் போல் ஒரு முட்டாள் இருக்க முடி யாது. ஒரு தடவை ஏமாந்தாய். இன்று மறுபடி ஏமாறப்போகிறாய். உன்பக்கத்தில் வந்து உட் காரப்போவது அந்தப் பெண் அல்ல. வயசான ஆசாமி ஒருத்தர் வரப்போகிறார். யாரோ தெரிந்தவர்கள் இப்படி விளையாடுகிறார்கள் உன்னிடம். நீயும் பாவ்லாவின் நாய் போல விதிப்படி நடக்கிறாய்! என நினைத்தேன்.

விளக்கு அணைந்து 'மெயின்' படம் துவங் கியது. துவங்கி ஒரு நிமிஷம்தான் இருக்கும். என் பக்கத்து ஸீட்டில் டார்ச் ஒளி வட்டம் விழுந்தது. என் நரம்புகளை ரவிசங்கர் வாசிப்பது போல் உணர்ந்தேன். காரணம்: திரையின் மெல்லிய வெளிச்சத்தில் அவள் என்னை நோக்கி மிதந்து வந்துகொண்டிருந்தாள். படிப்படியாக வரிசை வரிசையாக மேலேறி என்னை அணுகிக்கொண்டிருந்தாள். ஏ-பி-ஸி-டி-ஈ-எஃப்-ஜி. 1-2-3-4-5-6-7-8-9-10-11-12-13-14-15- ஓடிகோலான் வாசனை- 16- புடைவையின் சரசரப்பு -17- என் அருகில் அவள்!

''ஸோ ஸொரி,ரொம்ப லேட் இல்லையா நான்?''

''பவாயிழ்ழை.''

எனக்குத் தன்னிலைக்கு வரக் கொஞ்சம் தாமதமாயிற்று. அத்தனை அழகு. அத்தனை நெருக்கத்தில் இருப்பதற்கு நான் தயாராயில்லை. (உண்ணாவிரதம் இருந்தவனுக்கு முதலில் ஒரேன்ஞ் ஜூஸ் கொடுக்க வேண்டும். பாம்பே ஸ்பெஷல் மீல்ஸ் கூடாது)

''முதலில் உங்களிடத்தில் ஒன்று சொல்ல வேண்டும். நான் வலிய உங்களுக்குக் கடிதம் எழுதி உங்களை வரவழைத்து, அறிமுகமில்லாமல் நேராக உங்களிடத்தில் பேச ஆரம்பிப்பதை வித்தி யாசமாக நீங்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது...'' என்றாள்.

மேலும் சொன்னாள்: ''நான் திரிபவள் இல்லை. உயர்தரக் குடும்பம்தான். உங்களை இப்படி அழைத்ததற்குக் காரணம் இருக்கிறது. என்னைப்பற்றி நீங்கள் மேலே தெரிந்துக்கொள்வதற்குள் நான் சில கேள்விகள் உங்களைக் கேட்கப்போகிறேன். பை த வே, உங்களுக்குச் சினிமா பார்க்க வேண்டுமா?''

''சே, அதை யார் பார்த்துக் கொண்டிருக்கிறார் கள்? நீங்கள்தான் மகத்தான காட்சியாக இருக்கிறீர்களே! கேளுங்கள்.''

''என்னை நீ என்று கூப்பிடலாம்.''

'' நீ.''

''தட்ஸ் பெட்டர். சரி, கேள்வி ஒன்று: உங்களுக்கு கல்யாணமாகிவிட்டதா?''

''சத்தியமாக இல்லை.''

'' வார்த்தைகளை விரயம் செய்யாதீர்கள். இல்லை என்று சொன்னால் போதும். உங்க ளுக்கு பிடித்தமான ஆங்கில எழுத்தாளர் யார்?''

''ஹென்றி ஸ்லெஸார்.''

'' கேள்விப்பட்டதில்லை. ஸாலிஞ்சர் படித்திருக்கிறீர்களா?''

''திருவடிகளே சரணம்!பெரிய ஆள்.''

'' செக்ஸ் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?''

''எல்லாம் புத்தக அறிவு.''

''தெற்கு வியட்நாம் பற்றி?''

''வடக்கு வியட்நாமிற்குத் தெற்கே இருக்கிறது என்று நினைக்கிறேன்.''

''கம்யூனிஸம் பற்றி?''

''கேட்டுக்கொண்டே போகிறீர்களே? நான் உங்களை ஒன்று...''

''உன்னை....''

'' எஸ், உன்னை ஒன்று கேட்க வேண்டும். நீ யார்? ஏதாவது திகிலழகியா? உனக்குக் கால்கள் தரையில் பாவுமா?''

''என்னைப் பற்றிப் பிறகு சொல்கிறேன். அவசரப்படாதீர்கள்.... குடும்பக் கட்டுப்பாடு பற்றி என்ன கருத்து?''

''டொக்டர் லூப்வதியே சரணம்.''

''உங்களை எனக்குப் பிடிக்கிறது.''

''உன்னை எனக்கு டிட்டோ. பிடிக்கிறது என்பதில் மேலும் நாலு க் சேர்த்துக்கொள்ள. உன்பெயர்?''

''கிளம்பிவிடலாமா? ஏதாவது ரெஸ்டோரண்டில் போய் ஏதாவது லைட்டாகச் சாப்பிடலாமே. படம் போர் அடிக்கிறதே!''

கதாநாயகன் குதிரை மீதிலிருந்து விழுந்து கொண்டிருக்கும் போது தியேட்டரைவிட்டு வெளியே வந்து நடந்தோம். என்னைப் பொறுத்தவரை மிதந்தேன். அந்த ராத்திரியை என்னால் நம்ப முடியவில்லை. ஃப்ளாரசெண்ட் வெளிச்சத்தில் அவள் இந்த உலகத்துப் பெண் போல் தெரியவில்லை.

எதிர் எதிரே உட்கார்ந்தோம். ''ஒரு பைன் ஆப்பிள் கேக். ஒரு எஸ்பிரஸ்ஸோ காப்பி எனக்கு.'' என்றாள். ''உங்களுக்கு?''

(இனி இந்தக் கதையை முதல் வரிக்குத் திரும்பச் சென்று படிக்கவும்.)

-நன்றி சுஜாதா-

‘ஓயாத அலைகள்’, ‘மலரும் மொட்டுக்கள்’ என சிறுவர்களுக்கான இருநூல்களை கல்விகற்பிக்கும் ஆசிரியரான உ.நிசார் வெளியிட்டிருக்கிறார். ஓயாத அலைகள் கவிதைத்தொகுப்பு,

“அதோ!
அங்கே பார்
தூர....
மிக மிகத் தூர
ஒரு தீபம் ஒளிர்கிறது

நெறிப்படுத்தலில் இசையும், விளையாட்டும் இதுவரை வெகுவிரைவாக ஈர்த்துவிடுகின்றன. சிறுவர் பாடல்களுக்கான அவசியத்தை இது வலிமையாக வலியுறுத்துகின்றது.சிறுவர்




# ஓயாத அலைகளும், மலரும் மொட்டுக்களும்

## ஓர் ஆசிரியரின் இரு நூல்கள்

மலரும் மொட்டுக்கள் சிறுவர்களுக்கான பாடல்களைக் கொண்டது.

“கவிதை எங்கும் இருக்கிறது. அதை இனம் கண்டுகொள்ளும் ஆற்றல் கவிஞன் ஒருவனிடம் மட்டுமே உள்ளது. கவிஞனுக்குக் கிடைத்திருக்கும் அந்த ஆற்றல் இறைவனின் ஓர் அருட்கொடையாகும்” எனக் குறிப்பிடும் நூலாசிரியர் கண்டி மாவட்டத்தின் உடுநுவரை முறுத்த கஹமுலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறார்.

ஓயாத அலைகள் உ.நிசாரின் நான்காவது கவிதைத் தொகுதி.

“பசிக்கு உழைக்கத்
தொடங்கினாய் உழைப்பிலே -
உன் காலம் கழிகிறது
பசிக்கு நீ
உணவருந்தவில்லை”

என வாழ்வின் சமூக யதார்த்தங்களைச் சொல்லும் கவிதைகளும்”

“உலகம்
இன்றுடன்
முடிந்துவிடாது
நாளை உதயமும்
உனக்காகக்
காத்துநிற்கிறது
நம்
பிக்கை தான்
வாழ்க்கை”

என இளைஞர் சமூகத்திற்கு நம்பிக்கை வழங்கும் கவிதைகளையும் இந்நூல் தருகின்றது.


கவிதை காதலுக்குரியது என்று எல்லைகட்டப்பட்ட காலம் ஒன்றிருந்தது. மரபுக் கவிதைகளிலிருந்து புதுக்கவிதை வரை வளர்ச்சி கண்டுவிட்ட கவிதையின் பாடுபொருள் இன்று விரிவு கண்டுவிட்டது. அதன் எல்லைகள் விசாலமடைகின்றன. கவிஞன் சகலவற்றையும் பாடுகிறான். அதுவே கவிதையின் பாடுபொருள் விதியாகவும் வரையறுப்புப் பெற்று வருகின்றது. உ.நிசார் இந்தக் கட்டுக்கோப்பிலிருந்து எப்படித் தப்பிவிடமுடியும். அவருடைய பாடுபொருள்களும் விரிவடைகின்றன.

“நம்பிக்கைதான் வாழ்க்கை
உழை
இன்றைக்கு மட்டுமல்ல
நாளைக்கும் சேர்த்து
உழை”

உனது நம்பிக்கை
அங்கே...
ஒளிவீசுகிறது”!

என்று ஆரம்பித்து ‘கனவு காணும் அம்மா!’, ஓயாத அலைகள், எங்களூர் புளியமரம், அழகு, நிறைவு, திருப்தி, மந்தாரம், மந்தஹாசம், மயிலாகி குயிலாகி, மலரானாள், ஒய்யாரம், காலம் சிரித்து, பட்டம், ஆசை, பூவைக் கேட்டுப்பார், முடிவிலி, மயிலே வா, இயற்கையைப் காதலி, வழிதவறி, ஏழாவது அறிவு, நாணம், முதுமைக்கு வந்தனம், யதார்த்தம், நம்பிக்கை, மயில்களும் கிளிகளும், அலட்சியம், பூமி சிலிர்த்தது, மாண்பு, நீ நிலா நான் பூமி, எனது இரவு நீ, கனவு காணுங்கள் எனும் தலைப்புக்களில் பல்வேறு அம்சங்களை பாடு பொருளாக்கியுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி வ.மகேஸ்வரன் ஓர் அணிந்துரை வழங்கியுள்ளார். தமிழ்க்கவிதை மரபு என்பது குறித்து விவரிக்கும் அவர் உ.நிசாரின் கவிதைப் பிரவேசத்தின் பின்புலம் தொடர்பாக கூறும்போது:-




“அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரிலிருந்து ஆரம்பிக்கும் இஸ்லாமியக் கவிஞர்களின் புலமைப் பாரம்பரியம் மிகநீண்டது. இன்றைய ஊடகங்களின் அதிக பக்கங்களை யும் காலங்களையும் (Air Time) நிரப்புபவர்களாக இவர்களில் பலர் விளங்குகின்றனர். அவ்வாறனதொரு பின்புலத்திலிருந்து தான் கவிஞர் உ.நிசாரையும் கவனித்தல் வேண்டும்” என்று குறிப்பிடுகின்றார்.

“பெற்றோரைப் பேணப்பழகு
பேதங்கள் மறக்கப் பழகு
உற்றாருக்குதவப் பழகு
உழைத்து உண்ணப் பழகு”

எனப் பாடும் நிசாரின் மலரும் மொட்டுக்கள் எனும் இன்னொரு தொகுதி சிறுவர்களுக்கான பாடல்களைக் கொண்டது.

இன்றயை சிறுவர் சமுதாயத்திலிருந்தே நாட்டின் நாளைய தலைவர்கள் உருவாகின்றார்கள். கதை, கவிதை, கலைகள், விளையாட்டு என நெறிப்படுத்தப்பட்டு அவர்கள் உருவாக்கப்படுகின்ற போதே நல்ல தலைவர்கள் நாளை உருவாவார்கள். இந்த

இலக்கியம் நலிந்தவோர் அம்சமாகவே நம்மிடம் உள்ளது. அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஏராளமான படைப்புகள், படைப்பாளர்கள் தேவைப்படுகின்றனர். உ.நிசாரின் மலரும் மொட்டுக்கள் அந்தவகையில் ஒரு நல்வரவாகும்.

மலரும் மொட்டுக்கள், வா வெண்புறா, கல்வி கற்போம், கல்யாணம், குட்டி முயலே, காந்தித் தாத்தா, மரங்களை நடுவோம், எங்கள் குடும்பம், புகை வண்டி, தம்பிப் பாப்பா, மரங்கள், ஏற்றமிகு இயற்கை, இரவு சிரித்தது, உழைத்து உண்ணப் பழகு, புவியீர்ப்பு விசை, இன்றுபோய் நாளை வா, நியாயம் எங்கே?, பந்தடிப்போம் ஆகிய தலைப்புக்களிலான பதினெட்டுபாடல்களை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது.

சிறுவர் பாடல்களில் ஓர் இசைத்தன்மை இருத்தல் அவசியம். இசையுடன் பாடும் போதே அது நெஞ்சில் பதிவதும், உள்ளடக்கம் மனத்தில் ஆழமாக வேரோடுவதும் இடம்பெறும். ‘குட்டி முயலே’ போன்ற சில பாடல்களில் அத்தன்மை இருக்கின்றது.

“குட்டி முயலே! குட்டி முயலே!
கிட்ட ஓடி வா - உன்
பட்டுப் போன்ற மேனியினை
தொட்டு மகிழ வா
துள்ளித் துள்ளி தோட்டமெங்கும்
புல்லை மேயவா - கொஞ்சம்
அள்ளி உனை அணைத்துக் கொள்ள
வெள்ளை முயலே வா!”

சிறுவர்களுக்கான பாடல்களை, கவிதைகளை புனைபவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய முக்கியமானதோர் அம்சம் இருக்கிறது. நிறத்தால் பிராணிகளை பேதப்படுத்தக் கூடாது என்பதுதான். எதுகை, மோனைக்காக சொற்களைப் பயன்படுத்துவ தனால் இது ஏற்படுகிறது. வெள்ளை முயல் மட்டும்தானா . அன்புக்குரியது? அப்படித்தான்

**கே.வி.**

அவை பிஞ்சு மனங்களில் பதிவாகும்.

நூலாசிரியர் நிசார் சிங்கள மொழியில் கல்விகற்றவர். தமிழைத் தானாக கற்றுக்கொண்டு கவிஎழுதும் வல்லமை கொண்டுள்ளார்.

கனவுப்பூக்கள், நட்சத்திரப் பூக்கள், வெண்ணிலா என்பனவும் ஆசிரியரின் ஏனைய நூல்களாகும்.




# பசுமைகளாகத்தெரியும் தூரத்து பச்சைகள்

“சே! இந்தியாவிலே பிறக்காமல் போனேனே...”

“இதென்ன அம்மான் திடீரென்று இப்புடி குளறுரியல்”.

“எட நான் இல்லே ராசா. இளம் கவிஞர் ஒருவர் இப்புடி அரட்டுனவர்”

“என்னவாம்”

“அங்கே கவிதை எழுத நிறைய ரீம் இருக்காம். இங்கே யுத்தத்தைத் தவிர ஒரே கோதாரியும் இல்லியாம்”.

“என்ட தம்புரானே!”

“வரதட்சிணைக் கொடுமை, சிசுக் கொலை என்று எக்கச்சக்கமான பிரச்சினைகளிலே இந்தியா அல்லாடுது”

“அது கிடக்கட்டும். இவர் அதுகளைப் பத்தி இங்கே எழுதலாம் தானே”

“முடியாதாம். யதார்த்தமாக இல்லையென்று தட்டிப்போடு வாங்கலாம். அங்கே என்றால் ஓர் அரசியல்வாதியைப் படைத்து கிழி கிழியென்று கிழிக்கலாமாம். அரசியல்வாதிகள் ரொம்ப சீப்பாம்”.

“ஏன்? இங்கே என்னவாம்”

“எட பேயா புடிச்சு உள்ளே இல்லே போடுவாங்கள். இங்கே ஒரு மந்திரியார் துப்பாக்கியோட திரியரவர் தெரியாதே”.

“நல்ல பகிடிதான்”

“பெடிச்சியல் பிறந்த உடனே கொன்றுபோடுகிற பழக்கம் அங்கே பெருகிக்கொண்டே போவுது. இதுக்குக் காரணம் வரதட்சிணைதான். ஆனானப்பட்ட மந்திரிமார் வீட்டிலே கூட இதுதான் நிலைமை”.

“சே! சட்டம்தான் இருக்குதே!”

“ஆர் அப்பு இல்லை என்றது. அர்ஜுன் சிங் பொறுப்புள்ள பதவிக்காரர். மனித வளத்துறை அமைச்சர். இவர் குடும்பத்தின் மீதே வரதட்சிணை வழக்கு வந்திருக்கிறது”.

“ஆங் பாத்தியலே! அதுதான் சொன்னனான் சட்டம் இருக்கல்லே. வழக்கு என்னவாம்?”

“மந்திரியின் பேரனுடைய மனைவி, தன் கணவரும் அவர் குடும்பத்தாரும் மெர்டிசிஸ் கார், அடுக்குமாடி குடியிருப்பு வேண்டும் என்று சொல்லி கொடுமை செய்ரவங்களாம் என்று வழக்கு போட்டிருக்காள்”.

“என்ன ஒரு ஜனநாயகம் பாருங்கோ! அமைச்சர் என்னவாம்?”

“குடும்ப விவகாரங்களிலிருந்து விலகியிருக்கும் எனக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொல்லிப்போட்டார்”.

“அடடா. நாட்டு நிர்வாகத்தைக் கவனிப்பவருக்கு வீட்டு நிர்வாகத்திலே கல்தா கொடுத்து போட்டார்களோ”

“இப்புடித்தான் ராசா எங்களி[illegible] இளம் தலைமுறைகூட இருக்குது. நாட்டு பிரச்சினைகளை அவதானித்து எழுதாமல் எங்கள் படைப்புக்களை மதியாமல் அதுகளைத் தேடி அனுமானைப்போல் கடல்தாண்டி ஓடித்திரியினம். தூரத்துப் பச்சை என்றால் கதைகள் என்ன பிரச்சினைகளும் இவையளுக்கு பசுமையாய் தான் தெரியுது. இதுகளை சுட்டிக் காட்டினால் சொல்லடி, பொல்லடி என்று கிளம்புராங்கள்”.

“என்ட தம்புரானே!”

# ஆட்டுக்கடியும், லட்சுமிகாந்தன் அர்ச்சனையும்

“பேராசிரியர் கைலாசபதி பத்திரிகா தர்மம் பற்றி ஏதேனும் எழுதியிருக்கிறாரோ?”

“எழுதியிருப்பார். அதுக்குப்போய் ஏன் தலையைப் பிறாண்டிக்கொண்டு நிக்குராய்?”

“இல்லை அம்மான். அவரிண்ட பரமார்த்த சிஷ்யனாக சவடாலடிக்கிற ஒருத்தரிண்ட கட்டுரையை படிச்சனான்”

“அடிசக்கை!”

“மஞ்சள் பத்திரிகை நடத்தின இந்தியக்காரர் லட்சுமிகாந்தன் பற்றியெல்லாம் எழுதியிருக்கிறார்!”

“என்ட தம்புரானே! கைலாசுக்கும் லட்சுமிகாந்தனுக்கும் என்ன தொடர்பாம்”.

“ஒரு கோதாரியும் இல்லே. எங்கள்ண்ட கல்விமானுக்குத்தான் ஏதோ தொப்புள்கொடி உறவு போலக் கிடக்கு”.

“ஏன்அப்படி கதைக்கிறாய்”

“பின்னே என்ன அம்மான். கழுதைக்கு கற்பூர வாசனை தெரியுமோ, வக்கிரபுத்தி, குடிச்சுப் போட்டு எப்படியும் உளரலாம், திரிபுவாதக்காரர் இப்புடி லட்சமி காந்தனார் பயன்படுத்திய ஒருதொகை சொற்களைத் தானே இவரும் எடுத்துவீசுரார்”

“கதிரமலையானே! இதென்ன கூத்து. கருத்து முரண்பாடு என்றால் கைலாஸ் பாணியில் அழகாக எடுத்து வாதிட வேண்டியதுதானே”

“கருத்து முரண்பாடோ. இவர் என்ன சொல்லுறார் என்றே விளங்க இல்லே அம்மான். ஆபிரிக்க இலக்கியம் பற்றிய கட்டுரையையும் அவர் சொல்லுற கட்டுரை எல்லாத்தையும் படிச்சனான். எதிலேயும் அவை வேண்டாம் என்று சொல்லப்பட இல்லியே! தம்பி தெய்வேந்திரனுடைய ஸ்பீச் சையும் புகழ்ந்தல்லோ எழுதியிருக்கு. லண்டன் சுப்பிரமணியத்தாரின்ட பாஸ்க் பொருளாதாரத்திட்டத்தையும் நாசுக்காக கிண்டல் அல்லோ பண்ணியிருக்கு. பின்னே ஏன் இப்புடி தலைகீழாக எழுதியிருக்கிறார்?”

“அது வாசிப்பின்ட கோளாறு கண்டியோ. இதுல பகிடி என்னென்றால் ஒன்றை வாசிச்சுப் போட்டு எது போற்றுதல், எது தூற்றுதல் என்று அறிய கொஞ்சம் நல்ல மனம் வேணும். ஆட்டைப்போல அங்கொரு கடி, இங்கொரு கடி என்று நுனிப்புல் மேய்ஞ்சு போட்டு வித்துவகர்வம் காட்ட வெளிக் கிடக்கூடாது”.

“அடிசக்கை! அப்ப இது ஓர் ஆட்டுக்கடி’ என்று சொல்ரியல்”

“அப்பிடிப்போடு. அப்பிடித்தான் ராசா சொல்லவேணும். ஏனென்றால், அப்பு, இதே பத்தியிலே பல வெளிநாட்டு ஆக்கங்களை மொழிபெயர்த்த கணேஷ், ஆபிரிக்க கவிதைகளைத் தந்த பத்மநாதன், பேராசிரியர் சிவசேகரத்தின் கவிதை ஆக்கங்கள் பற்றியெல்லாம் புகழ்ந்து நிறைய எழுதியிருக்கிறான். இளம் தம்பி தெய்வேந்திரனை அறிய மாட்டாரோ என்று கேள்வி எழுப்புகிற கட்டுரையாளர் 60களிலே இருந்து எழுதுகிற ஒருவரின் பின்புலம் அறிய மாட்டாரோ. சும்மா வாய்க்கு வந்தபடி முன்னாள் திரிபுவாத ஆதரவாளர் என்றல்லோ கப்சா விடுரார்”.

“இது ஆட்டுக்கடிதானே!”

“கிழிஞ்சுதுபோ!”

“அப்பு! இப்புடித்தான் ஒருக்கா இந்தக் கல்விமான் அளுத்கமையில் நடைபெற்ற கவிஞர் இக்பாலின் நூல் வெளியீட்டு விழாவிலே பேசுனவர். கவிதைகளில் சந்தம் இயல்பாகவே உள்ளது என்றார். அதேகூட்டத்தில் பேசிய இன்னொருவர் இல்லை என்றார். இந்தச் சமாச்சாரத்தை ‘நல்லதொரு இலக்கியச் சமர்’ என்று தலைப்பிட்டு எழுதிப்போட்டனான். இதென்னடா சண்டைகிண்டை என்றெல்லாம் எழுதியிருக்கிறான் என்று தொடை நடுங்கிப்போன மனுஷன் அந்தப் பத்திரிகையின் நிர்வாக இயக்குநருக்கு கயிறுதிரித்து கடிதம் ஒன்றை சட்டுபுட்டென்று எழுதிப்போட்டுட்டார்”.

“என்ட தம்புரானே! ஒரு கல்விமான் இப்புடிச் செய்யலாமோ?”

“அதுக்குப் பரவாயில்ல ராசா. ஆனைக்கும் அடி சறுக்கும்தானே. கல்விமான்களுக்கும் சில சொற்களுக்கு அர்த்தம் தெரியாமல் போற சந்தர்ப்பம் இருக்குதானே. ‘சமர்’ என்ற சொல்லுக்கு அர்த்தம் கண்டுபிடிக்க அகராதியைப் புரட்டி இருப்பார். ‘சண்டை’ என்று போட்டிருக்கும் குடல் கொதித்துப்போனார். நான் எங்கே சண்டை புடிச்சனான் என்று குளறிக் கொண்டோடி மொட்டைக் கடிதத்தை எழுதியிருப்பார்”.

“கதிரமலையான்தான் காப்பாற்ற வேணும். கல்விமான்களே இப்புடி என்றால் என்ட தம்புரானே!”

# கவிதைப் புனல்

தயாரிப்பு: யூ.எல்.எம்.அஸ்மினா

## அதிசயங்களின் அல்லிராணி







நீ நாணங்கொள்வதை
சொல்லிவிடுகின்றன
மெல்ல விரியும் உன் ஓகிட் கண்கள்.
பலவிதங்களில் பூக்கள்
உன் கூந்தலில்.
முன்பைவிட அழகு என்னவோ
பூக்களுக்குத்தான்.

நீ பாரதியின் புதுமைப் பெண்.
இருந்தும், அவைகளை
தீண்டுவதில்லையென புலம்புகின்றன
ஊனமுற்ற பட்டாம் பூச்சிகள்.

வாக்குப்போட்டு,
அதிசயங்களைத் தெரிந்தார்கள்.
உன் புன்னகையிலேயே
அதிசயங்கள் அடங்கிவிடும்
என்பேன் நான்.

அம்மா ராசிபலன் பார்ப்பாள்.
நான் பார்ப்பதில்லை.
நற்பலனாய் நீயிருக்க, அது எதற்கு?

ஒரு கவிஞனை விடவும்
சில வேளைகளில் நன்றாய்
இருப்பதாய்
என் கவிதைகளைச் சிலாகிப்பாய்.
[illegible]ணம் நீ அவன் காதலியல்ல!
என் காதலி.

■ மன்னார் ஞா.ஸர்வேஸ்வரன்

## குழந்தைக்கு மட்டும்...



தாயொருத்தி டாக்டரிடம்
தான்பெற்ற குழந்தை யொன்றின்
நோய்க்கு மருந்தெ டுக்க
நுழைந்தாள் ஓர் மருந்த கத்துள்

என்ன வருத்த மிது
எப்போது தொட்டு என்று
அன்னை அவளிடத்தில் -டாக்டர்
அடுக்கி வினாத் தொடுத்தார்.

வருத்தம் எனக்கு இல்லை- நான்
வைத்திருக்கும் குழந்தைக்குத்தான்
உடல் மெலிந்து வருகிறது
உடன் தடுக்க சிகிச்சை கேட்டாள்.

பசித்து அழுகிறதா?
பால் குடித்தால் துயில்கிறதா?
வலியால் துடிக்கிறதா?
வாய்திறந்து சொல்லும் என்றார்.

பசித்து அழும் போது
[illegible] என்னில் சுரப்பதில்லை
புசிக்கக் கொடுப்பதற்கு
புது வழியை வேண்டி நின்றாள்.

உங்கள் குழந்தைக்கு
உண்ணக் கொடுப்பதனை
சொன்னால்தான் டாக்ட ரென்னால்
சுகப்படுத்த முடியும் என்றார்.

தாய்ப்பாலைத் தவிர வேறு
தகரப்பால் கொடுப்பதில்லை
கொழுக்காமல் இருக்கிறதே குறை
என்ன செப்புமென் றாள்.

டாக்டர் இதன் காரணத்தை
டபக்கென்று புரிந்துகொண்டார்
குழந்தைக்கு மட்டு மினி
கொடுங்கள் தாய்ப் பாலை என்றார்.



■ அக்கரையூர் அப்துல் குத்தூஸ்




கட்டியணைத்துக்கொள்ள
மட்டுமல்ல!
கஷ்டப்படுகையில்
கண்ணீர் விடவும்.

■ அநுராதபுரம் சயனி

## மரணம்

காலச் சக்கரத்தின்
கரங்களில்
கைதியாக்கப்பட்டுள்ள
எங்களை சாவு
இறுகப் பற்றி
அணைத்திருக்கிறது.
எங்களுக்குத் தெரியும்
மரணம் மட்டுமே
உரிமை மாற்றம்
செய்யமுடியாத
ஒரே ஒரு சொத்து
பிறப்பில் உடன்பாடாகி
இறுதி வரை எங்களுடனேயே
நிச்சயமாய்- நாமும்
கட்டியணைக்கின்றோம் சாவை
கலப்பட உலகத்தின்
கால்களுக்குள் மிதி படாமல்
கரை சேரும்
கடைசி ஆயுதமாய்.
மரணத்தின் விலை
வாசல் காரணம்
காரியம், நோக்கம் எதுவுமே
புரியாத நவீனக் கலை
தெருவில் தோயும் குருதி
வல்லூறுகளால்
கிழிக்கப்படும் உடலென
வாலிபங்களின் வாழ்க்கை
ஓர் குறைப்பிரசவம்
இதனால் தான்
நாங்கள் மரணத்தை நோக்கி
பயணிக்கின்றோம்- எம்
இலட்சியப் பயணத்தில்
மரணம்
எம்மிடம் தோற்கட்டும்.

■ ஆனந்த வள்ளி

## அலை ஓசை

உப்புக் காற்றில்
இரத்தவாடை வீசுகிறது.......

வலைகளை
வீசிவிட்டு
கரைதனில்
காத்திருப்போம்

வள்ளம் சுமந்து வரும்
மீனை அள்ளி
உள்ளம்மகிழ....

அலை அடித்து
கரை ஒதுங்கும்
கதிரிப் பாசியாய்....
கரை ஒதுங்குவது
மீன்கள் அல்ல
மனித சடலங்கள்......!

■ கனொட்டன் எஸ்.ஜெகன்

## ஏன்?

என்
விழிச் சாலையினூடு
சென்று

நீ
குதித்தது- என்
இதயக் குளத்தில் தான்

அப்படி இருந்தும்
ஏன் தளம்பி தளம்பி
வடிகிறது என்
கண் குளம்

■ ஒலுவிலூர் அழுபக்கர் ஏ.ஹுஸைன்

## கலைவளம் காத்திடும் கலைமாதே



நல்லியல் நூல்களில் நயம் மிகு பாக்களில்
பல்லியம் ஓவியம் பல்கலை துறைகளில்
நிலையாக நித்தியம் நனிதுறையும் நல்லாளை
கலையின் திருவுருவாய் கரங்கூப்பி பரவிடுவோம்.

வெண்கமல மலர்மீது வீற்றிருக்கும் வித்தகியே
பண்மிளிர் வீணாநாதம் பரப்பிடும் பராபரியே
கண்போல் கலைவளம் காத்திடும் கலைமாதே
எண்ணிய கலைகளில் ஏற்றமுற வைத்திடுவாய்.

கல்வியின் அதிபதியாய் கலைகளின் தேவியாய்
நல்லடியார் மனதில் நாளும் ஒளிபரப்பி
கல்விநலம் செழித்து கலைவாழ்வு சிறந்திட
நல்லருள் நல்கி நற்றுணை புரிந்திடுவாய்.

■ யாழ்ப்பாணம் தே. சுகிர்தாகேந்திரா

## ஏலே சாமி என்ன செய்ற ...

மழையையும் சகிச்சிக்கிட்டோம்...
வெயிலயும் பொறுத்துக்கிட்டோம்...
யாரு செய்த பாவமோ
மலயகத்தில பொறந்துபுட்டோம்!

ஓடியாடி ஓழிக்கிறோம்
கால் கடுக்க கொழுந்தப் பறிக்கிறோம்
களைப்பு தீர வீடு செல்கிறோம்.... ஐயோ!
மாவில்ல, மண்ணெண்ணையுமில்லன்னு
அறிஞ்சு நோகுறோம்
பசியில நாங்க சாகுறோம்....
மனப்புழுக்கத்தால் வெந்து வேகிறோம்!
தருகிற சம்பளத்தில பெரியையா பாதிய
பேஷா புடுங்குறாக! மீதிய மனமின்றி
குடுத்துபுட்டு
எம்மளயே ஏசி வெரட்டுறாக!
பணத்த கையில திணித்து சாமான்
வாங்க அனுப்புனா- வெறுங்கையாய்
மவன் வந்து நின்னு
காசு பத்தலேப்பா என்கிறான்!!
வெலய நல்லா கூட்டிப்புட்டு
மவராசன் மாளிகையில் தூங்குறான்!
தன் பாட்டுக்கு மன்னன் போலே வலம் வர்ரான்
க்ழுத்தில துண்டொன்று போட்டுக்கிட்டு!
கடய தொறந்தே வெச்சிட்டு- மொதலாளியும்
சேர்ந்து ஏங்குகிறான்
மக்கள் கையிலே பணமில்ல
மாவும்சீனியும் விற்கல்ல...
மலயின் ஒசரத்தில் வெலவாசி
மஹிந்தா ஒனக்கிது வெளங்கலயா?
புண்ணாக்கு நாட்டில- இனி
புள்ளைங்க எதிர்காலம் இருட்டில....
நாம போயிருவோம்யா காட்டுக்கு -அதுகள்
அல்லவோ வந்துடும் நடு ரோட்டுக்கு!
உள்ளம் பத்தி எரியுதடா....
உதிரம் அதில வழியுதடா...
எவனும் எமக்குத் தொணையில்ல
ஏலே சாமி என்ன செய்ற?!

■ திகவாவ எச்.எப்.ரிஸ்னா 'கவிநிலா'

## திரும்பிப் பார்



உன்னை நினைத்து
உருக்குலைந்த என்னுளத்தை
ஒரு முறை திரும்பிப் பார்.
உனக்காக அழுது சிவந்து போன
என் விழிகளை
ஒரு முறை திரும்பிப்பார்.
உன் பெயரை எழுதி
உணர்வற்றுப்போன -என்
விரல்களை ஒரு முறை திரும்பிப்பார்.

உனக்காக வாழ்ந்து உனக்காக
சாகத்துடிக்கும்- என் உயிரை
ஒரு முறை திரும்பிப்பார்.


■ மா. சிவசோதி யாழ்.பல்கலைக்கழகம்

# உணர்வுகள்

ஏழநிலா 30

## சாகித்திய விருது பெற்ற கவிஞன்! சாதனையை புரிந்தவனோ இளைஞன்!

■ கவிஞர் துறையூரான் அஸாறுதீன்



'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்பர். அடக்கம் இரண்டு வகைப்படும். தாம் அறிஞர்கள் என்ற பித்தத்தில் அடங்காமல் நடந்து, பிறரை வார்த்தை வாள்களால் அடக்கி; தமக்கு வாலாட்டாதவர்களை வாழ்வில் எழும்ப முடியாதவாறு 'அடக்கம்' செய்பவர்கள் ஒரு வகை; அடக்கமாக நடந்து அகங்காரத்தை அடக்கி, பிறரின் அன்புக்கு அடங்கி, அகத்துக்குள் அடக்கப்படுவர்கள் மற்றொரு வகை. இதில் இரண்டாமவராக தென்படும் கவிஞர் அஸாறுதீன் 'பணியுமாம் என்றும் பெருமை', 'பெருக்கத்து வேண்டும் பணிதல்' என்ற வள்ளுவனின் வாக்கை வாழ வைக்கும் விரல் விட்டு எண்ணக் கூடிய படைப்பாளிகளின் வரிசையில் தம் பெயரையும் பதிப்பித்துள்ளார்.

ஆரம்பத்தில் காகம் கூடக் கணக் கில் எடுக்காத சில 'பெட்டைக் கழுதைகள்' சாகித்திய விருது பெற்றோம் என்ற இறுமாப்பில் கொட்டமடிக்கின்றன. கொம்பு முளைத்து முட்டித் திரிகின்றன. சக படைப்பாளிகளிடமும் கூட தலை விரிகோலமாய் நின்று தலைக்கனத்தோடு தாண் டவமாடுகின்றன. இத்தகைய மூக்காண்டிக ளுக்கு மூத்த படைப்பாளிகள் முட்டாள்களாய் தெரிவதோடு இளம் படைப்பாளிகள் என்றால் இளக்காரமாய் தென்படுகின்றனர். தாங்கள் இலக்கிய உலகத்துக்குள் பிறக்கும்போதே பட்டங்களோடும், விருதுகளோடும் பிறந்த வர்கள் என்ற எண்ணத்தோடு எக்காளமிடும் அந் நார்களில் இருந்து வேறுபட்ட, இளம் கவிஞர் அஸாறுதீன் 'பதக்கடச் சாக்கு' என்ற தனது கன்னிக் கவிதைத் தொகுப்பு மூலம் இலக்கிய உலகுக்கு அறிமுகமாகி, அந்நூலுக்காக 2007ஆம் ஆண்டுக்கான அரச சாகித்திய மண்டல விருதை தட்டிக் கொண்டவர்.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், ஆதம் லெவ்வை முஹம்மட் சலீம் -இஸ்மாலெவ்வை சித்திஹபீறா தம்பதியினருக்கு 1986-05-27 இல் பிறந்தவர். மூன்று வருடங்களாக கவிதைத் துறையில் ஈடுபட்டுவரும் இவரின் எந்தக் கவிதையும் தேசிய பத்திரிகைகள் எதிலும் பிரசுரமானதில்லை. எனினும், இவரது முதல் நூல் தேசிய விருது பெற்றது குறிப்பிடத்தக்கது. தென்கிழக்குப் பல்கலைக்கழக அரசியல் விசேட துறை மாணவராக இருக்கும் இவர் அதே பல்கலைக்கழகத்தின் தமிழ்ச் சங்கத் தலைவராகவும், அரசியல் விஞ்ஞான சங்கத்தின் பத்திராதிபராகவும், 'களவெட்டி' இலக்கிய வட்டத் தலைவராகவும் 'நிஷ்டை', 'களவெட்டி' சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் இருக்கின்றார். அண்மையில் நடந்து முடிந்த அம்பாறை மாவட்ட சாகித்திய விழாவில் கௌரவிக்கப்பட்ட படைப்பாளிகளுள் இவரும் ஒருவர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் இதழியல் டிப்ளோமா வையும், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மனித உரிமை நெறிகளுக்கான கற்கை நெறியையும், தெ.கி.ப. தில் உளவியல் கற்கை நெறியையும் தொடர்ந்து வருகின்றார்.

2007ஆம் ஆண்டு பெப்ரவரியில் ஜப்பானின் அரச சார்பான 'பீஸ் போர்ட்' நிறுவனத் தின் 56ஆவது சமாதானத்துக்கான கடல் மார்க்க வருடாந்த உலக சுற்றுப் பயணத்தில் உலகின் கால்வாசியைத் தரிசிக்க தெற்காசியாவில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்பது பேர் கொண்ட குழுவில் இவரும் ஒருவர். மிக விரைவில் 'நறுக்கிவிடப்பட்ட இதயத் துண் டுகள் பற்றி', 'கண்ணீருள் வாழ்வதுவாய்...' ஆகிய இரண்டு கவிதை நூல்களை வெளியிட வுள்ளார். 'பதக்கடச்சாக்கு' [அரைகுறை விளைச்சல் கொண்ட நெல் மூடை]என்ற இவரது தேசிய விருது பெற்ற நூலை தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் வெளியிட்டுள் ளது. இந்நூலில், *'செய்னம்பு நாச்சியார் மான்மியம் ஞாபகத்துக்கு வருகிறது ..'* என்று தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் ரமீஸ் அப்துல்லாஹ் அவர் களும், *'எந்த தனிக் கவிஞரதும் பாதிப்புக்குள்ளாகாத சுயத்துவத்தோடு இத்தொகுப்பு அமைந்துள்ளது'* என்று தெ.கி.ப.விரிவுரையாளர் க.இரகுபரன் அவர்களும், *'இதோ இன்னு மொரு பட்சி எம்மோடு..'* என்று கவிஞர் சோலைக்கிளியும் இந்நூல் பற்றி சிலாகித்துள்ளனர்.

ஈழத்தில் இதுவரை இருபது வயதில் யாரும் தேசிய சாகித்திய மண்டல விருது பெற்றதாகத் தெரியவில்லை. இது ஒரு வரலாற்றுச் சாதனையாகும். இது பற்றி அவரிடம் வினவிய போது *'இது எனக்குக் கிடைத்த விருதல்ல; தென்றலே கவிபாடும் தென்கிழக்கு மண்ணின் தேன் நிகர்த்த கிளைமொழிக்கு கிடைத்த விருந்தாகவும், இளைய தலைமுறைப் படைப்பாளிகளின் எழுத்து முயற்சிக்கு கிடைத்த கௌரவமாகவுமே நான் கருதுகிறேன்.'* என்று குறிப்பிட்டார். ***'என்ட செல்லக் காக்காமாரே.. இது கவிதப் புத்தகமில்ல. ஒரு காணித் துண்டு. கல்லும், முள்ளும், மலையும், குழியும், சருகும், வேருமெண்டு வெறிச்சோடிக் கெடக்குற ஒரு பறங்கித் தெடல்.பண்படுத்தப்படாத ஒரு கண்டத் துண்டம்-வெறும் திட்டி காக்கா..கொள்ளி வெட்டித் கோலங் கெட் டுக் கெடக்குற தரிசு நிலம்.அன்றி இலக்கியத் தோட்டத்துல கால் பொதச்சி,பழந்திண்டு, ருசி பாத்து, பரிசி வாங்கிப் பதக்கம் பெற வந்த ஒரு கவிதைப் பொத்தகமில்ல காக்கா...! நானொரு கவிஞனுமில்ல, காணித் துண்டுல கால் பொதச்சி, வெதச்சி, வெள்ளாம செய்யிற வயக்காறன். அதான்டப்பா கூலி வெள்ளாமக்காறன்...!***


***இந்தத் திட்டி நெலத்த வெட்டி, வெளிசாக்கிக்கொஞ்சம் கவி கட்டி வெச்சி ருக்கன். வேற வேல வெட்டி இல்லாம, நொட்டி வெச்சிருக்காருன்டு என்னக் கிட்டிப் பாத்தாலும்,திட்டிக் குமிச்சாலும், பொறுக்காம மண்டயில ரெண்டுகுட்டுப் போட் டாலும் பறவாயில்ல எனக்கிச் சந்தோசந்தான்.ஏனெண்டா, இந்த வட்டெக்க கொஞ்சம் வாயால நடந்து குருவி கொக்கு வெரசி இரிக்கிங்கண்ட உபகாரத் தாலதான் காக்கா...!இந்தத் திட்டி நெலத்தின்ட பத்த கொத்தி,பாத்தி கோரி, பயித்த, பாகல், பயறு.. கொச்சி, குரக்கன், சோளம்..கத்தரி, வெண்டி, தக்காளி.. பீக்கை, அவரை, புடலை.. எண்டுகொஞ்சம் பயிருபச்ச போட்டிருக்கன்...அதப் பிச் சிக் கறியாக்கி அல்லசு வட்டயெல்லாம் அள்ளிக்குடுத்து ரசம் பாக்க இப்ப வெள்ளக் கட்டுல பதிச்சிருக்கன். வெறும்(க)விதய நான் வெதச்சிருக்கன். இந்தப் பயிரு மொழக்கிறதும், துமுக்கிறதும், தளைக்கிறதும், செழிக்கிறதும், இல்லாமப் பட்டுப் பாழாப் போறதும் ஒங்கொங்கட கைகள்ளதான் காக்கா இரிக்கி...!***

***கன்னியின்டாக் கண்ணடிக்கிறதும், செல நேரம் குறும்பு குசும்புசெய்றதும், கலாட்டா கரெச்சல் கொடுக்குறதும் நடமுறதான்.அது போலத்தான் இந்தப் பதக்கடச் சாக்கும் ஒரு கன்னிப் படைப்புத்தான் காக்கா...!இந்தப் பதக்கடச் சாக்கு அறக்கொத்தியடிச்சி அறவாப் போன வெறும் பதர் பதக்கடயாலும், கூழங்குப்பையாலும், தூசி தும்பாலும் அடஞ்சிரிக்கா இல்ல வேற என்னண்டு அவரிக் கம்பிலேறித் தூத்திப் பாருங்க மெலாத்துப் கம்பால நல்லா வெலக்கிப் பாருங்க காக்க...!ஏதாவது நெல் மணியள் கெடக்காண்டு...! என்ட செல்லக் காக்காமாரே...ஒங்கட கத கால்லதான் வாப்பா எல்லாமிரிக்கி...'*** என்று நூலாசிரியர் தனது கவிதை நூலில் நயக்கத்தக்கவாறு உரைத்திருப்பது அவரது அடக் கத்துக்கும், ஆளுமைக்கும், கவித்துவ வீச்சுக்கும் கட்டியம் கூறுவதாய் அமைந்துள்ளது.

அடக்கமும், ஆளுமையும் மிக்க இந்த இளம் படைப்பாளியின் முகவரி:

எம்.எஸ்.எம்.அஸாறுதீன்,
110/2, ஏ.எம்.அவது வீதி, சம்மாந்துறை,
தொ.பே: 0776475398, 067 2260286.

# சிறுவர் பக்கம்




## அறிவுச் சுரங்கம்



- பிறந்த முயல் குட்டியின் எடை 49 முதல் 50 கிராம் வரை இருக்கும்.
- பிறந்து 10 நாட்களின் பின்னர்தான் முயல் குட்டிகள் கண் திறக்கும்.
- ஒரு பெண் முயல் ஆண்டுக்கு 30 முதல் 60 குட்டிகள் வரை ஈனும்.
- பிறந்த 10 வாரங்களின் பின்னர் இரண்டு கிலோவரை எடை ஏறிவிடும்.
- முயல்களின் கர்ப்ப காலம் 28- 31 நாட்கள் வரைதான்.

வானவில்லில் காணப்படும் ஏழு நிறங்களைக் குறிக்கும் எழுத்துக்களும் நிறங்களும்

1. V - Violet
2. I - Indigo
3. B - Blue
4. G - Green
5. Y - Yellow
6. O - Orange
7. R - Red

ஆர்.பிரியதர்ஷனி,தரம் 4,
ப/றொகம்டன் தமிழ் வித்தியாலயம்,
அப்புத்தளை

## சிறுவர் கைவண்ணம்



ரெபெக்கா, தரம் 7,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு- 15.



வைஷ்ணவி, தரம் 7,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு- 15.



காவ்யா, யு.கே.ஜி.,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு- 15.



சி.கபிசாந், தரம் 1,
மட்டக்குழி சென்ஜோன்ஸ் ம.வி.,
கொழும்பு-15.

## குடம் நிறையப் பொற்காசு

(சென்ற வாரத் தொடர்ச்சி)




## அழகாக நிறம் தீட்டுங்கள் 22



**தம்பி, தங்கைகளே!**
மேலே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மிகச் சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவு செய்யப்படும் படம் உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விவரங்களுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

## சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்

### அழகாக நிறம் தீட்டுங்கள் 19



### பாராட்டுப் பெறுவோர்....

1. ஜி.அஸ்கா பானுன், தரம் 4சி, கைரியா எம்.பி.எம்.வி., கொழும்பு-09.
2. சமாஷ், கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி, கொழும்பு- 15.
3. முஹமட் சிபான், 16/7, மீத்தொட்ட முல்ல, வெல்லம்பிட்டிய.
4. திலுக்ஷியா சரவணபவன், தரம் 2 பீ, இந்து மத்திய கல்லூரி, புத்தளம்.
5. எம். அக்ஷரா, தரம் 2, மத்திய மகா வித்தியாலயம், திருகோணமலை.

★பெயர் - டி.ஆர்.ஜெனிங்ஸ் டிவின்ஸ்டன் ★ தரம் 5
★பாடசாலை - கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி, முகத்துவாரம் ,கொழும்பு- 15.

# தாய்மையின்...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

புளியேப்பம் போன்ற பிரச்சினைகள் ஏற்பட இதுவே காரணம். இதிலிருந்து தப்பிக்க, உணவைக் கொஞ்சம் கொஞ்சமாக ஆனால், நிறைய முறை சாப்பிடவேண்டும்.

பித்தத்தை அதிகரிக்கும் உணவுகளைத் தவிர்க்கவும் அதிகமாகக் குனியவேண்டாம். படுக்கும்போதும், உட்காரும் போதும் தலையணையை முட்டுக் கொடுக்கவும். 'ஆண்ட்டி ஆசிட்' உபயோ கிக்கலாம். ஆனால், சோடா குடிப்பதைத் தவிர்க்கவும்.

**உமிழ்நீர் அதிகரிப்பு**

சில கர்ப்பிணிகளுக்கு உமிழ்நீர் அளவுக்கு அதிகமாக சுரந்து வாயின் ஓரத்தில் வழியக் கூடும். எனவே, வாயைச் சுத்தமாக வைத்திருக்க கவனம் செலுத்துங்கள்.

**கால்களில் நடுக்கம், வலி**

பெரும்பாலான கர்ப்பிணிகள் கால்களில் வீக்கம், நடுக்கம், வலி போன்றவற்றால் சிரமப்படுகின்றனர். 'கால்சியம்' பற்றாக் குறையே இதற்குக் காரணம். எனவே, தினமும் ஆடை நீக்கப்பட்ட பால் அல்லது ஸ்கிம்ட் மில்க் அரை லீட்டர் பருகுவதன் மூலம் இதை ஈடுகட்டலாம். அடிக்கடி கர்ப்பமாகும் பெண்களுக்கு 'வைட்டமின் டி' குறைவாலும், 'கால்சியம்' குறைவாலும் 'அஸ்டியோ மலேசியா' நோய் ஏற்படக் கூடும். இவர்கள் தேவையான அளவு 'கால்சியம்' சாப்பிடவேண்டும். சூரிய ஒளியில் வெளியில் செல்வதன் மூலம் 'வைட்டமின் - டி' யைப் பெறமுடியும்.

**தலைவலி**

இரண்டாவது டிரைமெஸ்டரில் தலைவலி ஏற்படுவது சாதாரணமானதுதான். இரத்தத்தில் குளுக்கோஸின் அளவுகுறைவது, களைப்பு, ஹோர்மோன் மாற்றம், டென்ஷன் ஆகிய காரணங்களால் தலைவலி ஏற்படுகிறது. இரத்த அழுத்தத்தையும் பரிசோதனை செய்வது நல்லது. உயர் இரத்த அழுத்தம் காரணமாகவும் தலைவலி ஏற்படலாம்.

**சிறுநீர் தொல்லை**

சிறுநீர் பையில் அழுத்தம் ஏற்படுவதால், கர்ப்பிணிகளுக்கு அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டிய சிரமம் ஏற்படுகிறது. இந்தநிலை தொடர்ந்தால் 'யூ.டி.ஐ.' எனப்படும் தொற்று நோய் ஏற்படக் காரணமாகிவிடும் என்பதால் பிறப்புறுப்பைச் சுத்தமாக வைத்துக்கொள்வது அவசியம்.

**டிரைகோமோனாஸ்**

கிருமிகளால் தோன்றும் இந்தநோய் பிறப்புறுப்பில் நுரை போன்ற கசிவை ஏற்படுத்தும். மேலும் அரிப்பு, எரிச்சல் ஆகியவற்றையும் ஏற்படுத்தும். இப்பிரச் சினை ஏற்பட்டால் மருத்துவரிடம் சிகிச்சை பெறுவது அவசியம்.

**கேண்டிடா**

பிறப்புறுப்பில் காளான் தாக்குதலால் ஏற்படக் கூடிய இந்தநோய் அரிப்பு மற்றும் எரிச்சலை ஏற்படுத்தக்கூடியது. 25சதவீத கர்ப்பிணிகளை இந்த நோய் பாதிக்க வாய்ப்புள்ளது. மருத்துவரிடம் சிகிச்சை பெறுவது அவசியம்.

**பாக்டீரியல் வெஜினாசிஸ்**

இது பிறப்புறுப்புக்குள் வசிக்கும் பக்டீரியாக்களின் தாக்குதலால் ஏற்படக்கூடியது. இதுவும் துர்நாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய நோய்தான். பாக்டீரியாக்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரிப்பதுதான் இதற்குக் காரணம்.

கர்ப்பத்தின்போது கீழ்க்கண்ட பிரச்சினைகள் ஏற்பட்டால், உடனே மருத்துவரிடம் சிகிச்சைபெற வேண்டும்.

* பிறப்புறுப்பில் இரத்தக் கசிவு, இரத்தம் கலந்த திரவக் கசிவு.
* விட்டுவிட்டு அல்லது நீடித்த தலைவலி.
* பார்வை மங்குதல்
* வயிற்றில் அதிகமான வலி.
* முகம் மற்றும் விரல்களில் வீக்கம்.
* சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல்.
* குளிர்ஜாரம்
* அடிக்கடி வாந்தி வருதல்.
* கர்ப்பசிசுவின் அசைவுகளில் திடீர்மாற்றம் போன்ற உணர்வு.

# அன்புள்ள...

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மன்றாடிக் கேட்பேன்? என் கால்களும் சோர் வடைந்தபோது நான் பயங்கரமாகக் கதறினேன்.

கடுமையான அவ்வித வேதனையோடு எனது உயிரை நான் இழந்துகொண்டிருந்தேன். உன்னை ஒருபோதும் பார்க்கவோ, உன் குரலைக் கேட்கவோ முடியாமல் போனதையிட்டு நீ என்மேல் வைத்த அன்பு இவ்வளவுதானா என்று நினைத்துப் பார்க்கிறேன். நான் உன்னுடைய கண்ணீரைத் துடைக்க நினைத்திருந்தேன். உன்னை மகிழ்ச்சியடையச் செய்ய எத்தனையோ கற்பனைகளைக் கொண்டிருந்தேன். அவையாவும் பாழாகிப்போய்விட்டன. எனது கற்பனைகளுக்கு மூடுதிரை போடப்பட்டுவிட்டது. கடுமையான வலியினாலும் கொடூரத் தன்மையினாலும் பாதிக்கப்பட்ட இவ்வேளையில் இவைகளை எண்ணி என்மனம் வேதனையடைகிறது.

நான் உனது மகளாக வரவேண்டுமென்று எல்லாவற்றையும் விட எதிர்பார்த்திருந்தேன். அத்தனையும் பயனற்றுப்போய்விட்டன. மரணவலியுடன் நான் இறந்துகொண்டிருக்கிறேன். இப்படியான ஒரு கொடூரத்தைச் செய்துவிட்டார்களே என்றுதான் நான் நினைக்கக் கூடியதாக இருக்கிறது. நான் உன்னை விரும்புகின்றேன் என்பதை நான் போவதற்கு முன்னால் உனக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், அதை நான் எப்படியான வார்த்தையில் விளங்கப்படுத்துவதென்பதுதான் எனக்குத் தெரியவில்லை.

அவைகளைச் சொல்ல எனது மூச்சு அவ்வளவுநேரம் இருக்காதுபோல் தெரிகிறது. நான் இறந்துவிட்டேன். நான் மேலெழுந்துபோவது போல் எனக்குத் தெரிகிறது. ஒரு மகத்தான தேவதூதன் மிகவும் அழகான ஓர் இடத்திற்கு என்னைத் தூக்கிக்கொண்டு செல்கின்றான். நான் இன்னும் அழுதவண்ணம் இருக்கின்றேன். ஆனால், எனது உடலிலிருந்த வலிகள் எல்லாம் என்னைவிட்டுப் போய்விட்டது.

அந்தத் தேவதூதன் ஓர் அற்புதமான இடத்திற்கு என்னை எடுத்து வந்தான். அப்போது நான் மகிழ்ச்சியாக இருந்தேன். "என்ன காரணத்துக்காக என்னைக் கொன்றார்கள்" என்று தேவதூதனிடம் நான் கேட்டேன். அவர் "கருச்சிதைவு" எனக் கூறினார். என்னை மன்னித்துக்கொள். அந்தத் துன்பத்தை எப்படி உணர்த்துவது?

'கருச்சிதைவு' என்றால் என்ன? என்பது பற்றி எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இயற்கைக்கு மாறான அந்தச் செயலுக்குத்தான் அப்படியொரு பெயர்போலும் என்று நான் யோசிக்கிறேன்.

நான் உனது சின்ன மகளாக வரவேண்டுமென்று ஆசைப்பட்டேன் என்பதை நான் இங்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் உயிர் வாழ்வதற்காக மிகவும் பிரயாசைப்பட்டேன். காலனின் சக்தி மிக வலிமையாகவிருந்ததால் அது நடைபெறவில்லை. அது எனது கைகளினதும் கால்களினதும் சக்தியை உறுஞ்சியெடுத்தது மட்டுமன்றி, என் உயிரையே எடுத்துவிட்டது.

நான் உயிர்வாழ்வதென்பது நடக்காததொன்று. நான் உன்னோடு இருக்கத்தான் நினைத்திருந்தேன். சாகவேண்டுமென்றல்ல. எனினும், அம்மா தயவு செய்து அந்த இயற்கைக்கு மாறான கருச்சிதைவை நினைத்துப் பாருங்கள்.

அம்மா, நர்ன் உங்களை நேசிப்பதோடு இப்படியான ஒரு பெருங்கஷ்டத்தைத் தந்ததற்கு மன வேதனைப்படுகிறேன். நீங்கள் நலமாக இருக்க வேண்டும்.

*அன்புள்ள உங்கள் குழந்தை மகள்.*

**(கருச்சிதைவுக்குள்ளான சிசு ஒன்றின் உள்ளக்குமுறல் இது)**

# கிழக்கில் விடு...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

விரட்டப்பட்டு விட்டதாகக் கூறப்பட்ட விடுதலைப்புலிகள் தமது அணிகளை நன்கு தயார்ப்படுத்திக் கொண்டு படையினருக்கு எதிரான தாக்குதல்களை மேற்கொள்ளத் தொடங்கியிருப்பது அரசாங்கத்துக்கும் படைத் தளபதிகளுக்கும் அச்சத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

அண்மையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஓர் அதிரடி மாற்றமாக பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியாக இருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமால் லெவ்கேக்கு பதிலாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஹிந்த பால சூரியவை நியமித்தார். அத்துடன் விசேட அதிரடிப்படையை பொலிஸ்மா அதிபரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நியமனம் வழங்கப்பட்ட மறுநாளே கிழக்கிற்குச் சென்று பாதுகாப்பு ஒழுங்குகளைச் சீர்படுத்தவும் அவர் பணிக்கப்பட்டார்.

அதுமட்டுமன்றி இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகாவும் அண்மையில் குடும்பிமலை மற்றும் திருகோணமலைப் பகுதிகளுக்குச் சென்று பாதுகாப்பு நிலைமைகளை மறு ஆய்வு செய்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கில் புலிகளின் செயற்பாடுகள் அதிகமாகிவிட்டால் அதைக்கட்டுப்படுத்துவது அவ்வளவு சுலபமல்ல என்பது அரச படைத் தலைமைக்குத்-தெரியும். எனவே, விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளை, தாக்குதல் செயற்பாடுகளை, தாக்குதல் திட்டங்களை இப்போதே கட்டுப்படுத்திவிடும் திட்டத்துடன் படைச்செயற்பாடுகளிலும் அதிரடி மாற்றங்கள் நிகழ்த் தப்பட்டுள்ளன. வன்னிப் பெருநிலப் பரப்பின் மீது பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தயாரிப்புக்களில் அரசாங்கம் தீவிரமாக இறங்கியிருக்கும் நிலையில் கிழக்கில் புலிகளின் செயற்பாடுகள் அதிகரிப்பது அரசுக்கு கவலை தரும் விடயமாகும். ஏனெனில், அது படைச் செறிவைப் பரவலாக்கம் செய்வதற்கு நிர்ப்பந்திக்கும். இல்லையேல் கிழக்கில் படைக் கட்டுப்பாட்டுப் பகுதிகளைச் சுருக்கிக்கொள்ளும் நிலைக்குத் தள்ளிவிடும். எனவேதான், அரசாங்கம் தளபதிகளை அனுப்பியும் மாற்றியும் கிழக்கின் நிலைப்பாடுகளில் பலமான ஆதிக் கத்தை நிலை நிறுத்திக்கொள்வதில் முனைகிறது. ஆனால், இந்த உத்திகள் எவ்வளவு தூரம் சாத்தியமாகலாம் என்பதை வன்னிப் போரே தீர்மானிக்கப்போகிறது.

# ராசி பலன்

**29-10-2007 முதல் 04-11-2007**

பொ. சந்திரலிங்கம்

## மேடம்

**அஸ்வினி, பரணி, கார்த்திகை1.**

காரியசித்தியுண்டு. பணம்இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பார். சிறு தூரப்பிரயாணம் அமையும். நல்ல இருப்பிடம் அமை ய லாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். வழக்குகளில்வெற்றி வாய்ப்புண்டு. திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளுக்கு வாய்ப்புண்டு. தாய் நலம். தந்தை நலமில்லை. அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## இடபம்

**கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம்1, 2**

காரிய சித்தியுண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உற வினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நல முண்டு. பகைவரை வெல்லலாம். திருமண வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகளுக்கு வாய்ப்புண்டு. அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர்.

## மிதுனம்

**மிருகசீரிடம்3,4 திருவாதிரை, புனர்பூசம்1, 2, 3.**

காரியசித்தியுண்டு. சிறுபிரயாணம் அமையும். பணம் இருக்கும். உறவினர், அய லவர் உதவுவர். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஓரளவு அக்கறை காட்டுவர். உடல்நிலை பாதிக்கலாம். பகைவரால் தொல்லை யுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளில் இலாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக உணர்வு மேலோங்கும் தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். நண்பர்களரல் பிரச்சினை வர வாய்ப்புண்டு. எதிர் பார்ப்புகள் நிறைவேறாது.

## கடகம்

**புனர் பூசம் 4 , பூசம், ஆயிலியம்**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. புதிய கொள்வனவை தவிர்த்தல் நல்லது. அதிர்ஷ்டம் இருக்கும். தெய்வீகத்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறை வேறும்.

## சிம்மம்

**மகம், பூரம், உத்தராடம் 1**

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலம் . நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை யுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் அதிகரிக்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறும். நண்பர்கள் உதவுவர்.

## கன்னி

**உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2**

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவலாம். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர்நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். முதலிடும் போது அவதானம் வேண்டும். அதிர்ஷ்டம் உண்டு. பகை விலகும். தெய்வீக நாட்டம் இருக்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர்.

## துலாம்

**சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1, 2, 3**

காரியத்தடைவிலகும். பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் அமையும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக பக்தி குறையலாம். தொழில்துறை முன்னே றும். புதியதொழில் வாய்ப்புகள் உருவாகும். எதிர்பார்ப்பு கள் நிறை வேறாது. நண்பர்கள் விலகி இருப்பர்.

## விருச்சிகம்

**விசாகம் 4, அனுசம, கேட்டை**

காரியத்தடை நீடிக்கும். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீட்டில் திருத்த வேலைகள் இடம் பெறலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. எதிர்பாராத பணவருவாய் அல்லது பழைய நிலமை வர வாய்ப்புண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக பக்தி வளரும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.

## தனுசு

**மூலம், பூராடம், உத்தராடம் 1**

கரரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. புணப் பற்றாக்குறை இருக்கும். உறவினர், அயலவர் உதவி செய்வார். தாய் நலமில்லை. தந்தை நலம். வீட்டில் அமைதி குறையலாம். மாரணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் உண்டு. பகை விலகும். வழக்குகளில் வெற்றிகிட்டும். திருமணவாய்ப்பு உண்டு. புதிய முத லீடுகள் அமைய வாய்ப்புண்டு. அதிர்ஷ் டம் உண்டு. தெய்வீக பக்தி இருக்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறும். நண்பர்கள் உதவி செய்வர்.

## மகரம்

**உத்தராடம்2,3,4 திருவோணம், அவிட்டம்1,2**

காரியத்தடை இருக்கும். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வி யில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் வழங்கலாம். பிறர் பொருள் வர வாய்ப்புண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய் வீக நாட்டம் அதிகரிக்கும். தொழில்துறை முன் னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர்.

## கும்பம்

**அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3**

காரியத்தடை இருக்கும். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விருப்புவர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் திருத்த வேலை இடம் பெறலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். புதிய முதலீடுகள் அமையும். பழைய பாக்கி வசூலாகும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் அதிகரிக் கும். தொழில்துறை ஆமை வேகத்தில் முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை வர வாய்ப்பு உண்டு.

## மீனம்

**பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. முதலீடு சம்பந்தமாக அவதானம் வேண்டும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகஉணர்வு குறையலாம். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறாது. நண்பர்கள் உதவி செய்வர்.

தமிழீழ விடுதலைக்காக - விடிவுக்காக - தமிழ்த்தேச எழுச்சிக்காக- பாடுபட்ட - குருதிசிந்திய ஒரு வீரனை - அரசியல்அறிஞனை - தமிழ்தேசம் இழந்துநிற்கின்றது.
சிங்கள தேசத்தின் ஆதிக்கத்திலிருந்து தமிழ்மண்ணை மீட்க தலைவர் பிரபாவுக்கு உறுதுணையாக - ஆலோசகனாக - உற்ற சகோதரனாக - வழிநடத்தியவர் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.
ஸ்ரீலங்கா அரசின் கொடூரமான குண்டுவீச்சினால் பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் மற்றும் லெப்டினன் கேணல் அன்புமணி (அலெக்ஸ்), மேஜர் மிகுதன், கப்டன் நேதாஜி, லெப்டினன் ஆட்சி வேல், லெப்டினன் மாவைக் குமரன் ஆகிய ஆறு வேங்கைகளை தமிழ்த்தேசம் இழந்து தவிக்கின்றது-துடிக்கின்றது.

1967 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 29 ஆம் திகதி மட்டுவிலில் பிறந்த தமிழ்ச்செல்வன், பரமு தமிழ்ச்செல்வன் என்ற இயற்பெயரைக் கொண்டவர். 1984 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்ட தமிழ்ச்செல்வன் தலைவரினால் தினேஸ் என்று நாமம் சூட்டப்பட்டார்.



# தமிழ்செல்வனின் உயிர்ப்பறிப்பு! சமாதானத்துக்கு உலைவைப்பு..!





இந்தியாவின் ஐந்தாவது பயிற்சிப் பாசறையில்இராணுவப் பயிற்சி பெற்று சிறந்த போர்வீரன் என்பதனை பயிற்சிகளின் மூலம் வெளிக்காட்டியவர்.
1987 இல் தென்மராட்சிக் கோட்டத் தளபதியாக தலைவர் பிரபாவினால் நியமிக்கப்பட்ட தமிழ்ச்செல்வன், தனது ஆளுமைத்திறத்தாலும் பேச்சு வல்லமையாலும் மக்கள் மனத்தை மிகவும் கவர்ந்து தன்வசம் ஆக்கிக்கொண்டவர்.
அக்காலப்பகுதியில் இந்திய இராணுவத்துடனான பல மோதல்களில் ஈடுபட்டு சிறந்த இராணுவவீரன் என்பதை நிரூபித்துக்காட்டியவர்.
1991 இல் யாழ்.மாவட்டத் தளபதியான பின்னர் 1993 இல் அரசியல்துறைப் பொறுப்பாளரானார். தச்சன்தோப்பு முகாம் தாக்குதல் ஆகாயக்கடல் வெளிச்சமர் என பல சமர்களில் வெற்றிகண்டவர்.

1993 இல் பூநகரித்தளம் மீதான தாக்குதலில் காயமடைந்தார். அதன் பின்னராக போராட்டங் களை தவிர்த்துத் தன்னை முழு அர சியலில் இணைத்துக் கொண் டார். இயக்கத்தில் இணையும் போது ஓர் இராணுவ வீரனாக இணைந்த தமிழ்ச் செல்வன், அரசியல்துறைத் தலைவராக, யாழ்.மாவட்ட அரசியல்துறைத் தலைவ ராக, தமிழீழ அரசியல்துறை தலைவராக பதவியுயர்வு பெற்று, அதன்பின்னராக சமாதானப் பேச்சுக்களுக்கான தலைமை யினை வகித்து தமிழீழ விடுதலைக்காக பல்வேறுபட்ட சமாதானப்பேச்சுகளில் பங்கெடுத்து ஈழ விடுதலைக்காக பாடுபட்டவர்.
நோர்வே சமாதான அனுசரணையாளர்



அபிமன்யு



பங்கெடுத்த பல பேச்சுவார்த்தை களில் இவரது குழு பங்கெடுத்து பேச்சுகளில் ஈடுபட்டது.
தமிழ்ச்செல்வனின் இழப்பு தமிழர்க்கான இழப்பு அல்ல, தமிழுக்கான இழப்பு என்பதை யாரும் மறுதலித்து விடமுடியாது. நலிவடைந்துள்ள சமாதானத்தை இன்னும் பாதாளக்குழிக்குள் தள்ளும் செயலாகவே தமிழ்ச்செல்வனது மரணம் அமைந்துள்ளது.
தலைவர் பிரபா, பொட்டுஅம்மான் ஆகியோருக்கு அடுத்தபடியாக மூன்றாவது ஸ்தானத்தில் மதிக்கப்பட்டவர் தமிழ்ச்செல்வன் அவர்கள்.

அவரது, இழப்பு தமிழீழ மக்களை மட்டுமன்றி தமிழ்பேசும் உலகையே மீளாத்துயரில் ஆழ்த்தியுள்ளது.


UNIGLOBE ENTERPRISES
Specialist in Blenders & Mixers Spare Parts, Domestic & Industrial Sewing Machine Spare Parts, Gas Cooker Spare Parts & Pressure Cooker Spare Parts, Bicycle Spare Parts, Mobile Accessories
No: 90, Galle Road, Cololmbo- 06. (Near Station Road)
Tel: 011-4935744/ 0722- 431521



UNIGLOBE ENTERPRISES
Specialist in Blenders & Mixers Spare Parts, Domestic & Industrial Sewing Machine Spare Parts, Gas Cooker Spare Parts & Pressure Cooker Spare Parts, Bicycle Spare Parts, Mobile Accessories
No: 90, Galle Road, Cololmbo- 06. (Near Station Road)
Tel: 011-4935744/ 0722- 431521